
GOKULAM ◆ ஆகஸ்ட் '95 ◆ ரூ. 5.00

கோகுலம்



INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS



JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ______________________

ADDRESS ______________________


____

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.



CHACHA CHAUDHARY RAAKA'S GAME


Barbarous RAAKA has returned. He has drunk the miraculous potion which has made the dreaded dacoit immortal. The brute stands as an upheaval task before sharp brain CHACHA CHAUDHARY and muscular SABU.

DIAMOND COMICS GIFT BOX

Chacha Chaudhary Gift Box 6 Comics + 10 Stickers	48.00
Pinki Gift Box 6 Comics + 10 Stickers	48.00
Billoo Gift Box 6 Comics + 10 Stickers	48.00
Phantom Gift Box 4 Comics + 10 Stickers	60.00

DIAMOND COMICS PVT. LTD.
X-30 OKHLA INDUSTRIAL AREA,
PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore). **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut. •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

1995 ஆகஸ்ட் மாத இதழ்
மலர் : 14 இதழ் : 7

அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

வன்முறையை விட அன்பு வழிக்கே அதிக வலிமை உண்டு என்பதை உலகத்திற்கு உணர்த்தி கோடிக் கணக்கான மக்களைத் தாமாகவே தியாகம் செய்ய வைத்து சுதந்திரத்தைப் பெற்றது நம்நாடு. இன்று நம் நாட்டிலேயேகூட வன்முறை வேகமாகப் பரவி வருகிறது.

இந்த வன்முறையாளர்களும் கூட மனிதர்கள் தானே? இவர்கள் மட்டும் ஏன் இப்படி மாறினார்கள்? பிள்ளைப் பருவத்தில் அன்பையும், அரவணைப்பையும், பாசத்தையும் அறியாது வளர்ந்து விட்ட விரக்தியாளர்களே இன்று வன்முறையைக் கைவிலேந்தி கலவரம் விளைவிக்கிறார்கள் என்கிறது ஓர் ஓய்வு.

அதாவது, அன்பை அறியாத மனங்களே இப்படி இரும்பு நெஞ்சங்களாகி விடுகின்றனவாம்! அன்பு, பாசம், நட்பு போன்றவை உன்னதமான பிணைப்புகள் என்பதைப் புத்தகங்களில் மட்டுமே படிக்கிறோம். மனத்தால் உணர்வது இல்லை.

அறிமுகமான நாய்க்குட்டி வாலை ஆட்டுவதைப் பாருங்கள். நீங்கள் உட்கார்ந்தால் மடிமீது தாவி ஏறி அமர்ந்து வாலைத் தேய்த்து செல்லமாக முனகுகிறதே பூனைக் குட்டி, அது ஏன் அப்படிச் செய்கிறது? என் அன்பைக் காட்டி விட்டேன். பதிலுக்கு உன் அன்பைத்தா என்றுதான் கேட்கின்றன இவை.

பாடம் மட்டுமே முக்கியம் அல்ல. நமக்கு நல்ல உறவினர்கள், நண்பர்கள் வேண்டும். இவர்களிடம் நாம் அன்பு காட்ட வேண்டும். அவர்களும் பதிலுக்கு அன்பு பாராட்ட வேண்டும். நமக்கு அவர்களும் அவர்களுக்கு நாமும் விட்டுத் தந்து மகிழ வேண்டும். மனித வாழ்வின் அடிப்படைப் பண்புகள் இவை. வேறுபாடுகளுக்காக விலகி விடாது, விட்டுக் கொடுத்து வாழ்வதுதான் மனித வாழ்க்கையின் இரகசியம். இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன், நமது முன்னோர்கள் முப்பது நாற்பது பேர் கொண்ட கூட்டுக் குடும்பமாக வாழ்ந்ததைக் கேட்டு அதிசயிக்கிறோமே. இதை எப்படி அவர்களால் சாதிக்க முடிந்திருக்கிறது? விட்டுக் கொடுக்கும் குணத்தினால்தான்.

அணுகுண்டுத் தாக்குதல் நடத்தி அழிக்கும் அளவுக்குப் பகைமை பாராட்டிய வல்லரசுகள், இன்று நெருங்கி வந்து கைகுலுக்கி பேச்சு வார்த்தை நடத்திப் பகைமைகளைக் களையப் பார்க்கின்றனவே. இதற்கு என்ன பொருள்? விட்டுக் கொடுப்பதைப் பற்றிய பேச்சுவார்த்தைதானே இது? வல்லரசுகளே இப்படி மாறிவருகையில், நாமும் மாறி விட்டுக் கொடுத்து நட்பைப் பலப்படுத்திக் கொள்ள முயலக் கூடாதா? விட்டுக் கொடுத்து வாழத் தெரிந்து விட்டால், விரக்திக்கோ, ஏமாற்றத்திற்கோ இவை காரணமாக எழும் வன்முறைத் தாக்குதலுக் இடமே இருக்காது. மதம், மொழி, இனம் எல்லாவற்றிற்கும் இது பொருந்தும்.

இந்த சுதந்திரத் திருநாளில் வன்முறையில் நம்பிக்கை வைக்காத நல்ல குடிமக்களாக வாழ சூளுரை எடுப்போம். இதற்குத் தேவையான அன்பு, பாசம், நட்பு ஆகிய உணர்வுகளை உருவாக்கிக் கொண்டு, விட்டுக் கொடுத்து வாழ்வோம், உயர்வோம்.

எல்லோருக்கும் சுதந்திர தின வாழ்த்துகள்.

அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

கோகுலம்
1995 ஆகஸ்ட்
இந்த இதழில்...

* புவனா தேடிய புதையல்! - பக்கம் 33



* எறும்பு தின்னிக்கு எத்தனை பற்கள் - பக்கம் 17




* தூக்கம் (அறிவியல் சித்திரமடல்) - பக்கம் 87



நம்பிக்கை துரோகம் (படக்கதை) - பக்கம் 77





தந்தியோ தந்தி!

ஏராளமான விடுகதை விரும்பிகளின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வாண்டு மார்ச் மாத கோகுலம் இதழில் தந்தியைப் பற்றிய விடுகதைகளை எழுதி அனுப்பும்படி வாசகர்களைக் கேட்டுக் கொண்டிருந்தோம். ஏராளமானோர் எழுதி அனுப்பியிருந்தார்கள். அவைகளுள் சிறப்பாக அமைந்துள்ள ஒன்பது விடுகதைகளை இங்கே தந்துள்ளோம். அடுத்து கால்குலேட்டர் பற்றிய விடுகதைகளை வாசகர்களிடம் இருந்து வரவேற்கிறோம் :

கூறிடுவான்!


வேகமாக வந்திடுவான்;
வந்து செய்தி தந்திடுவான்!
யாரவன்?

- ஆர். சீனிவாசன்,
மயிலாடுதுறை - 1.

கட்டுக்கடா இசை!

கட்டுக்கடா என் னிசை!
கண்டறிய தனித்திறமை!
நான் யார்?

- ஏ.ஆர். கதிர்வேலன்,
கோணபேட்.



பார் புகழ் நண்பன்!

இன்ப துன்பச்
செய்திகள்
இரண்டும் ஒன்றாய்
ஏந்தியே
அன்புடனே சுமந்து வரும்
பார் புகழும் நண்பனவன்.
யாரவன்?

- வாண்டுதாசன், ஆரணி.

ஊர்க் குருவி!

நல்ல செய்தி ஆயினும்
நளின மாகச் சொல்லிடும்
துக்கச் செய்தி ஆயினும்
துணிந்து வந்து
சொல்லிடும்
ஊருவிட்டு ஊருபோகும்
ஊர்க் குருவி யாருங்க?

- எஸ். திருவாசகம்,
தென்னமாரி.

கட்டணம் கேட்பான்!


ஆபத்துக்கு ஓடுவான்
அளவுக் கட்டணம்
கேட்பான்!
அவன் யார்?

- பா. ஜெயக்குமார்,
வந்தவாசி.

மந்திரம் அறியாப் பண்பாளன்!

இறந்த செய்தி
சுமந்திடுவான்
இன்பச் செய்தி
ஏற்றிடுவான்.

பயப்படமாட்டேன்!



பாலு அமர்ந்து பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தான். ஓர் குளவி அவனைச் சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரமிட்டது. குளவி எங்கே தன்னைக் கொட்டி விடுமோ என்று பாலு மிரண்டான்; ஒதுங்கினான்.

இது குளவிக்குக் கர்வத்தை உண்டாக்கியது. "ஆகா! என்னைக் கண்டு மனிதர்கள் கூடப் பயப்படுகிறார்கள். நானல்லவோ பெரிய வீரன்! என்று பெருமைப்பட்டுக் கொண்டு மீண்டும் பாலுவைச் சுற்றி ரீங்காரமிட்டது.

குளவியின் இத்தாப்புப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த எறும்பு ஒன்று, "குளவியாரே, நீர் ஏன் அந்தச் சிறுவனையே சுற்றிச் சுற்றி வருகிறீர்கள்? மனிதர்கள் ஆபத்தானவர்கள். எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்" என்று கூறியது.

குளவியோ, "அற்ப எறும்பே! மனிதனையே பயமுறுத்தும் எனக்கு உன் அறிவுரை தேவையில்லை. நீ வேண்டுமானால் மனிதனுக்குப் பயப்படலாம்! ஆனால் நான் பயப்பட மாட்டேன். என்னைக் கண்டு நடுங்கும் இந்தச் சிறுவனா ஆபத்தானவன்?" என்று ஏளனம் செய்தது.

எறும்பு மீண்டும் எச்சரித்தது. "குளவியாரே, சிறுவன் உன்னைக் கண்டு நடுங்குவது உண்மைதான். ஆனால், அவன் எப்போதும் அப்படியே இருக்க மாட்டான். அவன் பக்கம் போகாதீர்!"


ஆனால் குளவியோ, "இந்தப் பொடியனுக்கா பயப்படுவது? இப்போது அவனை என்ன செய்கிறேன் பார்" என்று பாலுவைச் சுற்றி வந்து துரத்தித் துரத்தி ரீங்காரமிட்டது. கொட்டுவது போல சுற்றி வந்து பயமுறுத்தியது.

பாலு எரிச்சல் அடைந்தான். "குளவியே, இன்று உனக்குப் போதாத காலம் தான். வீணாகச் சாகப் போகிறாய்!" என்று அருகிலிருந்த அட்டையை எடுத்து, குளவி பறந்த போது அதன் மீது அடித்தான்.

குளவி அந்த வேகத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் கீழே விழுந்து தன் முடிவைத் தேடிக் கொண்டது அற்பர்களின் வாழ்வு அவசரத்தில்தான் முடியும் என்று எறும்பு சொன்னது.

- எஸ். சுரேஷ்பாபு

திறந்த மனதுடன்
எதனையுமே
மறுக்கா அருமை
நண்பனவன்
மந்திரம் அறியாப்
பண்பாளன்.
அவன் யார்?
- பா. சரவணகுமரன்,
திருக்கண்ணங்குடி.



திடுக்கிட வைப்பான்!

திடீர் என வருவான் பாரு;
திடுக்கிட வைப்பான் கேளு.
அவன் யார்?
- எஸ். கே. சரவணன்,
மயிலாடுதுறை.

அவசரத் தூதுவன்!

சுருக்கமான
ஆங்கிலக்காரன்
சுறுசுறுப்பின் சொந்தக்
காரன்
அவசரகாலத்
தூதுவன்நான்
அடியேன் யாரென
அறிவீரோ?
- திருப்புனவாசல்
சுப. சிவராஜா.

களைப்பே இல்லாப் பணியாளன்!

உலகமெங்கும்
சென்றிடுவான்;
உடனே சேதி
சொல்லிடுவான்;
களைப்பே இல்லாப்
பணியாளன்;
காசுக்குப் பணியும்
உழைப்பாளன்!
அவன் யார்?
- கே. பி. கணேஷ்,
சென்னை - 38.

எங்கள் ஊரில் நடந்தது!



சேரத்தேய்!

பாபுவும் அவனது அப்பாவும் மோட்டார் பம்ப்பில் குளித்துக் கொண்டிருந்தனர். பாபுவின் அப்பா அவனைப் பார்த்து முதுகைத் தேய்த்து விடச் சொன்னார். பாபுவும் தேய்த்து விட்டான். 'என்னடா தேய்க்கறே? கைகளைச் சேரப்போட்டுத் தேய்'' என்றார் அப்பா. புரியாத பாபு கீழே கிடந்த சேற்றைக் கைகளில் அள்ளி எடுத்துத் தேய்த்து விட்டானே பார்க்கலாம்!

அனந்தபுரம்,

கே. ஜெகன்நாதன்



பச்சை காரட்

அம்மா காரட் வாங்கி வந்திருந்தார். தம்பியிடம் "பச்சைக் காரட் சாப்பிட்டால் நல்லது'' என்றேன். சிறிது நேரம் பொறுத்து வந்து பார்த்தால் தம்பி காரட்டுகளைக் கொட்டி எதையோ தேடிக் கொண்டிருந்தான். என்னவென்று கேட்டேன். "பச்சைக் காரட்டைக் காணவில்லையே! எல்லாம் மஞ்சள் காரெட்டாக இருக்கே?" என்றானே பார்க்கலாம். ஒரே சிரிப்புதான்.

சேலம்,

கே.சி. கோகுலன்

செல் போட்டால் எரியும்?

எங்கள் ஆயா மிகவும் நல்லவர். ஒரு சமயம் என்னிடம் "ஏன் பேட்டரி லைட் எரியலே?" என்று கேட்டார்.

அதற்கு "செல் இல்லை. செல் போட்டால் எரியும்" என்று கூறினேன். பிறகு நான் அதை மறந்தே விட்டேன். மறுநாள் ஆயா, "ஏன் தம்பி? செல் போட்டேனே! இன்னும் எரியலையே? நிறையத்தான் செல் போட்டேனே?" என்று கேட்டார். குழப்பத்துடன் டார்ச் லைட்டைக் கழற்றிப் பார்த்தேன். அதில் நிறைய செல்லுப் பூச்சிகள் இருந்தன. சிரித்து விட்டேன். எதற்காகச் சிரிக்கிறேன் என்பது புரியாமல் ஆயா விழித்துப் பார்த்தார்.

அனந்தபுரம், இ. கலையரசு



தோற்று வித்தது

அன்று எங்கள் பள்ளியில் பெரும்பாலான ஆசிரியர்கள் வரவில்லை. எங்கள் வகுப்பு ஆசிரியர் மட்டும்தான் வந்திருந்தார். எனவே எல்லா வகுப்புகளையும் ஒன்று சேர்த்து எங்கள் ஆசிரியர் சில பொது வினாக்களை எழுப்பினார். முதலில் ஏழாம் வகுப்பு மாணவனை எழுப்பி "புத்த சமயத்தைத் தோற்று வித்தவர் யார்?" என்று கேட்டார். "புத்தர்" என்றான் அவன். பிறகு ஆறாம் வகுப்பு மாணவனிடம் "சமண சமயத்தைத் தோற்றுவித்தவர் யார்?" என்றார். 'சமணர்' என்று உரக்கச் சொன்னான் அவன். எழுந்த சிரிப்பிற்கு ஒரு வரையறையே இல்லை!

துத்திப்பட்டு, இராம. ஜெயகாந்தன்




அம்மா சொன்னால்!

ஒரு நாள் தம்பி விறகுகளை மூலையில் அடுக்கி வைத்திருந்த இடத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த அம்மா "அங்கே விளையாடினால் உன்னைத் தேள் கொட்டிடும்" என்று பயப்படுத்தினார். அவன் கேட்கவில்லை. சிறிது நேரத்தில் அவனை எதேச்சையாக ஒரு தேள் கொட்டி விட, அன்றிலிருந்து அவன் என் அம்மா பேச்சைக் கேட்கத் தவறியதே இல்லை. ஒரு நாள் அவனிடம் கார



ணம் கேட்டபோது, "அம்மா தேன் வளர்க்கிறாங்க. அவங்க பேச்சை கேக்கலைன்னா அது என்னைக் கொட்டிடும்" என்று கூறியதும் எல்லோருக்கும் சிரிப்புதான்.

அனந்தபுரம், டி. தென்றலரசு.



விழாத பேருந்து!

குடும்பத்துடன் இருபது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கோயில் திருவிழாவிற்குச் சென்றிருந்தோம். அந்தத் திருவிழாவிற்குச் சிறப்பு 'விழா பேருந்து' விட்டார்கள். நாங்கள் சாமி கும்பிட்டுத் திரும்பிவர பேருந்து நிலையம் வந்தடைந்தோம். எங்கள் ஊர் பேருந்துக்காகக் காத்திருந்தோம். அங்கே இருந்த எல்லாப் பேருந்துகளிலும் முன்புறம் "விழா பேருந்து" என்று எழுதி ஒட்டியிருந்தார்கள். எங்களோடு அமர்ந்திருந்த என் அக்கா பையன் "மாமா மாமா, இந்த பஸ் எல்லாம் தான் விழாமல் போற பஸ்சா? பாக்கி எல்லா பஸ்சும் விழுந்து விடுமா? 'விழா பேருந்து'ன்னு ஒட்டியிருக்கிறார்களே?" என்றான். நாங்கள் எல்லோரும் சிரித்து விட்டோம்.

மேலப்பாதி, எஸ். நாகராஜன்



பேண்டில் பை

எங்க மாமா டவுனில் போய் புது பேண்ட் தைத்துக் கொண்டு வந்தார். வீட்டில் வந்து பார்த்தபோதுதான் தையற்காரர் ஏதோ ஞாபகத்தில் பேண்டில் பைவைத்துத் தைக்க மறந்து விட்டிருப்பது தெரிந்தது. இதற்காக மறுபடியும் டவுனுக்குப் போக வேண்டுமே என்று சோம்பிய மாமா, பக்கத்தில் உள்ள டெய்லரிடம் "பேண்டில் பை தைத்துக் கொடுங்கள்" என்று கொடுத்து விட்டு வந்தார். இரண்டு நாள் கழித்து பேண்ட்டை வாங்கச் சென்ற போது பார்த்தால், அந்த டெய்லர், பேண்டை வெட்டி இரண்டு பெரிய பைகளாகத் தைய்த்து வைத்திருந்தார்! மாமா மயக்கம் போட்டு விழாத குறைதான்!

தேவகோட்டை, ஆர். நவநீதம்

என்ன செய்தேன்...?

குடுகுடுதாத்தா ஒருவர் எங்கள் கிராமத்திலிருந்து வந்தார். நிலங்களை விற்க வேண்டும். அதற்கு அவருடைய உறவினர்கள் தடை விதிக்கிறார்கள். அதை எப்படியாவது விற்றுத் தரவேண்டும் என்று அப்பாவிடம் கேட்கவே வந்திருந்தார். "வக்கிலிடம் அட்வைஸ் கேட்டு வருகிறேன்" என்றார் அப்பா. தாத்தா இதை வைக்கல் என்று எடுத்துக் கொண்டு விட்டார் போலிருக்கிறது. அன்று மாலை தோட்டத்திலுள்ள வைக்கோல் போரிடம் சென்று "வக்கலே, வக்கலே, சிக்கிரம் எனக்கு சரியான ஒரு வழியைச் சொல்லு? நான் என்ன செய்தேன்? என்கிட்ட மட்டும் பேச மாட்டேங்கறியே!" என்று அதைச் சுற்றிச் சுற்றி வந்தார். எங்களுக்கு ஒரே சிரிப்புதான். ஆனால் தாத்தாவிற்குத் தான் எங்கள் சிரிப்புக்கான காரணம் தெரியவில்லை.

அனந்தபுரம் . சரோஜா மகன்.



ஆசிட்டை...

அது நான் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயம். கணக்குப் பாடவேளை. கணக்கு ஆசிரியர் விடைத்தாள்களைத் திருத்திக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது சுதாகர் என்ற மாணவன் எழுந்து, "சார், ரவி என்னை காம்பஸால குத்திட்டான்" என்று கூறினான். ரவி குறும்புக்காரப் பையன். தன் சாமர்த்தியமான பேச்சால் எப்பொழுதும் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வான். ஆசிரியர், "ரவி, ஏன் காம்பஸால குத்தினே?" என்று கோபமாகக் கேட்டார். அதற்கு ரவி "இது கணக்குப் பாடவேளை அதனால் தான்" என்று கூறினான். உடனே ஆசிரியர் தன் கோபத்தை மறந்து, "அப்போ அறிவியல் பீரியட் என்றால் ஆசிட் எடுத்து ஊத்திடுவியா?" என்று கேட்க வகுப்பே சிரிப்லையால் அதிர்ந்தது.

காட்டு மன்னார் கோவில்,

தின. அன்புதேவன்.



பாவம் சிவகுமார்!

கதையை முடியுங்கள் போட்டியில் பரிசுபெற்ற ஐந்து கதைகளும் இங்கே வெளியாகின்றன. முன் கதையைப் படித்து விட்டுப் பிறகு இவற்றைப் படியுங்கள்.

சிவகுமாருக்கு இன்னொரு பெயர் செருப்புத் திருடன். திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் போனால், முன்னதாகவே கிளம்பி நல்ல செருப்பைத் திருடிக் கொண்டு வந்து விடுவார். அவருக்கு நினைவு தெரிந்து காசு கொடுத்து அவர் செருப்பு வாங்கியதே இல்லை! ஆனால் அவரிடம் ஒரு நல்ல குணம். வேண்டும் என்றே திருடமாட்டார். போட்டிருக்கும் செருப்பு தேய்ந்து தூர வீசி எறியும் அளவுக்குப் பழசாகிப் போன பிறகுதான் வேறு ஒன்றைத் திருட முற்றுகை இடுவார்.

ஒரு மாதமாகவே சிவகுமார் போட்டுக் கொண்டிருந்த செருப்பு மிகவும் தேயத் தொடங்கி விட்டது. சரி, இனி மேல் தாங்காது. ஏதாவது கல்யாணத்துக்குப் போய், புதிய செருப்பைத் திருடிக் கொண்டு வர வேண்டியதுதான் என்று முடிவெடுத்தார். வாய்ப்புக்காகக் காத்திருந்தார். உறவினர் ஒருவர் வீட்டுத் திருமணம் பக்கத்து ஊரில். மறு நாள் மனைவியைக் கூட்டிப் போவதாகக் கூறி விட்டுத் தான் மட்டும் முந்தின நாளே மாப்பிளை அழைப்புக்குப் போனார். நல்ல கூட்டம். நல்ல காலம், செருப்புக்கு டோக்கன் தரும் ஏற்பாடு இல்லை. வாசல் நடையில் ஒரு சிமெண்ட் பெஞ்சிக்குக் கீழே திருமணத்திற்கு வந்தவர்களின் செருப்புகள் குவிந்திருந்தன. வலது சுவர்ப்பக்கம் ஓரமாக ஒரு ஜோடி கறுப்புப் பட்டை போட்ட செருப்புக் கிடந்தது. தனக்குப் பொருத்தமாக இருக்குமா என்பதை உறுதி செய்து கொள்ள, பெஞ்சியில் உட்கார்ந்து, கால்லை ஆட்டிப் பார்த்து, கண் அளவில் உறுதி செய்து கொண்டு உள்ளே



போனார்!

முதல் பந்தியில் அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு விட்டு தாம்பூலம் எடுத்துக் கொள்ளப் போனார். 'பட்' டென்று விளக்குகள் அணைந்தன. சந்திரத்தில் ஒரே இருள்! ஒரே களேபரம். சிவகுமார் தட்டுத் தடுமாறி வாசலுக்கு வந்தார். கால்களை பெஞ்சிக்கடியில் நுழைத்து, சுவர் ஓரமாக இருந்த ஜோடி செருப்பில் மாட்டிக் கொண்டு கிளம்பினார்.

திருடு மட்டும் அல்ல...

சிவகுமார் அந்த இருளிலும் கால்களை பெஞ்சுக்கு அடியில் நுழைத்து சுவர் ஓரமாக இருந்த ஜோடி செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினார். அவர் காம்பௌண்டு சுவரைத் தாண்டி அவசரமாக வெளியில் வரவும் பளிரென்று விளக்குகள் எரியவும் சரியாக இருந்தது. விரைவாக நடைபோட்டு வந்தவர் தெரு விளக்கின் வெளிச்சத்தில் தன் காலில் போட்டிருந்த செருப்பைப் பார்த்ததும் அளவிலா ஆனந்தம் அடைந்தார். ஏனெனில் அது அவர் முன்பே பார்த்து வைத்திருந்த அதே செருப்புதான். விலை இருநூறு ரூபாய் இருக்கும். நல்ல தோல் செருப்பு. வீட்டிற்கு வந்ததும் வழக்கம் போலவே அந்த செருப்பைப பயன்படுத்தலானார்.

சில நாட்கள் கழித்து அவர் கால்களில் பசபசவென்று என்னவோ அரிக்கத் தொடங்கியது. தடிமனாக தோல் கறுத்து படர ஆரம்பித்தது. பயந்து போன சிவக்குமார் தோல் டாக்டரிடம் சென்று காட்டினார். டாக்டர் அவரது கால்களைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, "நீங்கள் உங்கள் செருப்பை மட்டும்தான் பயன்படுத்துவீர்களா அல்லது வீட்டில் வேறு யாருடைய செருப்பையாவது பயன்படுத்துவீர்களா? உங்கள் வீட்டில் உள்ளவர்கள் யாருக்காவது இப்படி இருந்து, நீங்கள் அவர்கள் செருப்பைப் போட்டால் உங்களுக்கும் அது ஒட்டிக்கொண்டு வந்துவிடும். எனவே, உங்கள் செருப்பை மட்டும் நன்கு சுத்தம் செய்து போட்டுக் கொள்ளவும் என்று" கூறி மருந்து கொடுத்தார்.

சிவகுமாருக்கு இதைக் கேட்டதும் 'திக்'கென்று ஆகி விட்டது. ஒருவேளை அந்த செருப்பை அணிந்திருந்த மனிதருக்கு இதைப்போன்ற வியாதி இருந்திருக்குமோ? அதனால்தான் செருப்பு மூலமாக நமக்கும் தொற்றிக் கொண்டு விட்டதோ? நல்லவேளை இது குணமாகக் கூடிய வியாதியாக இருக்கிறது. இல்லாவிட்டால் என் கதி என்ன? நினைத்துப் பார்க்கவே சிவகுமாருக்கு அச்சமாக இருந்தது. வீட்டிற்கு வந்ததும் முதலில் அந்த செருப்பைத் தெருவில்



இருக்கும் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்தார். இனிமேல் அடுத்தவர்கள் செருப்பை அணியக் கூடாது என்று முடிவுக்கு வந்தார். மற்றவர் உடைமைகளை அவர்களுக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்வது திருடு மட்டுமன்று சுகாதாரமற்றதும் கூட என்பதை அனுபவ மூலமாக அறிந்து கொண்ட சிவகுமார் இனி செருப்பை விலை கொடுத்து வாங்கி போட்டுக் கொள்ள முடிவு செய்தார்.

காரைக்கால், ஆர். கோபிகண்ணன்,

தண்ட செலவு!

சிவகுமார் மாட்டிக் கொண்ட செருப்பு மிகவும் விலையுயர்ந்த, அழகான செருப்பு. ஆனால், அதன் ஒரு பக்க வார் விட்டிருந்தது. அதனால் என்ன, போகும் வழியில் அதைச் சரி செய்து கொள்ளலாம் என்று நினைத்தார். பேருந்து நிலையத்தை நோக்கிச் சென்றார். வழியில் பிளாட்பாரத்தில் ஒரு செருப்புத் தைக்கிறவனைக் கண்டார். அவனிடம் செருப்பைத் தைத்துத் தரச் சொன்னார். அவன் ஐந்து ரூபாய் கேட்டான். சிவக்குமார் தர ஒப்புக் கொள்ளவே அவன் தைக்க ஆரம்பித்தான்.

தைத்துக் கொண்டிருக்கும்போது சிவக்குமாரின் நண்பர் தணிகாசலம் வந்தார். அவரும் பஸ்ஸுக்குப் போய்க் கொண்டிருந்தார்.

சிவகுமாரிடம் பேச்சுக் கொடுத்து நின்றார் தணிகாசலம். செருப்புத் தைப்பவன் செருப்பைத் தைத்து சிவகுமாரிடம் கொடுத்தான். அவைகளைத் திகைப்புடன் கவனித்த தணிகாசலம் "என்ன சிவகுமார் இது! என்னுடைய செருப்பு மாதிரியே இருக்கே! இப்பத்தான் சத்திரத்தில் என் செருப்பு காணாமல் போயிற்று?" என்றார்.

சிவக்குமாரின் முகத்தில் அசடு வழிந்தது. ''என்னுடைய செருப்பும் கல்யாணத்தில் தொலைந்து விட்டது. அதனால், கிடைத்ததைப் போட்டுக் கொண்டு வந்தேன். கடைசியில் அது உங்களுடையதாகப் போச்சு! நல்ல வேளை. எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

ஆனாலும் சிவக்குமாரின் மனதில் "நாம் ஐந்து ரூபாய் இவருக்காக தண்ட செலவு செய்து விட்டோமே" என்று வருந்தினார்.

தணிகாசலம் தைத்ததற்காக நன்றி சொல்லி விட்டு, காசு கொடுக்காமல் சென்று விட்டார். திருடியதற்கு தண்டனையாக சிவக்குமார் தன்னுடைய பழைய செருப்பையும் தொலைத்து விட்டு ஐந்து ரூபாயையும் இழந்து ஊருக்கு செருப்பில்லாமல் தட்டுத்தடுமாறி நடந்து சென்றார்.

''தன் வினை தன்னைச் சுடும்'



என்பது இதுதானோ?

சென்னை-81, ஆர். பாலாஜி.

மாப்பிள்ளை செருப்பு!

அந்தச் செருப்பைப் போட்டுக் கொண்டு போகும் சிவகுமார் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். ஏன் என்றால் அந்தச் செருப்பு நன்றாக இருந்தது. அவர் அதுவரை அந்தகைய விலை மிக்க செருப்பைத் திருடியதில்லை.

அடுத்த நாள் அதிகாலையிலேயே எழுந்து தன் மனைவியுடன் திருமண வீட்டுக்குச் சென்றார். திருமண வீட்டில் ஒரே 'கசமுசா'! மாப்பிள்ளைத் தோழனின் விலைமிக்க செருப்பைக் காணவில்லையாம்!


தான் காலில் அணிந்துள்ள செருப்பு ஒருவேளை அதுவாக இருக்குமோ என்ற பயத்தில் வேட்டியை இறக்கி மறைக்கப் பார்த்தார் சிவகுமார். இதை அங்கு இருந்தவர் ஒருவர் கவனித்து விட்டார். விஷயம் மாப்பிள்ளையின் கவனத்திற்குப் போய் விட்டது! மாப்பிள்ளையின் தோழன் வந்து பார்த்து சிவகுமார் போட்டிருந்த செருப்பு தன்னுடையது என்று கூறினார். சிவகுமாரின் முகம் வியர்த்து விட்டது. இனித் தப்ப வழியில்லை. தான் செய்ததை அவரே ஒப்புக் கொண்டார். "இனி இப்படிச் செய்ய மாட்டேன்" என்று மன்னிப்புக் கேட்டார். அவர் மனைவிக்கு உள்ளூர மகிழ்ச்சி. ஏன் தெரியுமா? தன் கணவரைத் திருத்த அவள் செய்த ஏற்பாடுதான் அது! உறவினர்களுடன் சேர்ந்து கணவனை மாற்ற அவள்தான் இப்படி ஒரு திட்டம் போட்டாள். நீங்கள் எங்கேயாவது சிவகுமாரிடம் சொல்லிவிடப் போகிறீர்கள்.

நெய்வேலி-1, த. சிவகுமார்.

மாமாவுதா?

சிவகுமார் செருப்புடன் வீட்டிற்கு வந்து விட்டார். விலைமிக்க செருப்புக் கிடைத்தது என்று அவருக்குக் கொள்ளை ஆனந்தம். பத்து நாள் கழித்து சிவகுமாரின் ஒரு கால் இலேசாக வீங்க ஆரம்பித்தது. டாக்டரிடம் சிகிச்சை நீடித்தது. ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவானது. இருந்தும் கால் வீங்கி படுக்கையில் இருந்தார்.

அவரைப் பார்க்க அவரது மாமா வந்தார். சிவகுமாரின் வீட்டில் தன் செருப்பு இருப்பதைக் கண்டு திகைத்த அவர், சிவகுமாரிடம் விசாரித்தார். அது



தன்னுடையது என்றும், திருமணத்தில் காணாமல் போய் விட்டது என்றும் கூறினார்.

அப்பொழுதுதான் சிவகுமாருக்குத் தன்னுடைய கால் வீங்கிய காரணம் புரிந்தது. உடனே உண்மையைக் கூறி மாமாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

மாமாவிற்கு யானைக்கால் நோய் ஆரம்பம். அவருடைய செருப்பைப் போட்டதால் சிவகுமாருக்கு அந்த நோய் ஒட்டிக் கொண்டது. பாவம் சிவகுமார். இப்பொழுதெல்லாம் அடுத்தவர் செருப்பைத் திருடுவதுமட்டுமல்ல, மறந்தும் இரவலாகக் கூடப் போடுவதில்லை!


கும்பகோணம், நா. சாந்தி

செருப்பு வந்தது பர்ஸ் போச்சு!

சிவகுமார் வீட்டிற்குப் பெருமையாக நடந்தார். மறுநாள் காலை குடும்பத்துடன் திருமணத்திற்குக் கிளம்பிய பொழுது அவர் மனைவி "மொய் எழுத ரூபாய் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினாள். முந்தின தினம் அணிந்த பேண்ட் பையிலிருந்து ரூபாயை எடுக்கச் சென்ற பொழுதுதான் மணிபர்ஸ் இல்லாததை அவர் கவனித்தார். ஞாபகப் படுத்திப் பார்த்தப் பொழுதுதான் அவருக்கு "பட்"டென நினைவிற்கு வந்தது. அது, நேற்று மாப்பிள்ளை அழைப்பில் சாப்பிட்டுவிட்டுத் தாம்பூலம் எடுத்துக் கொள்ளப் போனபோது விளக்குகள் அணைந்ததும், இருட்டில் யாரோ தன்மேல் மோதியதும் நினைக்கு வந்தது. மோதினவன் பலே கில்லாடி! அவர் பையில் இருந்த பர்ஸைத் திருடிவிட்டான்!

"உங்கள் செருப்புத் திருடும் ஆசையில் பர்ஸைப் பறி கொடுத்து விட்டீர்களே?" என்று அழத் தொடங்கினாள் மனைவி. அன்றியிலிருந்து சிவகுமார் செருப்புத் திருடுவதே இல்லை.

சென்னை-61, வி. வித்யாலஷ்மி.



உடனே வாங்க...!

வாசுவுக்கு அந்தக் குரூரமான பழக்கம் எப்படித் தொற்றிக் கொண்டது என்பது அவனுக்கே தெரியாது. அடுத்தவர்களைப் பயப்படுத்தி அவர்கள் கலவரப்படுவதைப் பார்த்தால் இவனுக்கு ஒரே சந்தோஷம்!

பொது டெலிபோன் பூத்தில் போய் கதவை மூடிக் கொண்டு ஏதாவது ஒரு போன் நெம்பரைச் சுற்றி, "உங்க கணவர் ஆபீஸ் முடிஞ்சு வர வழியில ஒரு ஆக்ஸிடெண்ட் ஆகி சீரியஸா இருக்கார். ஜி.ஹெச்.சில சேர்த்திருக்கோம். உடனே புறப்பட்டு வாங்க..." என்று சொல்லிவிட்டு, உடனே அவங்களுக்கு முன்னால் ஜி.ஹெச்.ல் போய் நின்று கொள்வான்.

அவர்கள் அழுது பதறிக் கொண்டே வருவதைப் பார்த்தால் வாசுவுக்கு ஏக சந்தோஷம்.

வாசுவின் லீலைகளை எப்படியோ தெரிந்து கொண்டு நண்பர்கள் அப்பாவிடம் சொன்னார்கள். அப்பா அடித்து விளாசினார். அத்தனை அடிகளுக்கும் எந்தப் பயனும் இருக்கவில்லை. வாசு மற்றவர்களைக் கலவரப்படுத்தி மகிழ்ச்சியடைவதில் தனி ஆர்வம் கொண்டான்.

அன்று மாலை வாசுவுக்கு வழக்கமான அந்த ஆசை தோன்றியது. டெலிபோன் பூத்தருகே வந்து சுற்றும் முற்றும் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்து



விட்டு தீயணைப்புப் படைக்கு போன் செய்தான்.

"சார்... சார்... இங்க ஈரோடு போற வழி யில தோக்க வாடிகிட்ட ஒரு குடோன் பயங்கரமா தீப்பிடிச்சு எரியுது சார். உடனே வாங்க... ப்ளீஸ்..." என்று கூறிவிட்டு ரீசிவரை வைத்தான்.

ஒருசில நிமிடங்களில் தீயணைப்பு வண்டிகள் 'ரொய்ங்... ரொய்ங்...' என்று ஒலியெழுப்பிக் கடந்து செல்வதைக் கண்டதும் சிரிப்பை அடக்க முடியாமல் ஹா... ஹா... என்று சிரித்து மகிழ்ந்தான்.

"நான் சொன்ன இடத்தை அடைவதற்கு அரைமணி நேரமாவது ஆகும்! போய் ஏமாறப் போறாங்க..." என்று மகிழ்ச்சிக் கூத்தாடி வீடு திரும்பினான்.

வாசுவின் வீடு இருக்கும் தெரு ஏனோ பதட்டமாக இருந்தது. வாசு பரபரப்புடன் வீட்டுக்கு ஓடினான். அவன் வீடு தீப் பிடித்து எரிந்து கொண்டிருந்தது. தெரு மக்களெல்லாம் தண்ணீர் ஊற்றித் தீயை அணைக்க முயன்று கொண் டிருந்தனர்.

வாசுவைக் கண்டதும் அப்பா ஓடி வந்து "வாசு... உங்கம்மா சமைக்கும் போது கேஸ் வீக்காயி தீப் பிடிச்சுக்கிச் சுடா. தீயணைப்புப் படைக்கு போன் பண்ணினேன். தோக்கவாடிக்கிட்டே ஏதோ குடோன் பத்திக்கிட்டதாம். அங்கே போயிருக்காங்களாம். எப்போ வருவாங்களோ தெரியலே" என்று அழுதார்.

வாசு இடிந்து போய் நின்றான். இப்பொழுதெல்லாம் அவன் தொலைபேசியில் பதைபதைக்கும் பொய்யான செய்திகளைக் கூறி யாரையும் பதற வைப்பதில்லை.

— இரா. அ. தென்றல் நிலவன்

சின்ன ஆணிதானே?

மங்களபுரி என்ற நாட்டின் மன்னன் வீரசேனன். அவன் மிகவும் வீரம் மிக்கவன். திறமை வாய்ந்தவன். அனைத்து நற்பண்பு களையும் பெற்றவன். இருப்பினும் அவனிடம் ஒரு தீய குணம். எதையுமே அலட்சியமாகப் பார்க்கும் போக்குதான் அது. அவனுடைய பக்கத்து நாடு சோழபுரம். இரண்டும் எதிர் எதிர் நாடுகள். இரண்டு நாடுகளிடையே எப்பொழுதும் போர். போர் நடைபெறும் சமயம் அது. போருக்குப் புறப்பட வீரசேனன் தயாரானான்.

வீரசேனன் அமைச்சரிடம் "போர் வீரர்கள் தயாரா?" என்று கேட்டான். "தயார் அரசே," என்று கூறினார். அமைச்சர், "குதிரைப் படை தயாரா?" என்று கேட்டான் மன்னன். "அதுவும் தயார்" என்று கூறினார் அமைச்சர். "யானைப் படை?" என்று மன்னன் கேட்டதற்கு "அதுவும் கூடத் தயாரே" என்று பதிலளித்த அமைச்சர், "ஆனால்..." என்று கூறி நிறுத்தினார்.

"என்ன ஆனால்?" என்று வீரசேனன் கேட்டான்.

அமைச்சர், "தாங்கள் போர் செய்ய இருக்கும் குதிரையின் லாடத்தில் ஓர் ஆணி மட்டும் கழன்று விடுவது போல் உள்ளது" என்று கூறினார்...

"சின்ன ஆணிதானே?" என்று அலட்சியமாகக் கூறி விட்டு மன்னன் புறப்பட்டுச் சென்று விட்டான்.



போர் நடைபெற்றது. வீரசேனனின் படைகள் வெற்றி வாகை சூடும் நேரத்தில், வீரசேனனின் குதிரையின் காலிலிருந்து லாடம் கழன்று விழுந்து விட்டது. அந்தச் சமயத்தில் குதிரையின் காலின் அடிப்பாகத்தில் கல் இடறி குதிரை விழ வீரசேனன் தலைகீழாக வீழ்ந்தான். அந்த நேரம் பார்த்து சோழ புர நாட்டின் படைகள் வீரசேனனைக் கைது செய்து விட்டன!

வீரசேனனின் அலட்சியப் போக்கால் அவன் நாடே எதிரி நாட்டிற்கு அடிமையாகி விட்டது. ஆதலால், எதிலுமே அலட்சியமாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

· தி. கலையரசு.

எறும்பு தின்னிக்கு எத்தனை பற்கள்?

ரேவதி

கேம்ப் ஃபையர் அடக்கமாக ஜ்வாலை வீசி எரிந்து கொண்டிருந்தது. தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகளாகப் பங்கேற்க வந்திருந்த சாரணர்கள் வட்டமாக அமர்ந்திருந்தனர். ஒவ்வொருவராகத் தங்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்தி மற்றவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தனர்.

கொல்லிமலை பழங்குடி மக்களின் கோழி ஆட்டத்தை, உறையூரிலிருந்து வந்திருந்த ஒரு சிறுமி ஆடிக் காட்டியதை எல்லோரும் "ஒன்ஸ் மோர்" கேட்டு உற்சாகப்படுத்தினர். அந்தச் சிறுமியின் பெயரையும் முகவரியையும் குறித்துக் கொள்ள பேனாவைத் தேடிய போதுதான், அது தன்னுடைய சட்டையில் இல்லை, வேறெங்கோ விழுந்து விட்டது என்ற உண்மையை மாலினி உணர்ந்தாள்.



மலை ஏறும் பயிற்சி முடிந்து வரும் போது, இரண்டாவது இறக்கத்தின் திருப்பத்தில் ஒரு நாவல் பழ மரம், பழங்களுடன் குலுங்கிக் கொண்டிருந்தது. மரத்தில் ஏறிக் கிளைகளைக் குலுக்கிப் பழங்களை உதிர்க்க வைத்துக் குதித்தாள் மாலினி. பேனா அங்கேதான் எங்கேயோ விழுந்திருக்க வேண்டும்.

இரண்டு நிமிஷ நடை கூட இருக்காது. எல்லோரும் கேம்ப் ஃபைரைச் சுற்றி இருக்கிறார்கள். யாரும் கவனிக்கவில்லை. பேசாமல் போய் விட்டு வந்து விடலாமே? நிலா பால் போல், பகலுக்கு இணையாகக் காய்ந்து கொண்டிருக்கிறது. டார்ச் லைட்டும் இருக்கிறது. என்ன பயம்?

மாலினி நழுவியதை ஒரு

வரும் கவனிக்கவில்லை. முதல் இறக்கம் முடிந்து இரண்டாவது இறக்கத்தில் ஒரு திருப்பம். என்னவோ 'பரபர' சத்தம் கேட்டது. சருகுகளில் யாரோ, எதுவோ நடந்து செல்வது போல் இருந்தது. துணிவாக, ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாது வந்து விட்டாளே தவிர பாதி வழி வந்த பிறகுதான், மனித சஞ்சாரமற்ற அந்தக் காட்டின் சூழ்நிலையும், புதுமையான காட்டு விலங்குகளின் சத்தமும் அவளுக்குக் கலக்கத்தைக் கொடுத்தன. இப்பொழுது இந்தப் 'பரபர' சத்தம் அவளுடைய இரத்தத்தை உறைய வைத்தது.

மாலினிக்கு முன்னால் இருபது அடி தொலைவில் என்னவோ ஒரு விலங்கு அசைந்து அசைந்து பாதையைக் குறுக்கே கடந்தது. நிலவொளி இருந்தது என்றாலும், மரங்களின் நிழல் இடையிடையே கறுப்புத் திட்டை உண்டாக்கியிருந்ததால் அது என்ன விலங்கு என்பதை அவளால் தெளிவாக உணர முடியவில்லை. வந்தது வரட்டும் என்று டார்ச் லைட் பட்டனை அழுத்தி ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சினாள்.

ஆனால் கண்டிப்பாக முதலை இல்லை. உடல் முழுக்க செதில்கள். குறுகலான வாய். நீளமான வால். வாலில் கூட செதில்கள்! கால்களில் கூரிய நகங்கள். சுமார் மூன்றரை அடி நீளம் இருக்கும். உடலையும், வாலையும் தரையில் படவைக்காமல் அது கால்களால் நடந்தது திகைப்பைத் தந்தது. இது வரை பார்த்திராத விலங்கு. அது தாவர விலங்கா, மாமிச விலங்கா, எப்படித் தாக்கும் என்பதெல்லாம் தெரியாத நிலையில், அதைப் பார்த்த மாத்திரத்திலேயே மாலினி நடுங்கினாள். அது அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. என்றாலும் எப்பொழுது வேண்டுமானாலும் மின்னல் வேகத்தில் தாக்கும் என்று மனதுக்குள் ஒரு பீதி!

பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அதன் நீண்ட வாலின் முழுப் பகுதியும் தெரிந்தது. வாலின் பின் பக்கத்தில் ஏதோ பெரிய முண்டு போல் இருந்தது. பிறகுதான் அது முண்டு அல்ல. அந்த அதிசய விலங்கைப் போலவே, ஆனால் மிகச் சின்னது என்பது தெரிந்தது. ஒருவேளை அதன் குட்டியாகக் கூடவே இருக்கலாம். உடலையும் வாலையும் தரையில் படாது வைத்து பெரியது அசைந்து அசைந்து மெள்ள நடந்த போது, குட்டி கீழே விழாது கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருந்தது. பார்த்துக்



கிட்டத்தட்ட முதலையைப் போன்ற தோற்றம்.

கொண்டே இருக்கும் போது, அந்த விலங்கு பாதையைத் தாண்டி எதிர்ப்பக்கம் புதர்களுக்கு இடையே புகுந்து மறைந்தது!

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் மாலினி, கீழே

நடந்து போய் நாவல் மரத்தின் கீழே டார்ச் அடித்துத் தேடினாள். அவள் நம்பிக்கை வீண் போகவில்லை. அவளுடைய அருமையான ராசிப் பேனா அங்கே கீழே விழுந்து கிடந்தது. எடுத்துக் கொண்டு அவள் திரும்பும் போது மேலே முதல் வளைவில் லீடரின் குரல் கேட்டது.

"மாலினி, எங்கே இருக்கே? குரல் கொடு."

"இதோ இங்கே, பத்திரமா இருக்கேன். எனக்கு ஒன்றும் ஆபத்தில்லை. நானே வந்து கொண்டிருக்கேன்" - மாலினி பதில் குரல் கொடுத்து ஏறிக் கொண்டிருந்தாள்.

நண்பர்கள் எல்லோரும் மாலினியைச் சுற்றி இருந்தனர்.

"நீ விவரிப்பதையெல்லாம் பார்த்தால், அது நாம் பார்த்திராத அதிசயமான விலங்காக இருக்கும் போல் இருக்கிறதே!"

"போனதுதான் போனியே, காமிராவோடு போயிருக்கக் கூடாது?"

"காமிராவில் புகைப்படம் எடுக்கலையேன்னு கவலை வேண்டாம். நான் எதைப் பார்த்தாலும் அருமையான சித்திரமா வரைந்து விடுவேன்" என்று கூறிய மாலினி, ஒரு காகிதத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு தான் பார்த்த விலங்கின் தோற்றத்தை வரைந்தாள்.

மாலினி எழுதிய ஓவியத்தை எல்லோரும் வாங்கிப் பார்த்து அதிசயித்தனர். ஆனால் யாராலுமே அது என்ன என்பதைக் கூற முடியவில்லை. தருமபுரியில் இருந்து முகாமுக்கு, வந்திருந்த நஞ்சப்பன்தான் கடைசியில் விளக்கம் தந்தான்.


"இது, எறும்புதின்னி விலங்கு. ஆங்கிலத்தில் பங்கோலின்னு சொல்லுவாங்க. தமிழில் அலங்கு, அழுங்குன்னு சொல்லுவாங்க. இது மலைப்பாங்கான பகுதிகளில் இருக்கும். இது அதிசயமான விலங்கே இல்லை. நாங்க நிறையப் பார்த்திருக்கோம். நீங்களெல்லாம் பார்க்காததற்குக் காரணம், இது இரவில் மட்டுமே வெளியே வரும். இரை தேடும். அதோடு ரொம்ப கூச்ச சுபாவம்."


"இது மனிதர்களைத் தொந்தரவு பண்ணாதா?"

"கண்டிப்பா பண்ணாது. புதுசா பார்த்தா நமக்குத்தான் பயமா இருக்கும். ஆனால் மனிதர்களைப் பொருத்தவரை இது அபாயமற்ற விலங்கு."

"இதுக்கு என்ன உணவு?"

"எறும்பும் கரையானும் தான் முக்கிய உணவு. விரும்பித் தின்பது கட்டெறும்பை. கிடைச்சா தண்ணீர் குடிக்கும். இதுக்குப் பற்களே கிடையாது. முகம் நீளமாக இருப்பதால், ரொம்ப எளி





டியா?"

"ஆமாம். அலங்கு தன் குட்டியை வாலின் குறுக்கே வைத்துத்தான் தன்னுடன் தூக்கிச் செல்லும். குரங்குக் குட்டி தன் அம்மாவின் உடம்பை கெட்டியா பிடித்துக் கொள்வது போல் இதுவும் அம்மாவின் வாலைக் கெட்டியாகப் பிடிச்சுக்கிட்டு உட்காரும்!"

"ஏதாவது ஆபத்துன்னா குட்டி என்ன பண்ணும்?"

"ஏதாவது ஆபத்து இருப்பதா நினைச்சா, இது வாலைச் சுருட்டி உடம்பைச் சுருட்டி சக்கரம் மாதிரி வைத்துக் கொண்டு விடும். குட்டியை நடுவில் வைத்துக் கொண்டு சுருட்டிக் கொள்ளும். இதை யாராலும் பிரிக்க முடியாது. இதுவா மனசு வைச்சுப் பிரிச்சால்தான் பிரிக்க முடியும். அப்போ இதைக் கையில் எடுத்துப் பார்த்தா காரோட டயரை எடுத்த மாதிரி இருக்கும்!"

"அதிசயமா இருக்கே!"

"யாராவது பிடிவாதம் பிடித்தால் என்ன அழும்பு பண்றேன்னு பெரியவங்க கேட்கிறார்

தாகக் கரையான் புற்றுக்குள் முகத்தை நுழைச்சு, நீண்ட நாக்கால் கரையான்களையும் எறும்பையும் தின்னும். நாக்கில் பசை இருக்கும்."

"வாலில் இருப்பது குட்

அறிவியல் உண்மைகள் :

• அலங்குகள் பொதுவாக எறும்பு தின்னிகள் என்று அழைக்கப்படுகின்றன. இவைகளுள் பங்கோலின் (pangolin) சிறப்பான வகை. இதன் விலங்கியல் பெயர் மேனிஸ் க்ராஸ்லி காடோடா (Manis crassicaudata). இது ஃபோலிடோட்டா (Pholidota) வரிசையைச் சார்ந்தது.

• உடல் முழுவதும் செதில்கள் கொண்ட ஒரே பாலூட்டி இதுதான். செதில்கள் முடிகளின் மாறுபாடான வடிவங்களே. இவைகளில் தங்கி விடும் கிருமிகளை அழிக்க, எறும்புகளை மேலே மேலே உதிர வைத்து, அவை வெளியிடும் Formic acid ஐப் பயன்படுத்தும். பிடித்த இரை கட்டெறும்பு, கரையான். இவைகளுக்குப் பற்கள் கிடையாது. நீண்ட நாக்கு, நீட்டவோ, உள்ளிழுக்கவோ வசதியானது.

• பார்வையும், கேட்கும் திறனும் குறைவு. மெதுவாக நடக்கும். கூச்ச சுபாவம் கொண்டவை. இரவில் மட்டுமே இரை தேடி வெளியே வரும். அதனால் இதை அதிகமாக யாரும் பார்த்திருக்க முடியாது.

• குட்டியை வாலின் குறுக்கே வைத்து நடக்கும். அபாயம் வந்தால் குட்டியையும் சேர்த்து உடலைப் பந்து போல் சுருட்டிக் கொள்ளும். இதைப் பிரிக்க யாராலும் முடியாது. அழும்புப் (அலங்கு) பிடிவாதம் என்பது இதுவே.

• செதில்கள் மருத்துவ குணம் உடையவை என்று நம்புகிறார்கள். இதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை.

• புதர்களில், இடுக்குகளில் வாழும். இரண்டு குட்டிகள் வரை போடும்.

• கிராம மக்கள் இதன் இறைச்சியைப் பெரிதும் விரும்பி உண்கிறார்கள்.

களே... இது அழும்பு அல்ல. அலங்கு என்பதன் திரிந்த வடிவமே. அலங்கு, சுருட்டிக் கொண்டு யாராலும் பிரிக்க முடியாது பிடிவாதம் செய்வதைப் போல் செய்கிறாயே என்பதுதான் இதன் உண்மையான பொருள். அதோட, இந்த அலங்குகளுக்கு பார்வையும் கேட்கும் திறனும் குறைவு. உடலின் கனம் இவை களை மெதுவாகவே நடக்க வைக்கிறது."

"அடுக்கடுக்காக இத்தனை செதில் கள் இருக்கே! பாவம்."


"இந்தச் செதில்கள் எல்லாம் சதை கள் அல்ல; முடிகளின் மாறுபாடான வடிவங்களே (modified). இந்த மடிப்பு களுக்குள் கிருமிகள் தங்கி இருக்கும். அலங்குகள் எறும்புகளைத் தங்கள் உடலின் மேல் உதிரச் செய்யும். எறும்பு கள் வெளியிடும் அமிலத் துளிகள் (formic acid) இந்தக் கிருமிகளைத் தாக்கிக் கொல்லும்."

"அப்படியானால் இதை எப்படிப் பிடிப்பாங்க?"

"டார்ச்லைட்டை இதன் கண்ணுக்கு நேராக அடித்தால், எற்கெனவே பார்வை குறைபாடுள்ள இந்த எறும்பு தின்னி கூகவது காரணமாக கண்களை மூடிக்கொள்ளும். உடனே இதை கோணிப் பைகளில் போட்டு எடுத்துக் கொண்டு வந்துவிடுவார்கள். ஆனால் இப்படி கொண்டு வந்தால் கூட அலங்கு மனசு வைத்தால்தான், இதைப் பிரிக்க முடியும். மத்திய பிரதேசத்தி லுள்ள இதே வகை அலங்குகள் தங்கள் உடலை டயர் மாதிரி சுருட்டிக் கொள் வதோடு உருண்டு உருண்டு தப்பிப் போய்விடுமாம். எந்த வகை அதிர்ச்சியி லிருந்தும் இதன் செதில்கள் இதற்குப் பாதுகாப்பை அளிக்கின்றன.

"இத்தனை பெருமைவாய்ந்த அந்த அலங்கை எப்படியாவது நான் போட்டோ எடுக்கிறேன் பாரு" என் றான் குமார்.


"அலங்குப் பிடிவாதம் பிடிக்காதே" என்றான் நஞ்சுண்டன். எல்லோரும் சிரித்தனர்.



"மருந்துக் கடையில செல்லாத நோட்டை குடுத்துட்டு இந்த டானிக்கை வாங்கி வந் துட்டேன்."

"நல்லாப் பாரு. இந்த மருந்தும் எக்ஸ்பைரி ஆனதுதான்."

- மு. தனகோபாலன்.



"மகனே, நீ அவன் கூடயெல்லாம் பழகாதே. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும்னு சொல்ல முடியாது."

- சீர்காழி. ஜே. பல்ராமன்



"ஐஸ்கிரீம் விக்கிறவர் குரலையும், ஹாரன் சத்தத்தையும் டேப் பண்ணி நடுரோட்ல கொண்டு வந்து போடுறியே, ஏன்?"

"என்னுடைய சின்னப் பையன் எங்கே விளையாடுறான்னே தெரியலே, அவனைக் கண்டுபிடிக்கத்தான்."

- மு. தனகோபாலன்

கேளுங்கள் சொல்லப்படும்

● அரசர்களுடைய படைகளிலும் நமது ராணுவப் பிரிவிலும் 'ஒட்டகப் படை' என்று ஒரு பிரிவு இருக்கிறதே? இதற்கென ஒட்டகங்களைப் பழக்குவார்களா?

- மா. மா. குணபாண்டியன், விருதுநகர்.


எல்லா ஒட்டகங்களையும் படையில் சேர்க்க இயலாது. படையில் சேர்த்துப் போரிட என்று தனியான ஒட்டக இனம் உள்ளது. இதற்கு மெஹ்ரி (Mehri) என்று பெயர். சவாரி செய்யும் ஒட்டக இனத்திற்கு டிராமெட்ரி (Dromedry) என்று பெயர். இவைகளையே பழக்குவார்கள்.

● சில மீன்கள் மின்சாரத்தைப் பாய்ச்சி எதிரிகளை வீழ்த்தி இரையாக்கிக் கொள்ளும், அல்லது தப்பிவிடும் என்பது உண்மையா? அப்படியானால் அந்த மின்சாரம் அவைகளைப் பாதிக்காமல் இருக்குமா?

- வா. கனிமொழி, சுங்குவார்பேட்டை.

பெரிய அமெரிக்க ஈல் மீன் 600 வோல்ட்டுக்கும் அதிகமாக மின்சார அதிர்ச்சி தரக்கூடியது. இதைத் தாங்கக் கூடிய அளவுக்கு இதன் உடல்தோல் பழக்கப்பட்டுள்ளது. அதோடு இவைகளின் தசைகள் இன்சுலேட்டராகப் (Insulators) பயன்படுகின்றன. எனவே இவைகளின் உடலில் தயாராகும் மின்சாரத்தால் இவைகளுக்கு எவ்விதமான பாதிப்பும் இல்லை.





● யானை துதிக்கையால்தான் நீரைக் குடிக்குமா? சாப்பிட மட்டும்தான் வாயைப் பயன்படுத்துமா?

- வி. செல்லப்பன், மருதூர்.

யானை துதிக்கையால் நீரை உறிஞ்சத்தான் உறிஞ்சுமே தவிர குடிக்காது. நீர் குடிப்பது, உணவு சாப்பிடுவது எல்லாமே வாயால்தான். நீரைத் துதிக்கையால் உறிஞ்சுவது மேலே உடம்பில் விட்டுக் கொள்ள அல்லது வாய்க்குள் விட்டுக் குடிக்க.

● மேகங்களில் கூட பல வகை உண்டாமே! உண்மைதானா?-

கா. இஸ்பானுல்லா, ராணிப்பேட்டை.

மேகங்களின் தன்மை, அடர்த்தியைப் பொருத்து அவைகளைப் பிரிக்கிறார்கள். அவை சுருண்ட மேகம் (Cirrus), குவியல் மேகம் (Cumulus), அடுக்கு மேகம் (Stratus), சுருள் குவியல் மேகம் (Cirro Cumulus), அடுக்குக் குவியல் மேகம் (Strato Cumulus), உயர் குவியல் மேகம் (Alto Cumulus), உயர் அடுக்கு மேகம் (Alto Stratus), மழை நிறை மேகம் (Nimbo Stratus), குவி மழை மேகம் (Cumulus Nimbus) என்பன. இவை எண்ணற்ற உட்பிரிவு வகைகளைக் கொண்

சேரநம்பி

யானை துதிக்கையால் ஊரைச் சுமக்குமா?


டவை. ஆராய்ச்சிக்கு வசதியாக இவை இப்படிப் பிரிக்கப்படுகின்றன.

● **பக்திப் பாடல்களை உள்ளம் உருக்க இயற்றிய கபீர்தாஸ் எப்படி இறந்தார்? இதைப் பற்றி இஷ்டத்திற்குக் கதையளக்கிறார்களே?**

- தா. நாகமணி, காங்கேயம்.

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்த கபீர்தாஸ், மெஹர் என்ற ஊரில் மூடப்பட்ட ஒரு குடிசையில் மறைந்தார். இவரை அடக்கம் செய்வது குறித்து இந்துக்களும் முஸ்லீம்களும் சண்டையிட்டனர். இந்துக்கள், "அவர் இந்துவாக மனதில் வாழ்ந்தார். எனவே, இந்து முறைப்படி எரித்து ஈமச் சடங்குகளைச் செய்ய வேண்டும்" என்றனர். முஸ்லீம்கள் இதற்கு மறுப்புத் தெரிவிக்க, மூண்டது சண்டை. கடைசியில் 'மூடர்களே, குடி லைத் திறந்து பாருங்கள்' என்று அசரீரி கேட்டது. குடிலைத் திறந்து பார்க்க, அங்கே எந்த உடலும் இல்லை. ரோஜாச் செடிகளே இருந்தன. இரு சாராரும் செடிகளைப் பிரித்து எடுத்துச் சென்றனர். தனித்தனியே சமாதி அமைத்தனர் என்று கர்ண பரம்பரைச் செய்திகள் தெரிவிக் கின்றன.





● **காரைக்குடியில் நடந்த ஒரு வள்ளியப்பா விழாவில் "வள்ளியப்பா ஒரு புள்ளியப்பா - அவர், வரையும் பாக்கள் வெள்ளியப்பா, வளரும் பிள்ளைக்குப் பள்ளியப்பா - இளைஞர் வருங்காலத்திற்குத் தங்கமப்பா" என்று தொடங்கும் ஒரு பாடலைப் பாடினார்கள். இது யாருடைய பாடல் என்பது பாடிய வருக்கும் தெரியவில்லை. உங்களுக்குத் தெரியுமா?**

- இ. இசக்கி முத்து, தேவகோட்டை.

இது குழந்தைக் கவிஞர்

வள்ளியப் பாவின் பெருமைகளைப் பாடும் பாடல். இந்தப் பாடலைப் பாடியவர் அமரர் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள். இந்தப் பாடல் குழந்தைக் கவிஞரின் குழந்தை இலக்கியப் பணியின் வெள்ளிவிழா மலரில் (22.11.1970) இடம்பெற்றுள்ளது.

● ***'ஏவிஎம் தங்கப்பதக்கம் பரிசு பெற்றது என்று குறிப்பிடுகிறார்களே, இந்தப் போட்டியை ஏவிஎம் நிறுவனமே நடத்து கிறதா? மேல் விவரங்கள் யாரிடம் கிடைக்கும்?***

- தா. கலியமூர்த்தி, சிதம்பரம்.

சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அமரர் ஏவி. மெய்யப் பன் அவர்கள் இந்தப் போட்டியை ஏற்படுத்தினார். சிறுவர் இலக்கியமானது, நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், வாழ்க்கை வரலாறு, அறிவியல் என்று ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் இரண்டு பிரிவுகளுக்குப் பரிசு வழங்குகிறார்கள். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப்பதக்கம். ஜூன் - ஜூலை மாதங்களில் போட்டி அறி விக்கப்படுகிறது. பரிசு கையெழுத்துப் பிரதி களுக்குத்தானே தவிர, புத்தகங்களுக்கு அல்ல. இப்போட்டியை ஏவி.எம் அறக் கட்டளைக்காக, சென்னையில் உள்ள





குழந்தை எழுத்தாளர் சங்கம் 1972 ஆம் ஆண்டில் இருந்து நடத்தி வருகிறது. மேல் விவரங்கள் தலைவர் 309, குழந்தை எழுத் தாளர் சங்கம், லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 1, என்ற முகவரிக்கு எழுதி னால் கிடைக்கும்.

● ***'குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் 'பாடிப் பணிவோம்!' என்ற புத்தகம் எங்கே கிடைக்கும்?***

- செல்வ மாணிக்கம்,
காரைக்கால் - 2.

செல்வி பதிப்பகம், புத்தக வெளியீட் டகம், காரைக்குடி - 623 001 என்ற முகவரிக்கு எழுதிக் கேளுங்கள். புத்த கத்தை வெளியிட்டவர்கள் இவர்களே.

● ***வலம்புரிச் சங்கு என்பது எதனால் ஆனது? இதை வைத்துக் கொண்டால் நன்மை என்பது அறிவியல் அடிப் படையில் உண்மைதானா?***

- வா. சித்திக், பூனா - 2.

எல்லா வகையான சங்குகளும், கிளிஞ் சல்களுமே சுண்ணாம்புப் பொருள்களால் (கால்ஷியம் கார்பனேட்டு) ஆனவை. சங்குகள் நீர்வாழ் மெல்லுடலிகளின் (Molluscal) தொகுதியைச் சேர்ந்த வயிற் றுக்காலி (Gastro Poda) வகுப்பைச் சேர்ந் தவைகளின் வீடுகள். வலது பக்கம் முறு கிய வாய் அமைந்த சங்குகளே வலம்புரிச்

சங்குகள். இவை மிக அபூர்வமாகவே கிடைக்கும். அதனால் இவை இருக்குமிடத்தில் நன்மை நிறைந்திருக்கும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. அதோடு திருமாலின் கையில் இருக்கும் சங்கும் வலம்புரியாகும். எனவே, இதற்குப் பெருமை. அறிவியல் அடிப்படையில் வலம்புரிச் சங்குக்கும், இடம்புரிச் சங்குக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

● ***பூமியில் முதலில் உருவான உயிர் எது?***

- கி. புண்யகோடி, தாராபுரம்.

பூமியில் முதன் முதலாகத் தோன்றிய உயிர் ஒற்றைச் செல் உயிரிகள். (Unicellular). இவைகளின் விஞ்ஞானப் பெயர் புரோட்டோசா (Protozoa) என்பதாகும்.

● ***மீன்கள் தூங்கும்போது நீந்துமா?***


- மு. கமலபதி, ஈரோடு.

சாதாரணமாக மீன்கள் தூங்கும்போது நீந்துவது இல்லை. (தொட்டிகளில் வளர்பவைகளுக்கு இது பொருந்தாது) ஆனால் டூனா வகை மீன்கள் தூங்கியபடி நீந்துபவை. எதற்கும் விதிவிலக்கு இருப்பது அதிசயம் இல்லையா?

● ***முதலில் விண்வெளியில் ஒருநாள் முழுக்கத் தங்கியவர் யார்? இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?***

- கா. பிரபாகரன், மேட்டுப்பாளையம்.

ரஷ்யாவைச் சேர்ந்த கெர்மென்டிட்டோவ் என்பவர்தான் முதன்முதலில் ஒருநாள் முழுக்க விண்வெளியில் இருந்தவர். இவர் பயணித்த விண்கலத்தின் பெயர் வாஸ்டோக்-2. தங்கிய நாள் ஆகஸ்ட் ஆறாம் நாள் 1961 ஆம் ஆண்டு.



● ***'Black Mail' என்ற மிரட்டும் செயல் சட்டப்படி குற்றம். அதற்குத் தண்டனை உண்டு என்பது எப்பொழுது ஏற்பட்டது?***

- வா. ரமணி, திண்டிவனம்.

மிரட்டுவது 'Black Mail', சட்டப்படி குற்றம் என்பது இங்கிலாந்தில் 1893 ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்டது.

● ***'Flat Screen Television' என்பது என்ன?***

- கு. செல்வதுரை, வாரங்கல்.

இந்த T.V.யை ஒரு படத்தைப் போல் சுவரில் தொங்கவிடலாம். இதை 1985 ஆம் ஆண்டு ஒரு ஜப்பானியக் கம்பெனி தயாரித்துள்ளது. இது திரவ கிரிஸ்டல் தொழில் நுட்பத்தால் (Liquid Crystal Technology) வேலை செய்கிறது. இது இன்னும் பொதுத் தயாரிப்புக்கு வரவில்லை.



சும்மா விடுவீங்களா?

விருதுநகருக்கு மேற்கே உள்ளது பாவாடி ஜமீன். இதன் பக்கம் உள்ளது எளிய நாயக்கன்பட்டி. மொத்தம் எழுபது, எண்பது வீடுகள் தான். எல்லோரும் விவசாயம் செய்து பிழைப்பவர்கள்.

அந்த ஊரைச் சேர்ந்த ஒருவர், விடுதலைப் போராட்டக் கூட்டம் ஒன்றை நடத்த முன் வந்தார். அப்படி முன் வருபவர்கள் அந்தக் காலத்தில் அரிது. அதில் பேச ஓர் இளைஞர் முன் வந்தார். அவருக்கு அதுதான் முதல் மேடைப் பேச்சு.

சாதாரணமான பேச்சுத் தமிழில்தான் பேசினார்.

"கூட்டத்தை நடத்தித் தர முன்வந்த ஊர்ப் பெரிய தனக்காரருக்கு நமஸ்காரம். உழுது பாடுபடும் உங்களைப் பார்த்துப் பேச எனக்குச் சந்தர்ப்பம் கிடைச்சது ரொம்ப சந்தோஷம். இப்போ நம்ம வீடு இருக்கு. பக்கத்து வீட்டுக்காரர் நம்ம வீட்டுக்குள் வந்து அதிகாரம் செய்தா நீங்க விடுவீங்களா என்ன? இப்படித் தான் ஆறாயிரம் மைலுக்கப்பால் இருக்கிற ஊரிலே இருக்கிற வெள் ளைக்காரன் நம்ம நாட்டுக்கு வந்தி ருக்கான்."

இவ்வாறு சாதாரண முறையில் பேசத் தொடங்கினார் அந்த இளைஞர். கூட்டத்தில் கொஞ்சம் பேர்தான் என்றாலும் அந்த இளைஞர் பேசியது எல்லோருக்கும் நன்கு புரிந்தது. ஆர்வத்துடன் கவன மாகக் கேட்டார்கள்.

"நம்ம ஊர் நிலத்தில நாம் பயிர் செய்து சாப்புடுறோம். அதே மாதிரி நம்ப ஊர் பருத்திய நாமே நூற்று, வேட்டி கட்டினா இவனுக் கென்ன?"

இப்படிக் கேள்விக் குறி போட்டுப் பேசியதை கிராம மக்கள் சிரித்துச் சிரித்து ரசித்தபடி கேட்டார்கள். இளைஞரின் இந்த முதல் மேடைப் பேச்சு இப்படி, வெற்றிகரமாக அமைந்தது. தோழர் களிடத்திலும் காங்கிரஸ் கட்சி வட்டாரத்திலும் பாராட்டுக் கிடைத் தது.

சுதந்திரப் போராட்டத்தின் தன்மையை இவ்வளவு எளிதாகப் பாமர மக்களுக்கும் புரியும்படி பேசி, மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்க்க ஆரம்பித்த அந்த இளைஞர் வேறு யாருமில்லை. 'கர்மவீரர்' என்று மக்களால் புகழப்பட்ட காமராசர்தான்.


— தியாக சாந்தன்

காட்சி - 1

(முத்து வீட்டுக் கூடம். முத்து ரேடியோ கேட்டுக் கொண்டிருக்க மணி வருகிறான்)

மணி: (வந்து கொண்டே): என்ன முத்து, மாநிலச் செய்திகள் கேட்டாய் போலிருக்கே? ஏதாவது விசேஷம் உண்டா?

முத்து: வேற என்ன விசேஷம்? நாளைக்கு பந்த் தாம். முழுகடை அடைப்பாம். பஸ், ஆட்டோ, லாரி எதுவும் ஓடாதாம். ஆமாம் மணி, நீ என்ன இந்த நேரத்துல வந்திருக்கே! பள்ளிக்கு வரப்போறதில்லையா? லீவு லெட்டர் கொடுக்க வந்திருக்கியா?



என்ன ஆதாயம்?

மணி: நான் காரணமாத்தான் வந்திருக்கேன் முத்து. நாளைக்கு ஒரு நாள் உன் சைக்கிளை இரவல் தர முடியுமான்னு கேட்கத்தான் வந்தேன்.

(முத்துவின் அப்பா வருகிறார்)

அப்பா: (வந்து கொண்டே) ஏன் மணி, உன்னிடம் கூட சைக்கிள் இருக்கு போல இருக்கே? அது என்னாச்சு?

மணி: அதை ஏன் கேட்கறீங்க அங்கிள்? நம்ம தெரு வாண்டுப் பசங்களெல்லாம் சைக்கிள் ஓட்டப் பழகறாங்க. சைக்கிள் கடைக்காரன் அவங்களுக்கு 'ஓட்டப்பழக' சைக்கிள் தர மறுத்து விட்டான். அதனால் அவங்களெல்லாம் என் சைக்கிளைக் கேட்டாங்க.

அப்பா: ஓட்டக் கத்துக்க சைக்கிளைக் கொடுத்தா சைக்கிள் என்னாறது?

மணி: இப்படியே சொல்லி எந்த சைக்கிள் கடைக்காரனும் சைக்கிளைத் தர மறுத்து, நாமும் நம்ம சைக்கிளைத் தரமறுத்தால் பிள்ளைங்க எப்படித்தான் சைக்கிள் ஓட்டக் கத்துக்குவாங்க அங்கிள்? அதனால, நான் என் சைக்கிளைத் தந்தேன். நான் பயன்படுத்தாத சமயத்

துல அவங்க எங்க தெருவிலேயே ஓட்டப் பழகினாங்க. நேற்று மாலை விளக்குக் கம்பத்துல மோதி முன்பக்கச் சக்கரம் நெளிஞ்சு போச்சு. ரிப்பேர் பண்ணத் தந்திருக்கேன். ரெண்டு நாளாகுமாம்.

அப்பா: பார்த்தியா, இதுக்குத்தான் ஓட்டப்பழகறவங்களுக்கு சைக்கிளைத் தரக்கூடாதுங்கறது.?

மணி: (சிரித்து) அங்கிள், நீங்களும் எங்க அப்பாவும் எங்க தாத்தாவோட சைக்கிளை எடுத்துத்தான் சைக்கிள் ஓட்டக் கத்துக்கிட்டதா அப்பா சொல்லியிருக்காரே! தாத்தா தன் சைக்கிளை உங்கள் இருவருக்கும் தர மறுத்திருந்தால் என்ன பண்ணியிருப்பீர்கள்? அதுவும் அந்தக் காலத்துல எல்லாம் இப்படி எல்லார் வீட்டிலும் சைக்கிள் இருக்காதாமே?

அப்பா: (சிரித்து) சரி, உன் சைக்கிளை பசங்களுக்கு ஓட்டப் பழகக் கொடுத்ததை நியாயப் படுத்திட்டே மணி. சரிதானே? அந்தப் பசங்களாவது ஒழுங்கா பொறுப்பா ஓட்டியிருக்கலாமே? இப்படி விளக்குக் கம்பத்துலயா இடிப்பாங்க?

மணி: அங்கிள், அதுகூட அவங்க வேணும்னு பண்ணலே. ஒரு முரட்டுப் பையன், நாயைக் கல்லால் அடிச்சான். அது தப்பிக்க குறுக்கே பாய்ஞ்சு ஓடியிருக்கு. அதுமேலே சைக்கிளை ஏத்திடக் கூடாதேன்னு பசங்க ஒடிச்சிருக்காங்க. கம்பத்துல மோதிருச்சு. அந்த இடத்துல நீங்களும் நானும் இருந்தால் கூட இதைத்தான் பண்ணியிருப்போம்.

அப்பா: (சிரித்து) ஆக, இதையும் நியாயப் படுத்திட்டே!


முத்து: சரி மணி. நாளைக்கு எதுக்கு என்னோட சைக்கிளைக் கேட்கறே? நாளைக்கோ பந்த்? நமக்குப் பள்ளிகூடம் கூடக் கிடையாது?

மணி: நம்ம முத்தையா சார் மனைவியை, டவுன் ஆஸ்பத்திரில சேர்த்திருக்காங்க. போனவாரம் வீட்டுல விழுந்து கால் முட்டில சில்லு விலகிப் போச்சாம். ஒரு வாரமா ஆஸ்பத்திரில தான் இருக்காங்க. நாளைக்கு ஒரு ஆபரேஷன் பண்றாங்க.



முத்து: யாரு, ரிடையர் ஆன கணக்கு மாஸ்டர் முத்தையா மனைவிக்கா? ரெண்டு பேருமே வயசானவங்களாச்சே?

மணி: அதோட, பிள்ளை குட்டிங்க இல்லாதவங்க. கவனிக்க ஆள்யாருமில்லே. இருந்தாலும், சார்தான் இப்போ மனைவியோடு ஆஸ்பத்திரியில இருக்கார். நான்தான் ரெண்டு வேளையும் சாப்பாடு கொண்டு போய்த்தரேன். ஆபரேஷன் சமயத்துல ரெண்டு பேருக்கும் தைரியம் சொல்லவும் தேவையானால் ஏதாவது உதவி பண்ணவும் நான் நாளைக்கி சைக்கிளோட ஆஸ்பத்திரியிலேயே இருந்தா நல்லாயிருக்கும்னு தோணிச்சு. அதான் உன் சைக்கிளைக் கேட்கிறேன். நாளை மறுநாள் என் சைக்கிளே கிடைச்சுடும். பந்த் இல்லேன்னா இப்படி உன்னைத் தொந்தரவு பண்ண



மாட்டேன்.

முத்து: கண்டிப்பாத் தரேன் முத்து. இன்னிக்கி ராத்திரியே நீ வந்து எடுத்துக்கிட்டுப் போகலாம்.

மணி: நன்றி முத்து. நாளைக்குக் காலையில் கிடைத்தால் போதும். நான் வரேன். நான் வரேன் அங்கிள்.

(போகிறான்)

காட்சி - 2

(முத்து வீட்டுக் கூடம். முத்து படித்துக் கொண்டிருக்க வேலன் வருகிறான்)

முத்து: அட வேலனா! வாவேலா. நீயெல்லாம் இந்தப் பக்கமே வர மாட்டியே? என்ன விசேஷம்?

வேலன்: காரியமாத்தான் வந்திருக்கிறேன் முத்து. நாளைக்கு பந்த்தாமே? கடைகள், பஸ், எ ' ,ுமே கிடையாதாமே? நம்ம பள்ளி நாடகத்தின் ஒத்திகை நாளைக்கு டவுன்ல இருக்கிற நம்ம பி.டி.சார் வீட்டுல நடக்குது. நம்ம பூபதி நடிக்கிறானே? அதைப் பார்க்கப் போகலாமேன்னுதான் சைக்கிளைக் கேட்டேன்.

முத்து: உனக்கு இல்லாததா வேலா? இன்னிக்கு ராத்திரியே வந்து எடுத்துக்கிட்டுப் போ.

வேலன்: ரொம்ப நன்றி முத்து.

(வேலன் போக, அப்பா வருகிறார்)

அப்பா: முத்து, மணிக்கு சைக்கின் தரதா சொல்லிருக்கியே... மறந்து போச்சா?

முத்து: மறந்து போகலேப்பா. முதல்ல மணிக்குத்தான் தரதா இருந்தேன். ஆனால் இப்போ வேலன் வந்து கேட்டதற்குப் பிறகு வேலனுக்குத்தான் தரதா இருக்கேன்.



"கதைப் புத்தகங்களைப் படிக்கும் போது வராத தூக்கம், பாடப் புத்தகத்தை எடுத்ததும் மட்டும் உடனே வருதே ஏண்டா?"

"கதைப் புத்தகங்கள்ல பரீட்சை வைக்கிறதில்லையே... அதனாலதான்!"

— சீர்காழி வி. ரேவதி

அப்பா: (திகைத்து) முத்து, மணி கேட்டது ஒரு பொது நன்மைக்காக. ஆனால் வேலன் கேட்டது நண்பன் நடிக்கிற நாடக ஒத்திகையைப் பார்க்க. இதை இன்னொரு நாள் கூடப் பார்த்துக் கொள்ளலாமே இல்லையா?

முத்து: அப்பா, இந்த வேலன் சாதாரண வேலன் இல்லேப்பா. காஸினோ தியேட்டர் மேனேஜர் சாமியின் பையன். எந்த சினிமாவானாலும் சரி, டிக்கெட் தன் அப்பா கிட்டே சொல்லி வாங்கித் தருவான். எல்லோருக்குமே அவன் ரொம்ப வேண்டியவன் அப்பா. அவன் தன்னோடு பேசமாட்டானான்னு எல்லாரும் ஏங்கிக்கட்டிருக்காங்க. அப்படிப்பட்ட செல்வாக்கு மிக்க வேலன் என்னைத் தேடிவந்து சைக்கிளைக் கேட்டிருப்பது பெரிய பாக்கியம்பா. சைக்கிள் வேலனுக்குத் தான். முத்துவுக்கு இல்லை. (போகிறான்.)

காட்சி - 5

(வேலனின் வீடு. வேலன் படித்துக் கொண்டிருக்க, முத்து வருகிறான்)

வேலன்: வா முத்து. என்ன சமாச்சாரம்? பள்ளிக்கு வரலையா? லீவ் லெட்டர் தர வந்தியா?

முத்து: அதெல்லாம் இல்லே வேலா. பள்ளியில உன்னைச் சுத்தி நண்பர்கள் கூட்டம் எப்பவும் இருக்கும். அதுனால தான் வீட்டுக்கு வந்தேன். வேலா... நாளைக்கு முறுவல் மன்னன் வெங்கல் படம் ரிலீசாகுது இல்லையா? அதுக்கு எனக்கு எப்படியாவது ஒரு டிக்கெட் வாங்கித்தருமபடி உங்க அப்பாகிட்ட சொல்லேன். எந்த ஷோவானாலும் பரவாயில்லே.

வேலன்: உனக்குப் பண்ணாம யாருக்குப் பண்ணப் போறேன் முத்து? அப்பா கிட்டே சொல்றேன். பிரச்னை ஏதும் இல்லைன்னா கண்டிப்பாக வாங்கித் தருவார்.

முத்து: (மகிழ்ச்சியுடன்) ரொம்ப நன்றி வேலா. இந்தா பணம்.

வேலன்: இதைப்பத்தி பள்ளியில் மத்தவங்களுக்கு எதிரில் பேசாதே முத்து. வீண் பொல்லாப்பு வரும். எல்லோரும் நாளைக்கே பார்க்கணும்னு டிக்கெட் கேட்கறாங்க. நான் மறுத்துட்டேன். எல்லோரையும் போல உன்னையும் தட்டிக் கழிக்க முடியலையே முத்து.

முத்து: (மகிழ்ச்சி நன்றி பொங்க) அது என்னுடைய கொடுப்பினை வேலா. நான் வரேன்.

(போகிறான். சுதா வருகிறாள்)

சுதா: (வந்து கொண்டே) என்னண்ணா, அப்பா ஒரு டிக்கெட் கூடத் தன்னுடைய செல்வாக்கில் வாங்கித் தர முடியாது. ரொம்பக் கெடுபிடியா இருக்குன்னு சொல்லிக்கிட்டிருக்கார். நீ முத்துவிடம் தைரியமா காசு வாங்கிக் கிட்டிருக்கே!

வேலன்: (சிரித்து)கடைசியில ஒரு டிக்கெட்டுக்கு அப்பா அனுமதி கொடுத்திட்டார் சுதா. அது மாரியப்பனோட அண்ணாவுக்கு. அவருக்கு வெளி நாட்டு பேனா நண்பர்கள் ஏராளம். அப்பப்போ வெளிநாட்டு தபால் தலைகளைத் தருவார். அதுனால அவருக்குத் தான் வாங்கித் தரப் போறேன். இந்த முத்துவுக்கெல்லாம் நான் வாங்கித் தருவேனா? அவனால் என்ன ஆதாயம் கிடைக்கும்?

சுதா: (திகைத்து) அண்ணா, பந்த் அன்னிக்கு, உனக்குத் தன் சைக்கிளைத் தந்து உதவியிருக்கானே? அதை மறந்துட்டியா?

வேலன்: ஆமாம். பொல்லாத சைக்கிள், இவன் தரலைன்னா எனக்கு சைக்கிளே கிடைச்சிருக்காதா? நான் போய்க் கேட்டால் எல்லாருமே தருவாங்க.

முத்து: (வந்து கொண்டே) வேலா, என் வாட்டர் பாட்டிலை வைச்சிட்டுப் போயிட்டேன். அதை எடுக்க வந்தப்போ உன் பேச்சைக் கேட்டேன். என்னை மன்னிச்சுக்க வேலா. எனக்கு இது வேண்டியதுதான். தன்னலம் நினைக்காத மணி, ஆஸ்பத்திரிக்குப் போய் யாருக்கோ உதவி பண்ண சைக்கிள் கேட்டான். அவனுக்கு உதவி பண்ணினால் எனக்கு என்ன ஆதாயம் கிடைக்கும் என்று கணக்குப் போட்டு சினிமா ஆசையால் உனக்கு சைக்கிளைத் தந்தேன். மணியை ஏமாற்றினேன். இப்போ உன்முறை. ஒரு டிக்கெட்டை யாருக்குத் தந்தால் ஆதாயம் கிடைக்கும் என்று நீ இப்போ கணக்குப் போட்டு என்னைக் கழித்து விட்டாய். நான் மணிக்குப் படித்த அதே பாடம் தானே?

சுதா: அண்ணா, உனக்கு ஒரு செய்தி. மாரியப்பனோட அண்ணா இனிமே உனக்கு அயல்நாட்டு தபால் தலைகளைத் தரமாட்டார்! ஏன்னா, அவர்கள் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர் வீட்டைக் காலி பண்ணச் சொல்லி யிருக்கிறாராம். அவருக்கும் பொழுது போக்கு தபால் தலை சேர்ப்பதாம். அவருடைய பெண் மாலா என் பள்ளித் தோழி. அவள்மூலம்தான் இது தெரிந்தது. அதனால அவருடைய ஆதரவைப் பெற, மாரியப்பனோட அண்ணா இப்போவெல்லாம் ஸ்டாம்பை அவருக்குச் சேர்த்துத் தருகிறாராம். அதாவது, நீ முத்துவுக்குப் படித்த அதே பாடத்தை அவர் இனி மேல் உனக்குப் படிக்கப் போகிறார்.

(முத்துவும் வேலனும் தலை குனிகிறார்கள்)

சுதா: ஆக, நீங்களும் உங்க நண்பர்களும் எல்லோருமே சுயநலவாதிகள். ஒருவருக்கு உதவி செய்ய வேண்டும் என்றால், அது அவர்களுடைய துன்பத்தை நீக்க உதவ வேண்டும் என்ற இயற்கையான மன உந்தலுடன் செய்யப்பட வேண்டும். ஓர் உதவியைச் செய்தால் நமக்குப் பின்னால் என்ன ஆதாயம் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்துச் செய்வது உதவியல்ல. வியாபாரம். மணி மட்டுமே உங்கள் கூட்டத்தில் வித்தியாசமானவன். யாருக்கோ மூன்றாம் மனிதருக்கு உதவத் துடித்திருக்கிறான். எந்த ஆதாயத்தையும் எதிர்பார்க்காது அவன் ஒருவன்தான் மனித நேயத்துடன் செயல்பட்டிருக்கிறான். முத்து, அவனுக்கு நம்பிக்கையளித்து கடைசியில் ஏமாற்றிவிட்டான். அதற்காக மணி சோர்ந்து விடவில்லை. ஐந்து கிலோ மீட்டர் நடந்துபோய் அவர்களுக்கு உதவியாக இருந்து அங்கேயே தங்கியிருக்கிறான். அதுதான் உண்மையான உதவி. நட்பினால் கிடைக்கும் பயனை அளந்து பார்த்துச் செயல்படும் உங்களைப் போன்ற நண்பர்கள் அந்தக் காலத்திலேயே இருந்திருப்பார்கள் போல் இருக்கிறது. அவர்களைத் திருடர்கள் என்று திருவள்ளுவர் சாடுகிறார். இத்தகையோரது நட்பு தேவையே இல்லை, முறித்துக் கொண்டு விடலாம் என்கிறார்.

(இருவரும் தலை குனிகிறார்கள்)

சுதா: ஆதாயம் இருந்தால் மட்டுமே உதவுவது என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் மனித வாழ்க்கை என்ன ஆவது?

முத்து, வேலன் (இருவரும்): சுதா, எங்களுக்குப் புத்தி வந்தது. நாங்கள் இனி திருடர்கள் அல்ல. மணிக்கு உதவியா நாங்களும் இருப்போம். பலன் பார்க்காது உதவுவோம்.

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வாரும் நேர்
(குறள் 813)

ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
சொல்லாடார் சோரவிடல்
(குறள் 818)

“பென்சில்”க்கு எதிர்பதம் சொல்லு?

“ஆண் சில்”தான்!

- சுவிட். ரவி



என்ன பயன்?



ஒரு சிறுவன் இருந்தான். அவனுக்கு வாழப் பிடிக்கவில்லை. காரணம், அவனுக்கு அம்மா அப்பா இல்லை. உறவினர்கள் அவனைச் சுமையாக எண்ணி வெறுத்தார்கள். சாகலாம் என்று சிறுவன் முடிவு செய்தான்.

வீட்டை விட்டுக் கிளம்பினான். ஊருக்கு வெளியே ஒரு கிணறு உண்டு. அது பாழ்கிணறு; மூடாத கிணறு! கைப்பிடி இல்லாத தரைக்கிணறு!

அந்தக் கிணற்றுக்குப் போனான். அதில் விழுந்து சாக நினைத்தான். அந்த நேரத்தில் ஏதோ சத்தம் கேட்டது. ஒரு குருடன் நடந்து வந்து கொண்டிருந்தான். தரைக் கிணறு இருப்பது தெரியாமல் அதில் விழ வந்தான்.

உடனே சிறுவன் ஓடிப்போய் அவனைக் காப்பாற்றினான். "இன்னும் கொஞ்சம் இருந்தால் கிணற்றில் விழுந்திருப்பாய்" என்றான் சிறுவன்.

"நீ பல்லாண்டு வாழ வேண்டும்" என்று குருடன் வாழ்த்தினான்.

சிறுவன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான் குருடன்.

"நான் சாக முடிவு செய்துவிட்டேன். உன் வருகையால் ஒரு நிமிடம் தாமதம் ஆகிவிட்டது. இல்லாவிட்டால் இந்த நேரத்திற்கு நான் செத்திருப்பேன்!" என்றான் சிறுவன்.

"நீ எதற்குச் சாக வேண்டும்?" என்று குருடன் கேட்டான்.

"நான் அனாதை. உறவினர்கள் என்னைச் சுமையாக நினைத்து வெறுக்கிறார்கள். நான் வாழ்ந்து யாருக்கு என்ன பயன்?" என்று கேட்டான் சிறுவன்.

"ஒரு நிமிடம் வாழ்ந்ததால் என் உயிரைக் காப்பாற்ற உதவியிருக்கிறாய். இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்தால் என் போல் ஊனமுற்ற அனாதைகள் எத்தனையோ பேருக்கு உதவியாக இருக்கலாமே? சிந்தனை செய் தம்பி" என்றான் அனாதைக் குருடன்.

மனம் மாறிய சிறுவன் குருடனின் கையைப் பிடித்துக் கொண்டு புதிய நம்பிக்கையுடன் நடந்தான்.

— நெ. த. அறிவுடை நம்பி


1. பரிசும் குழப்பமும்

'யாழிசை' திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. வண்ண பலூன்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கி அசைந்தாடின. ஜிகினாத் தோரணங்கள் பளபளத்து விளக்கொளியில் வண்ண ஜாலங்களை அள்ளி அள்ளி வீசின. மிக்கி மௌசாகவும், டொனால்டு டக்காகவும் முகமூடி அணிந்த இரண்டு சிறுவர்கள் 'யாழிசை' வாசலில் நின்று வருபவர்களைக் கரங் கூப்பி, கைகுலுக்கி, சாக்லேட் தந்து உள்ளே அனுப்பினர்.

'என்னது யாழிசை?' என்கிறீர்களா? இன்னுமா புரியவில்லை? யாழிசை என்பது அந்த அழகான பங்களாவின் பெயர்தான்.

'யாழிசை' அழகான பங்களா. கலை வேலைப்பாடு மிக்க அதன் கைப்பிடிச் சுவரும், கிரில் கேட்டும், அசைந்தாடி மணக்கும் பன்னீர் மரங்களும், குட்டைத் தென்னைகளும், தெருவோடு போகும் எவரையும் கண்டிப்பாக ஒருகணமாவது நின்று பார்க்க வைக்கும்.

வாசலைக் கடந்து உள்ளே போவோமா? வரவேற்பு அறையைக் கடந்ததும் கலையழகு நிரம்பிய பெரிய கூடம். இத்தனை பரபரப்புகளுக்கும் மையம் அந்தக் கூடம்தான். காற்றில் அசைந்து அசைந்து கிணுகிணுத்த இசையெழுப்பித் தோரணங்கள் அண்ணாந்து பார்க்க வைத்தன. நிலவே இறங்கிவந்து விட்டதோ என்ற பிரமையை ஏற்படுத்திய குண்டு ஒளி விளக்குகள், உயரமான



புவனா தேடிய

புதையல்

மதி ஒளி

நாற்காலிமேல் குட்டிக்கரணம் போட்டு வணக்கம் கூறி வரவேற்ற கோமாளி பொம்மை, மெலிதாகக் கேட்ட நர்சரி பாடல் மெட்டுகள், எல்லாமே அங்கே சிறுவர்க்கான ஏதோ ஒரு விழா நடைபெறப் போவதை உணர்த்தின.

ஆமாம். அது ஒரு பிறந்தநாள் விழாவேதான். 'யாழிசை' பங்களாவின் குட்டி அரசியான பத்து வயது புவனா என்ற சிட்டுக்குருவிக்கு அன்று பிறந்த நாள். அதைக் கொண்டாடத்தான் 'யாழிசை' இப்படி திமிலோகப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதோ, கூடத்திற்குள் வருபவர்களை கரம் கூப்பி வரவேற்று, உட்கார வைத்து, டிபன், காப்பி, ஐஸ்கிரீம் தந்து உபசரிக்கிறார்களே அவர்கள்தான் புவனாவின் பெற்றோர் ரமா, ஈஸ்வர். பிறந்த நாள் கேக்கை அழகுபடுத்தி வைப்பதிலும், வந்தவர்களை உட்கார வைப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டிருப்பவர்தான் புவனாவின் மாமா ரவி. கேக் வைக்கப்பட்டிருந்த அழகுமிக்க மேசைக்கு முன்னால் சட்டை, பட்டுப் பாவாடை பளபளக்க, முகத்தில் புன்னகை மிளிர நின்றபடி வரவேற்றுக் கொண்டிருக்கும் சிறுமிதான் புவனா.

நிமிஷத்திற்கு நிமிஷம் கூடத்தில் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஆச்சு, இப்பொழுது அது நிரம்பி வழிய ஆரம்பித்துவிட்டது. புவனாவின் மாமா ரவி, கையசைத்து புவனாவிடம் ஏதோ சைகை காட்டினார். ஆரம்பிக்கலாம், இனிமேல் காக்க வைக்கக் கூடாது என்பது அதன் பொருள். புவனா, தன் பெற்றோரைப் பார்த்தாள். அவர்களும் தலையசைத்தனர்.

புவனா, கேக் வைக்கப்பட்டிருந்த அலங்கார மேசைக்கு முன்பாக வந்து நின்றாள். குழந்தைகளும், நண்பர் குழாமும் நெருங்கிவந்து அவளுடன் நின்றனர். புவனா, கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டாள். உண்மையான பூக்களைக் கொண்ட மலர்க் கொத்தைத் தயாரித்து வைக்கப்பட்டிருப்பது போன்ற ஒரு பிரமையை உண்டாக்கிய கேக்கை எல்லோரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, மாமா ரவி, மெழுகு வர்த்திகளை ஏற்றி வைத்தார். குழந்தைகள் பெரியவர்கள் எல்லோரும் கை தட்டி, 'ஹேப்பி பர்த்டே டு யூ' பாட, வாயைக் குவித்து புவனா மெழுகு வர்த்திகளை அணைத்துவிட்டுக் கேக்கை வெட்டினாள்.

எல்லோரும் திரையைப் பார்த்துத் திகைத்துக் கொண்டிருக்க புவனா மட்டும் குழப்பத்தின் சிகரத்தில் நின்று தவித்துக் கொண்டிருந்தாள்!

முதல் துண்டைச் சின்னதாக்கி, ஆளுக்குப் பாதியாக அம்மாவும் அப்பாவும் அவள் வாயில் போட, காமிராவும் வீடியோவும் அதைப் படமாக்கிக் கொண்டன. கேக்கை, துண்டு போட்டு எல்லோருக்கும் கொடுக்க மாமா அதை எடுத்துக் கொண்டு உள்ளே போனார். நண்பர்களும் உறவினர்களும் புவனாவைச் சூழ்ந்து கொண்டு பரிசு மழை பொழியத் தொடங்கினர்.

அழகாகக் கட்டப்பட்ட வாழ்த்துப் பூங்கொத்து. கொத்துகளில் இருந்த வண்ண மலர்கள் பிளாஸ்டிக் கண்ணாடி உறைக்குள் சிரித்து மயக்கின. வண்ணப் படங்கள் நிறைந்த கதை, பாடல் புத்தகங்கள், வண்ணந்தீட்ட வைக்கும் சித்திரப் பக்கங்கள், மெக்கானோ, மௌத் ஆர்கன், கலர் பாக்ஸ், முகமூடிகள், சாக்லேட் பெட்டி, பேனா பென்சில் செட், சாவி வளையங்கள், புகைப்பட பிரேம் என்று எல்லாவிதமான பரிசுப் பொருள்களும் மளமளவென்று குவிந்தன. எல்லோருடனும் புவனா புகைப்படம் எடுத்துக் கொண்டாள். நேரமாக ஆக, கூட்டம் கரையத் தொடங்கியது. ஒவ்வொருவராக விடை பெற்றுக் கொண்டு சென்றனர்.

இப்பொழுது அந்த அழகிய கூடம்



காலி. ஒரு மணிக்கு முன், பரபரப்போடு மகிழ்ச்சி நிறைந்து காணப்பட்ட அந்த மிகப் பெரிய கூடத்தில், புவனா மட்டுமே இப்பொழுது தனியாக இருந்தாள். அவளும்கூட அலுப்பும், களைப்பும் தாங்காது சோபாவில் சாய்ந்து கிடந்தாள். புதுச் சட்டை, பாவாடையைக் கூடக் கழற்றாமல் தூக்க மிகுதியால் சோபாவில் சரிந்து கிடந்தாள். அவளுக்கு அருகே, பிறந்த நாளுக்கென நண்பர்களும் உறவினர்களும் கொண்டு வந்து தந்துவிட்டுப் போன பரிசுப் பொருள்கள் குவிந்து கிடந்தன.

பெற்றோரும், மாமாவும் மற்றவர்களும் அலங்காரங்களைக் கவனமாகக் கழற்றி வைப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

அரை மணிக்குள் அப்பாவும் அம்மாவும் மாமாவும் தங்கள் வேலைகளை முடித்து விட்டார்கள். புவனா புது உடைகளைக் கூடக் கழற்றி வைக்காமல் சோபாவில் சாய்ந்து உறங்குவதை அப்பொழுதுதான் அம்மா' பார்த்தாள்.

"புவனாக் கண்ணு, புதுச் சட்டையோடு படுத்துத் தூங்கக் கூடாதுன்னு பெரியவங்க சொல்லுவாங்கம்மா. புதுசைக் கழற்றி உடை மாத்திக்கிட்டுப் படுத்துத் தூங்கும்மா" என்றாள் அம்மா.

மாமா, மின்விசிறியை வேகமாக்கி விட்டுத் திரும்பினார்.

பெரிய அட்டைப் பெட்டியைக் கொண்டு வந்து, குவிந்து கிடந்த பரிசுப் பொருள்களை அள்ளிப் போட்டு ஓரமாக வைத்தார் மாமா.

"அப்பா, என்னை ஏமாத்த முடியாது. நான் கேட்டிருந்த பரிசு எங்கே?" என்று தூக்கம் கலைந்தவளாக சோபாவில் உட்கார்ந்து கொண்ட புவனா கேட்டாள். அம்மா அவளைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள்.

"நான் ஏமாத்தலே புவனாக் கண்ணு. நீ கண்ணை இறுக மூடிக் கொண்டு இருநூறு வரை எண்ணிவிட்டுத் திறந்து பார். நீ கேட்ட பரிசுப் பொருள் உன் கண் முன்னால் இருக்ககும்'' என்ற அப்பா, மாமா ரவிக்கு ஏதோ சைகை காட்டினார்.

புவனா கண்களை மூடிக் கொண்டு உரக்க எண்ணத் தொடங்கினாள்.

ரவி பக்கத்து அறையில் இருந்து, குட்டி பீரோ உயரத்திற்கு ஒரு பொருளைத் தள்ளிக் கொண்டு வந்தார். ஆமாம், அதற்குத் தள்ள வசதியாக சக்கரங்கள் வைத்த கால்கள் இருந்தன. அத்தனை உயரமான அது, ஜிலுஜிலுக்கும் பூக்கள் அச்சிடப்பட்ட வண்ணக் காகிதத்தால் சுற்றப்பட்டு, பார்த்தாலே 'பரிசுப் பொருள்' என்று சொல்லும்படி இருந்தது.


மாமா அதை நகர்த்தி வந்து, கண்களை மூடியபடி எண்ணிக் கொண்டிருந்த புவனாவுக்கு அருகில் வைத்து விட்டு அப்பாவுக்கு அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

புவனா நூற்றி ஐம்பத்தொன்றைத் தாண்டிக் கொண்டிருந்தாள்.

"சூ, மந்திரக்காளி! புவனா கேட்ட பரிசுப் பொருளைக் கொண்டு வந்து இங்கே வை" என்று வேடிக்கையாகக் கூறிய அப்பா, "புவனா, இனிமேல் கண்களைத் திறந்து பார்" என்றார்.

கண்களைத் திறந்து பார்த்த புவனா, மகிழ்ச்சிப் பெருக்கில் ஓடிவந்து அப்பாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். "எங்க அப்பா நல்ல அப்பா! எங்கும் காணா தங்க அப்பா!" என்று பாடினாள்.

"மாமா, வாங்க மாமா. ரெண்டு







"நீ போஸ்ட்மேனாவா ஆகப் போறே! ஏண்டா?"
"பொங்கலுக்குக் கூட வேலை இருக்கும். அம்மா செய்யற பொங்கல், பலகாரங்களைச் சாப்பிடறதிலிருந்து தப்பலாமே?"
- வாண்டுதாசன்

பேருமா இதைப் பிரிக்கலாம்" என்று புவனா கூறியதும் ரவி எழுந்தார். இருவரும் மிகவும் கவனமாக 'செலோ டேப்' போட்டு ஒட்டப்பட்டிருந்த ஜிலுஜிலு காகிதத்தைப் பிரிப்பதில் முனைந்தனர். அம்மா உள் வேலைகளைக் கவனிக்க எழுந்து சென்றாள்.

அரை மணி கழித்து அம்மா திரும்பிய போது பிரிக்கப்பட்ட அந்தப் பரிசுப் பொருள் நின்று கொண்டிருந்தது. அது ஒரு டீ.வி. ஸ்டாண்ட்! சாதாரணமான டீ.வி. ஸ்டாண்டு அல்ல அது. 'ரோஸ் வுட்' என்ற விலைமிக்க சிவப்பு மரத்தால், கலை நுணுக்கத்தோடு உருவாக்கப்பட்டிருந்த ஸ்டாண்டு அது. கால்கள், சட்டங்கள், என்று எல்லா இடங்களிலும் அதைச் செய்தவரின் கலைத் திறமை கவிதை பாடியது. கலை கொஞ்சும் அற்புதப் படைப்பாக கூடத்திற்கே புது அழகை ஊட்டி நின்றது அந்த டீ.வி. ஸ்டாண்டு.

சிறுமியானாலும் புவனாவுக்கு நல்ல கலை உள்ளம். கலைத் திறமைகளைக் கண்டு களிப்பதிலும் பாராட்டுவதிலும் அவளுக்கு ஈடுபாடு அதிகம். வரவேற்பு அறையில் உள்ள பொருள்களும், அமைத்திருந்த விதமும் அவளது கலை ஆர்வத்தை உணர்த்தப் போதுமானவை.

அவர்கள் வீட்டில் டீ.வி. இருந்தது. வீடியோ படம் போட்டுப் பார்க்க வி.சி. ஆரும் இருந்தது. இவை எல்லாம் தனித் தனியே ஒரே ஷெல்பில் இருந்தன.

"அப்பா, டீ.வி., வி.சி.ஆர்., வீடியோ கேஸட்டுகளை வைக்கும் பிரிவு என்று இந்த மூன்றையும் வைக்கும்படி ஓர் அழகான மர ஸ்டாண்டு வேணும்பா. அது சாதாரண ஸ்டாண்டாக இல்லாமல், கலை அழகு நிறைந்ததாக இருக்க வேண்டும். இந்தக் கூடத்திற்குப் புது அழகு தருவதாக இருக்க வேண்டும்" என்று அப்பாவிடம் கேட்டிருந்தாள் அவள்.

"இந்த மாதிரி ஒரு ஸ்டாண்டை உன் பிறந்த நாள் பரிசா வாங்கித் தரேம்மா" என்றிருந்தார் அப்பா. அது தான் இது.

'ரொம்ப அழகா இருக்குப்பா... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்குப்பா...' என்று மனப்பூர்வமாகப் பாராட்டினாள் புவனா.

ஆனால், கலையழகு மிளிர்ந்த அந்த ஸ்டாண்டில் பரபரப்பான ஒரு பெரிய கதையே ஒளிந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை புவனாவால் அப்பொழுது உணர முடியவில்லை. எப்படி முடியும்?

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. பள்ளி விடுமுறை. காலை எழுந்தது முதல் பரிசுப் பொருட்களோடு ஐக்கியமானாள் புவனா. தனக்கு வந்திருந்த அத்தனை பரிசுகளிலும் ஏதோ ஒன்றிரண்டை மட்டும் வைத்துக் கொண்டு, சாக்லேட் பெட்டி, வண்ணப் பெட்டி, பேனா, பென்சில், பொம்மைகள், புத்தகங்களையெல்லாம் அருகே இருந்த அனாதை இல்லத்துக்கு அனுப்பி வைத்தாள். அப்பா பரிசளித்த அந்தக் கலையழகுமிக்க டீ.வி. ஸ்டாண்டை எடுத்து, டீ.வி.யையும் மியூசிக் செட்டையும், வி.சி.ஆரையும் அதில் வைத்து அழகு பார்த்தாள். கூடத்தில் எந்த இடத்தில், எந்தக் கோணத்தில் இருந்தால் அது இன்னும் அழகாக இருக்கும் என்று யோசித்து, யோசித்து இப்படியும் அப்படியுமாக நகர்த்தி வைத்துப் பார்த்தாள்.

அந்தக் கூடத்தில் முன்பே இருந்த மற்ற சோபா செட்டுகள் எல்லாம் கூட கலையழகு கொண்டவைதான். அவற்றுக்குப் பொருந்தும்படி அவைகளை எல்லாம் தூக்கி அடிக்கும்படி இந்த ஸ்டாண்ட் இருந்ததில் புவனாவுக்கு மிகவும் மனநிறைவு. அம்மாவை அழைத்து, "அம்மா, இதைப் பாருங்களேன்! இங்கே உள்ள மற்ற சோபா செட் பொருள் களோட இந்த ஸ்டாண்ட் எவ்வளவு அழகா பொருத்தமாக அமைந்துவிட்டது!" என்று தன் வியப்பையும் மகிழ்ச்சி யையும் வெளியிட்டாள்.

புவனா விரும்பியபடி இடம் பார்த்து ஸ்டாண்டை வைக்க அம்மா உதவினாள். வி.சி.ஆரில் கேஸட் போட்டுப் படம் பார்க்க வேண்டும் என்ற ஆவல் புவனாவுக்குத் தோன்றியது. வீடியோ கேஸட் ஒன்றை எடுத்துக் கொண்டு ஸ்டாண்டுக்கு அருகில் சென்றாள்.

மேலே டீ.வி., அதற்குக் கீழே வி.சி. ஆர். பெட்டி, அதற்கும் கீழே வீடியோ கேஸட் தட்டு. வீடியோ கேஸட் தட்டில் கையை வைத்து, பக்கவாட்டில் நகர்த்திய போது புவனாவின் கையில் ஏதோ தட்டுப்பட்டது. உள் பலகையில் ஒரு கதவு போலத் தோன்றவே இழுத்துப் பார்த்தாள். திறந்து கொண்டது. கையை விட்டுப் பார்த்தாள். அந்த அறைக்குள் அறை போல அதற்குள் ஒரு மூடிய பெட்டிக் கதவு! அதனுள்ளும் கைவிட்ட போது ஏதோ டப்பா போலக் கையில் படவே, வெளியில் இழுத்துப் பார்த்தாள்! அவளது விழிகள் வியப்பில் விரிந்தன!

அது ஒரு வீடியோ கேஸட்! உடனே வியப்புக் கூக்குரல் இட்டாள் புவனா. எல்லோரும் ஓடிவந்தனர்.

"அப்பா... அம்மா... மாமா இங்கே வந்து பாருங்களேன்...! வீடியோ கேஸட் தட்டுக்கு உள்ளேயே மரத்தடுப்புக்குள் ஒரு வீடியோ கேஸட் இருக்கு! இந்தக் கேஸட் எப்படி வந்தது? நீங்க பாக்கலியாப்பா?'' என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைத் தொடுத்தாள் புவனா.

அப்பா திகைத்துப் போய் நின்றிருந்தார். அதற்குள் எப்படிக் கேஸட் வந்தது என்பது அவருக்கும் புரியவில்லை. ஆனால், அவர் அந்த ஸ்டாண்டை பழைய கலைப்பொருட்கள் விற்கும் கடையில் இருந்துதான் வாங்கி இருந்தார். எனவே, அதற்குள் தவறுதலாக எப்படியோ அந்த கேஸட் தங்கியிருக்கலாம் என்று எண்ணியவராய், "பழைய மரச் சாமான்கள் விற்கும் கடையில் இதைப் பார்த்தேம்மா. வேலைப்பாடு ரொம்ப நன்றாக இருக்கேன்னு பார்த்தேன். நீயும் கேட்டிருந்தாயா... 'சரி'ன்னு வாங்கி வார்னிஷ் பண்ணித் தரச் சொல்லி எடுத்து வந்தேன். அதற்குள் எப்படியோ இந்த கேஸட் இருந்திருக்கிறது!'' என்று திகைத்தார் அப்பா.

கேஸட்டை வாங்கிப் பார்த்தார். கேஸட்டின் மேல் உறை மிகவும் அழுக்காக, நைந்து போன நிலையில் இருந்தது. சில இடங்களில் கரைந்து போய்க் கூட இருந்தது. அப்படியே விட்டு விட்டார்களோ?

"ரொம்பப் பழைய கேஸட் போல இருக்கும்மா. தூக்கிப் போட்டுட்டு வேறே கேஸட்டைப் போட்டுப் பாரு..." என்றார் அப்பா.

புவனாவுக்கு ஏனோ அந்தப் பழைய

"சமூகவியல் பாடத்திலே மட்டும் குறைச்சலா மார்க் வாங்கி இருக்கியே, ஏன்?"

"என் பக்கத்தில் இருந்து பரீட்சை எழுதிய பாபுவுக்கு அந்தப் பாடம்தானே சரியா வராது!"

- கு. அருணாசலம்





"சாப்பிட முடியாத ரொட்டி எது...?"

"தெரியலியே...!"

"சுவரொட்டி!"

- ஜி. புவனேஸ்வரி, அரக்கோணம்

கேஸட்டையே போட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது...

"இருக்கட்டும்பா. இதையே முதல்ல போட்டுப் பார்க்கலாம்பா" என்றாள்.

"இத்தனை பழசான கேஸட்டைப் போட்டால் வீடியோ கெட்டுடும்மா" என்றார் அப்பா.

"நம்ப வீடியோதாம்மா கெடும்... அப்பா சொல்றது சரி" என்று அம்மாவும் தடுத்தாள்.

புவனா கேட்பதாக இல்லை. "இல்லேப்பா. எனக்கு என்னவோ இதைப் போட்டுப் பார்க்கணும் போல ஆவலா இருக்கு... எத்தனை மோசமான கேஸட்டாக இருந்தாலும், நம்ம வி.சி.ஆர். அதைச் சரியாக்கிக் கொண்டு நன்றாகக் காட்டும் அமைப்பு உடையதுப்பா..." என்று பிடிவாதமாகவும் கெஞ்சலாகவும் கூறிவிட்டு கேஸட்டைப் போட்டு 'ஆன்' பண்ணினாள்.

தங்களை அறியாமல் எல்லோருடைய கவனமும் டி.வி திரையில் பதிந்தது.

சில நொடிகள் திரையில் ஒன்றும் தெரியவில்லை... பிறகு...

கலைநயம் மிக்க, புராதனமான கட்டிடங்களும் அழகிய தெருக்களும் அடுத்தடுத்துத் திரையில் தெரிந்தன. எல்லோருக்குமே தொடர்ந்து பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. இடையிடையே அழிந்துபோன பகுதிகளோடு திரையில் காட்சிகள் தொடர்ந்து தெரிந்தன. விழிகளை அசைக்க மறந்து திரையையே அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

திரையில்... அரண்மனை போன்ற ஒரு மாளிகை தோன்றியது... அலங்காரச் சர விளக்குகளும் அழகழகான பீங்கான் ஜாடிகளும், யானைத் தந்தம் தாங்கிய ஆளுயரக் கண்ணாடிகளும், புலித் தோலும் மான் தலைகளும், வடிவழகான சிற்பங்களுமாக அந்த மாளிகையின் உட்புறத் தோற்றத்தைக் காணக் காண ஏதோ வரலாற்றுக் கால அரண்மனைக்குள் சென்று பார்ப்பது போலத்தான் எல்லோருக்கும் தோன்றியது.

ஆனால் புவனாவுக்கோ, மனதுக்குள் இனம் அறியாத பரபரப்பு! திரையில் தெரிந்த மாளிகை தனக்கு மிகவும் பழக்கப்பட்ட இடம் போன்ற உணர்வு அவளுள் எழுந்தது. எல்லாமே தனக்கு நன்கு அறிமுகமான, தான் இருந்து பழகிய இடம் போலவே தோன்றின!

இவைகளை எப்போது பார்த்திருக்கிறோம்! எங்கு பார்த்திருக்கிறோம்? எப்படிப் பார்த்திருக்க முடியும்? என்றெல்லாம் அந்தப் பிஞ்சு மூளையில் குழப்பம் ஏற்பட்டது.

அது பிரமையோ என்று முதலில் எண்ணினாள். ஆனால் காணக் காண அது தனக்கு முன்பே நன்கு அறிமுகமான மாளிகையே என்ற உணர்வு உறுதிப்பட்டது. ஆனால் எங்கு, எப்படி, எப்போது என்பதுதான் தெரியவில்லை. அவளுடைய குழப்பத்தை மற்றவர்களால் உணரக் கூட முடியவில்லை.

எல்லோரும் திகைப்புடன் திரையைப் பார்த்துத் திகைத்துக் கொண்டிருக்க புவனா மட்டும் குழப்பத்தின் சிகரத்தில் நின்று தவித்துக் கொண்டிருந்தாள்!

(தொடரும்)



உனக்கு ஒரு பரிசும் தரப் போகிறேன். மந்திர தந்திரங் களை மட்டும் இதோ பார்....
இந்தக் கார்கோடகனை உனக்கு அடிமையாக்குகிறேன். ஏழுதலை நாகமான இதன் விஷமூச் சிலே மனிதர்கள் சாம்பலாகிவிடுவார் கள். இனி உனக்கு இது பாதுகாவல னாக இருக்கும்.
ஆதித்தனை எப்படியாவது விடுவித்தாக வேண் டும் என்ற முடிவோடு குள்ளன் காளி அங்கி ருந்து கிளம்பினான்.
மரகதச்சிலை - 3
கதை : வாண்டுமாமா
சித்திரம் : சுப்பு
மந்திரவாதி நீலகேசியின் சூழ்ச்சியி னால் ஆதித்தனிடமிருந்து பிரிக்கப் பட்டு, கானகத்தின் மற்றோர் பகுதி யில் கொண்டுவந்துவிடப்பட்ட உண் மையான நிர்மலா என்ன ஆனாள் என்பதை இனி பார்க்கலாம்.
பறவைகளின் இனிய ஓசையினால் கண்விழித்த அரசகுமாரி நிர்மலா, தான் தன்னந்தனியே இருப்பதைக் காணத் தவித்துப் போனாள்.


நேற்று நான் படுத்துத் தூங்கிய இடம் இதுவல்ல. இங்கு ஆள் அரவமே காணோமே! ஆதித்தன், காளி, கிழவர் குடிசை எல்லாம் எங்கே? என்னை இப்படித் தனியே விட்டுப் போகக் கூடி யவரல்லவே ஆதித்தன்!
எங்கு தேடியும் ஆதித்தனைக் காணவில்லையே! ஒருவேளை அவருக்கு ஏதாவது ஆபத்தோ?
என்னால் இனி ஓர் அடியும் நடக்க முடி யாது. கால்கள் துவண்டு தள்ளாடு கின்றன.
ஐயோ! அதென்ன - பயங்கரமான கர்ஜனை?
அனல் கக்கும் விழிகளுடனும், ஆவென்று பிளந்த வாயுடனும் ஒரு சிங்கம் தன்னை நோக்கிப் பாய்ந்து வருவதைக் கண்ட நிர்மலா, அப்படியே மயங்கி விழுந்து மூர்ச்சையானாள்.


நினைவிழந்து கிடக்கும் நிர்மலாவின் அருகில் வந்த சிங்கம், அவளை ஏதும் செய்யாமல் அவள் அருகிலே படுத்துக் கொண்டது. மயக்கம் தெளிந்து கண்வி ழித்த நிர்மலா -
மிருகராஜனே! அநாதரவான அபலை என்று அறிந்து கொல்ல மனமின்றி எனக் குக் காவலாக இருக்கிறாயா?
யாருமற்ற எனக்கு இனி நீயே துணை... அதோ... அது யார் அவர்?
ஜுளவரசர் ஆதித்தரல்லவா? நிஜம்தானா? நான் காண்பது கனவில் லையே!


சிங்கத்தினால் காப்பாற்றப்பட்ட நிர்மலா - மயக்கம் தெளிந்தபோது ஆதித்தனைக் காண்கிறாள்....
இளவரசே, என்னைத் தனியே விட்டுவிட்டு எங்கு சென்றீர்கள்? கிழவரின் குடிசையிலிருந்தவள் வேறு ஏதோ.... ஓர் இடத்துக்கு எப்படிப் போனேன்? உங்களைக் காணாமல் நான் தவித்த தவிப்பு...?
கவலைப்படாதே நிர்மலா. நீ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாய். தொலைவில் நீலகேசியைப் போல ஓர் உருவம் தெரிந்தது. துரத்திக் கொண்டு சென்றேன். ஆனால் ஏமாற்றம். அது நீலகேசியல்ல. உன்னை விட்டுப் போய் விடுவேனா நிர்மலா?
நிர்மலா! இது இந்தச் சிங்கம் ஏது? என்னைப் பார்த்துப் பயங்கரமாக உருமுகிறதே?
சிங்கராஜனே! கோபம் கொள்ளாதே! அவர் நம்மவர்தான்...



அப்போது எங்கிருந்தோ தோன்றிய ஒருவன் -
நில் அப்படியே! நீதானே ஆதித்தன் என்ற அயோக்கியன்?
என் சகோதரர்கள் - சிங்கமுகன், புலிக்கண்ணனைக் கொன்றதற்குப் பழி வாங்க வந்திருக்கிறேன். என் பெயர் வேங்கை மார்பன். எடு உன் வாளை.
வேங்கை மார்பா! வீண் சண்டை ஏன்? நடந்ததை மறந்து மன்னித்துவிடு.
வேங்கை மார்பன் ஆதித்தனை அடித்து வீழ்த்த, ஆதித்தன் நீலகேசியாகிறான்!


ஐயோ! இத்தனை நேரம் நான் ஆதித்தன் என்று எண்ணியது, உருமாறிய நீலகேசியல்லவா? ஏமாந்து போக இருந்தேனே! ஆதித்தனோடு காளியைக் காணா தபோதே - வீண் சண்டைக்கு வந்தவனிடம் மன்னிப்புக் கேட்ட போதே சந்தேகப்பட்டேன். இவனி டமிருந்து தப்பியாக வேண் டுமே..?
ஐயா, நாகநந்தினியின் உத்திரவுப்படி நான் நடந்து கொண்டேன். உங்கள் உரு மாற்றம் வேறு என்னை ஏமாற்றிவிட்டது. மன் னிக்க வேண்டும்...!
முட்டாள்! என் திட்டத்தையெல்லாம் தரைமட்டமாக்கி விட்டாய். சூசகமாக நான் அறிவித்தும் தெரிந்து கொள்ளாத மடையா! தப்பியோடும் அவளை எப்படி யாவது பிடித்துக் கொண்டு வா !... போ!
நாகநந்தினியால் ஏவிவிடப்பட்ட வேங்கை மார்பன், ஆதித்தனைப் போல உருமாறி வந்திருந்த நீலகேசியைப் புரிந்து கொள்ளாமல் அடித்து வீழ்த்த - பிறகு உண்மை தெரிந்து மன்னிப்புக் கோருகிறான். இவர்களிடமிருந்து தப்பிஓடும் இளவரசி நிர்மலாவை வேங்கைமார் பன் விரட்டி வந்து பிடித்தபோது....


...நிர்மலாவுக்குப் பாதுகாப்பாக வந்துகொண்டிருந்த சிங்கம் அவன் மீது பாய்கிறது. மாயங்களில் வல்ல வேங்கைமார்பன் சிங்கத்தோடு போராடி, அதைக் கொன்றுவிட்டு நிர்மலாவைச் சிறைப்படுத்திக் கொண்டு போகும்போது....
ஐயோ! என்னைக் காப்பாற்றுவாரில்லையா?
அது ஒரு பெண்ணின் அபயக் குரல் அல்லவா?
அயோக்கியனே! அபலைகளிடம் அவதூறாகவா நடந்து கொள்ளுகிறாய்?
இதென்ன விந்தையான பிராணிகள்! இவற்றோடு போராடுவது எப்படி?




அவன் ஓடிவிட்டான். இனிப் பயமில்லை.
குதிரை, ஆடு, மான் இவற்றின் உடலும் மனிதத் தலையும் கொண்ட விசித்திரப் பிறவிகளைக் கண்டு பயந்து வேங்கை மார்பன் நிர்மலாவை விட்டுவிட்டு ஓட்டமெடுக்க அந்த மிருக மனிதர்கள் நிர்மலாவிற்கு அடைக்கலமளிக்கின்றனர்.
உங்கள் அன்புக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!
நாட்கள் கழிகின்றன
ஆதித்தனை எங்கே தேடுவேன்? என் பெற்றோருக்கு எப்படி விடுதலை கிடைக்கும்? என் கதி?
காட்டு மனிதர்களிடையே நிர்மலாவிற்கு ஒரு குறையுமில்லை. ஆனால், உள்ளத்தில் நிம்மதி இல்லை. ஒரு நாள் நிர்மலாவின் முன் அழகே வடிவான ஓர் இளைஞன் தோன்றினான்.


யார் நீ? இந்தப் பகுதிக்கு மனிதர்கள் யாரும் வரமாட்டார்களே? நீ எப்படி?
என் பெயர் பத்மநாபன். என்னைக் கண்டு பயமோ ஐயமோ கொள்ள வேண்டாம். என்னால் யாருக்கும் எவ்விதத் தீங்கும் நேராது. உங்கள் பாதுகாப்பில் இருக்கும் இந்த அழகிக்கு ஏதாவது உதவி தேவையானால் மகிழ்ச்சியோடு செய்கிறேன்.
உங்கள் தோற்றம் என் மனதில் நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது....
தன் சோகக் கதைய்ய அவனிடம் கூறுகிறாள் நிர்மலா.
இனி நிர்மலாவை உங்கள் பொறுப்பில் ஒப்படைத்து விடை பெறுகிறோம்.
கவலையே வேண்டாம். உங்கள் அன்பை என்றும் மறக்கவே மாட்டோம்.


ஐயா பெரியவரே! நீங்கள் விறகு வெட்டும்போது குதிரை மீது யாராவது ஓர் இளவரசர் போவதைப் பார்த்தீர்களா?
ஒரு நாள் - நீங்கள் குறிப்பிடும் அரச குமா ரனை ஓர் ஓடைக் கரை யில் கண்டேன். ஒரு முரடன் அவனைப் படு காயப்படுத்துவதைப் பார்த்து உதவப் போன என்னையும் ஓட்டிவிட்டு ஓடிப் போனான்.
காயமடைந்தது ஆதித்தனாக இருக் கலாமோ என்று எண்ணி, கிழவன் காட்டிய திசையில் ஓடுகிறார்கள். மந்திரவாதி நீலகேசியே அந்த விறகு வெட்டி என்பது பாவம், அவர்களுக்கு எப்படித் தெரியும்!
விறகுவெட்டிக் கிழவன் குறிப்பிட்ட முரடன் இவனாகத்தான் இருக்க வேண்டும். என் வாள் முனையில் அவனைப் பேச வைக்கிறேன், வா....


ஐயோ! இவன் என்னைக் கட்டி இழுத்துச் சென்ற கொடியவ னல்லவா...?
நிர்மலா பீதியடைந்ததைக் கண்ட பத்மநாபன் வேங்கை மார்பனோடு போராடி அவனைத் தன் வாளுக்கு இரையாக்குகிறான். அதற்குள் நிர்மலா..
நில் நிர்மலா, ஓடாதே. உன் னைத் துன்புறுத்தியவனை ஒழித்துக் கட்டிவிட்டேன்... பயப்படாதே...
பீதி அடைந்து ஓடும் நிர்மலா வைத் தடுத்து நிறுத்தி, அவள் பயத்தைப் போக்கிய பத்மநாபன் அவளுடன் பயணத்தைத் தொடருகிறான். ஒருநாள் தொலைவில் குள்ளன் காளி வருவதைக் கண்ட நிர்மலா எல்லை இல்லா மகிழ்ச்சியடைந்தாள்.




உன்னைக் கண்டது எத்தனை ஆனந்தமாக இருக்கிறது! அவர் உன் தோழர் இளவரசர் எங்கே காளி?
அதை எப்படிக் கூறுவேன் இளவரசி? நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது! உங்களால் தாங்க முடியாது.
குள்ளன் காளி நடந்தவற்றை நிர்மலாவிடம் விவரிக்க...
ஐயோ! எனக்கு உதவ வந்த உங்களுக்கு இந்தக் கதியா? இந்த வீரவாளும் கூடவா உங்களை வஞ்சித்து விட்டது?
நிர்மலா! நீ தைரியத்தோடு செயல்பட வேண்டிய தருணம் இது. கண்ணீர் வடிப்பதைவிட, காரியத்தை முடிப்பதே முக்கியம். ஆதித்தனை அந்த அரக்கனின் பிடியிலிருந்து விடுவிப்பதே இனி நம் லட்சியமாக இருக்க வேண்டும்.
பத்மநாபனும் நிர்மலாவும் குள்ளன் காளி பின்தொடர, மலை விழுங்கியின் வெண்கலக் கோட்டையை நோக்கிப் பயணமாகிறார்கள்.
(தொடரும்)

சிரிப்...

"தலை வலி தாங்கலை சார்."
"கடைசீ பெஞ்சல போய்ப் படுத்துக்க."
"இங்கே இருந்தால் தலைவலி தீராது சார்... நான் வீட்டுக்குப் போறேன் சார்!

- சீர்காழி வி. ரேவதி.






"தம்பி, நீ எந்த வகுப்புப் படிக்கிறே?"
"ரெண்டாங்கிளாஸ் படிக்கிறேன். மழை வந்தால் அஞ்சாங்கிளாஸ் போயிடுவேன்!"
"அது எப்படி?"
"மழை வந்தால் 2ஆம் கிளாஸ் ஒழுகும். அதனாலே 5ஆம் கிளாஸ் போயிடுவேன்!"

- இரத்தினம்.


"உனக்கு பிடிச்ச ஊர் எது?"
"'வால்' பாறை!"

- எஸ். முகம்மது யூசுப்.




"ஏண்டா, ஏழாவது ரேங்க் வாங்கிட்டு வந்திருக்கிறியே, முதல் ரேங்க்' எப்ப வாங்குவே?"
"அந்த ஆறு பேரும் வராமல் இருந்தால்!"

- இரத்தினம்.



"சார்... டீவி. ரிப்பேர் பண்ணுவேன் சார்!"
"வேண்டாம்பா அது நல்லாவே இருக்கு!"

- இரத்தினம்



சார் தபால்!

சந்தீப் எங்கள் நினைவில் நிலைத்து நிற்பான். முரட்டு ராஜாவுக்காக எங்களைக் கண்கலங்க வைத்துவிட்டாரே ஆசிரியை! - விருத்தாசலம் இரா. பிரசன்னகுமார், கீழ்மணக்குடி ஜெ. தங்கராணி, காவேரிப்பட்டணம் விசாலாட்சி, நன்செய் இடையார் த. குணசங்கரன், விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், கொத்தங்குடி செ. இராஜசேகரன், ஆரணி ப. ஞானமூர்த்தி, திருக்கண்ணங்குடி சரவணகுமரன், கன்னியாங்குறிச்சி இராம. பரமேஸ்வரன், மற்றும் பலர்.

தூங்கி விட்டீர்களா?

ரவிவர்மாவின் உருவத்தை எங்களுக்குக் காட்டியதற்காக நன்றியோ நன்றி! - சிவகங்கை மா. பாஸ்கர், சிறுவை தா. கண்ணப்பன், திருக்கண்ணங்குடி ஏ. ராகவேந்திரா, ஏழுகிணறு எஸ். பாலாஜி மற்றும் பலர்.

கோடை விடுமுறைப் போட்டி - I என்பதற்குப் பதில் II என்று வந்திருக்கிறதே! ஆசிரியரே தூங்கிவிட்டீர்களா? - கிளியனூர் வா. சிதம்பரம், விருத்தாசலம் இரா. பிரசன்னகுமார் மற்றும் பலர்.

48 - ஆம் பக்க ஜோக் ஏற்கெனவே கோகுலத்திலேயே வந்திட்டது சார்! - வியாசர்பாடி மா. ஆரோக்கியராஜ்,

வாண்டுமாமாவின் மரகதச் சிலை, சினிமா பார்ப்பது போல் இருக்கிறது. கதையைவிட படங்கள் சூப்பர் சார்! - குன்றக்குடி வா. செல்லப்பா, வழுதூர் நா. திருமால், புதுவை கா. வேட்டியப்பன், பவித்திரமாணிக்கம் டி.முருகேசன், கொத்தங்குடி செ. இராஜசேகரன், மற்றும் பலர்.

மலை மொங்கன் பற்றிய கதை, அறிவியல் குவியல் சார்! - வில்லிபுத்தூர் மா. சுப்ரமணி, ஆயாம்பட்டி து. குப்பையன், கச்சிராபாளையம் கவிகம்பன், ஆரணி ப. ஞானமூர்த்தி, ஆரணி -கே. யுவராஜ், மற்றும் பலர்.

திருக்குறளை நாடகமாகவும் எளிதில் மனதில் பதிய வைக்க முடியும் என்பதைச் சாதித்துக் காட்டிவரும் நாடகாசிரியர் பெயரை வெளியிடவில்லையே! ஏன்? - கல்பாக்கம் கு. முகம்மது கனி, இரியஞ்சேரி கா. மஞ்சுளா, சின்னாளம் பட்டி பா. மாயாண்டி நாடார், விருத்தாசலம் இரா. பிரசன்னகுமார், நன்செய் இடையார் த. குணசேகரன், சோழன் மாளிகை கு. கருணாநிதி, மேலப்பாதி கோ. கேசவமணி, கனிகை கற்பனை அமுதன்,

பரிசுக்கதைகள் ஒவ்வொன்றும் போட்டியின் பெருமைக்குச் சான்று பகர்கின்றன - வடலூர் கா. பெருமான்சாமி, தாராபுரம் மா. சின்னவேலன், விருத்தாசலம் பிரபாகர்.

'சுவாசம்' எத்தனை அறியாத செய்திகளைத் தந்திருக்கிறது சார்! - பொன்மலை மா. ரமணி, கச்சிராபாளையம் ஜெ. முருகன், நீரடித்தான் வி. பார்த்திபன், நன்செய் இடையார் த. குணசேகரன், குடந்தை எஸ். ஆர். நாதன், மற்றும் பலர்.

என்ன சார், பிருந்தாவனக் கவியரங்கத்தை நிறுத்திவிட்டீர்களா? - மோகனூர் சு. அப்பாத்துரை, ஏகமாலையூர் சா. பொன்னுரங்கம், கருமத்தான்பட்டி ஏ.மா. சுப்பிரமணி மற்றும் பலர்.

(நிறுத்த முடியுமா? இடமில்லாத காரணமே. - ஆர்.)

சா. இரவிச்சந்திரன்



வள்ளியப்பா நினைவுச்
சிறுகதைப் போட்டியில் 3 வது
பரிசு பெற்ற இரண்டாவது கதை

வேலாயுதம் கண்களில் நீர் பொங்க தபால் கிளார்க்கை சந்தேகத்திற்கு இடமில்லாது கேட்டான்.

"சார்; தபால் கட்டணமா அறுபது ரூபாய் ஆகும்?"

தபால் கிளார்க் சற்றுச் சலிப்புடன் அவனைப் பார்த்தார்.

"தம்பி, இரண்டு கிலோவுக்கு மேல் எடை இருக்கு. நான் சொன்ன அறுபது ரூபாய் கூட, சாதாரண பார்சல் கட்டணம்தான். பதிவுப் பார்சல் என்றால் இன்னும் நாற்பது ரூபாய் கூட."

வேலாயுதம் நன்றி கூறிவிட்டு தளர்ந்து போனவனாக வெளியே வந்து நடந்தான்.

அந்தத் தொடர் கதைக்கான நாவலை, எத்தனை நாட்கள் கண் விழித்து, தூக்கத்தைத் தியாகம் செய்து எழுதியிருப்பான்? இடையிடையே அம்மா அப்பாவின் எதிர்ப்பு வேறு. காகிதம் வாங்கிக் கொடுக்கக் கூட அப்பா கைவிரித்து விட்டாரே! ஒன்றா இரண்டா? எத்தனை தடைகள்!

விஷயம் இதுதான். முழுக்க விவசாயத்தையே நம்பி, குக்கிராமத்தில் வாழ்ந்து வந்த ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் வேலாயுதம். அவர்கள் இருந்த குக்கிராமத்திற்கு, தபால்காரர் கூட தினமும் வரமாட்டார்; அவசியம் இருக்காது! அவனுடைய அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மாதத்தில் இருபது நாட்கள்தான் வேலை கிடைக்கும். அரைப் பட்டினி, கால்பட்டினியோடு குடும்பம் ஓடுகிறது என்றால், அது அம்மாவின் திறமையால் தான்.

இத்தனை வறுமை நிலையிலும், வேலாயுதத்தை சித்தாள் வேலைக்கு அனுப்பி விடாமல், நான்கு கிலோ

எனக்கா பரிசு!



மீட்டர் தொலைவில் இருந்த பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்து வரும் பெருமையும் அம்மாவைத்தான் சேரும். அவர்கள் ஊரில் இருந்தபடி வெளியூர் பள்ளியில் ஏழாவதைக் கடந்து படிக்கும் முதல் சிறுவன் வேலாயுதம்தான்.

பள்ளியில், சுற்றலா அது இது என்று கிளம்பும்போது, வேலாயுதம் ஒதுங்கி விடுவான்.


"சார், எங்க குடும்பம் இருக்கும் வறுமை நிலையில், அப்பாவும் அம்மாவும் ஓடாகத் தேய்ந்து என்னைப் படிக்க வைப்பதே உலக சாதனை சார்! எனக்குப் பணம் தர சக்தி இல்லை. என்னை விட்டு விடுங்கள் சார்" என்று ஒளிவு மறைவு இல்லாமல் கூறிவிடுவான்.

மனத்தில் இப்படிப்பட்ட ஆசைகளை வளர்த்துக் கொண்டு ஏங்கவும் மாட்டான். அவனுடைய இலட்சியம் மாநிலத்திலேயே முதல் மாணவனாக வந்து ஸ்காலர்ஷிப் பெற்று, டாக்டருக்குப் படித்து, ஏழைகளுக்கு வைத்தியம் செய்து, பெற்றோர்களை சிப்பிக்குள் முத்தாகக் காக்க வேண்டும் என்பதே.

இப்படிப்பட்ட மன உறுதி படைத்த வேலாயுதம்; தனது இலட்சியத்தைத் தவிர வேறு எதற்குமே மனத்தில் இடம் அளிக்காத வேலாயுதம், எப்படி இந்த ஆசைக்கு இலக்கானான் என்பது பெற்றோர்க்கே அதிசயமாகத்தான் இருந்தது.

வேலாயுதம் படித்து வந்த பள்ளிக்கு அருகே ஒரு நூலகம் இருந்தது. பள்ளி , பிற்பகல் இடைவேளையின் போது, வேலாயுதம் அங்கே போவான். புத்தகங்களையும், பத்திரிகைகளையும், நாளேடுகளையும் படித்துத் தன் பொது அறிவை வளர்த்துக் கொண்டான், இந்தப் பழக்கம், பள்ளி கட்டுரைப் போட்டியிலும், பேச்சுப் போட்டியிலும் பரிசு பெற அவனுக்கு உதவியது. அது மட்டுமா? நூலகத்தில் அவன் விரும்பிப் படித்த சிறுவர்க்கான பத்திரிகைகள் அவன் மனதைக் கொள்ளை கொண்டன. அதன் விளைவாக சிறுவர்க்கான கதைகளை எழுத வேண்டும் என்ற ஆவல் அவனுக்குள் துளிர்த்தது. என்ன முயன்றும் வேலாயுதத்தால், கதை எழுத வேண்டும் என்ற துடிப்பை அடக்க முடியவில்லை.


முதலில் இரண்டு சிறுகதைகளை எழுதினான். அவனுடைய மனம் கவர்ந்த சிறுவர் வார இதழான "மழலைப் பூங்கா"வில் அதிக மாற்றங்கள் ஏதும் இல்லாமல் அவை வெளியாயின. வேலாயுதம் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டான். அடுத்த





படியாக தொடர் கதை ஒன்றை எழுதத் திட்டமிட்டான். தான் எப்படி எழுதப் போகிறோம் என்பதை அவன் சிந்தித்து சிந்தித்து, அத்தியாயங்களாகப் பிரித்து, கருக்கத்தை எழுதிக் கொண்டான். சுமார் அறுபது வாரங்களுக்கு வரக்கூடியதாக அந்தச் கருக்கம் அமைந்தது.

வேலாயுதம் அந்த நாவலின் கருக்கத்தை "மழலைப் பூங்கா" ஆசிரியருக்கு அனுப்பிவைத்தான். ஒரு வாரத்திற்குள் அதன் ஆசிரியரிடம் இருந்து வேலாயுதத்துக்குப் பதில் வந்து விட்டது. "வேலாயுதம், கதைச் கருக்கம், அத்தியாய வரிசையிலான கருக்கம், நீ எடுத்துக் கொண்டுள்ள பொருள் எல்லாமே அனுபவம் மிக்க சிறுவர் இலக்கியப் படைப்பாளி எழுதியதைப் போலவே உள்ளன. நமது "மழலைப் பூங்கா"வின் வெள்ளிவிழா ஆண்டை ஒட்டி, ஒரு நாவல் போட்டி நடத்த உள்ளோம். நீ



"விபத்துல நசுங்கிப் போன வாகனங்கள் எல்லாம் வரிசையா நிக்குதே ஏன்?"

"மேதின வாகன பேரணின்னு போடறதுக்கு பதிலா, மோதின வாகன பேரணின்னு போஸ்ட்டர்ல போட்டுட்டாங்களாம்!"

— சீர்காழி உத்திரட்டாதி

திட்டமிட்டுள்ள சுருக்கத்தை விரிவுபடுத்தி நாவலாக எழுதிப் போட்டிக்கு அனுப்பிவை. பரிசு கிடைக்க வாய்ப்புள்ளது" என்று பதில் எழுதியிருந்தார் ஆசிரியர்.

அவ்வளவுதான்! வேலாயுதம் முழு முனைப்புடன் நாவலை எழுதத் தொடங்கினான். போட்டிக்காக நாவலின் இரண்டு பிரதிகளைக் கேட்டிருந்தார்கள். அதனால், எல்லாம் தயாராக இருந்தும், நாவல் எழுத காகிதம் வாங்கக் காசு இல்லாமல் அவன் திண்டாடினான். இரண்டு பிரதிகளுக்குமான காகிதத்தை வாங்க சுமார் இருநூறு ரூபாயாவது ஆகும் என்று அவன் கணக்குப் போட்டான்.

அப்பாவும் அம்மாவும் கை விரித்து விட்டார்கள். இத்தனை ரூபாய் செலவாகும் என்றால் அந்தப் போட்டியில் நீ கலந்து கொள்ளவே வேண்டாம்" என்றார்கள் இருவரும்.

மனம் ஒடிந்த நிலையில் வேலாயுதம் இருந்தான். "சரி, நமக்குக் கொடுப்பினை இவ்வளவுதான் என்று ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டான். அந்த நிலையில்தான் ஒரு நாள் வழக்கமாகப் போகும் நூல் நிலையத்திற்குப் போனான். நூலகருக்கு அவனைத் தெரியும். அவனுடைய கதை எழுதும் ஆர்வத்தை வளர்த்து விட்டதில் அவருக்கும் பங்கு உண்டு.

"வேலா, போட்டி முடிவு தேதி அடுத்த மாதமாயிற்றே? நாவல் எந்த நிலையில் இருக்கிறது?" என்று கேட்டார் நூலகர்.

நைந்து போன மன நிலையில் இருந்த வேலாயுதம், 'மடமட'வென்று தன் துக்கத்தைக் கொட்டிக் கண் கலங்கினான். நூலகர் அவன் கூறியதைக் கேட்டு ஆடிப் போனார்.

"வேலாயுதம். காகிதம் வாங்கக் காசு கிடைக்காததால் நீ நாவல் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்து விடக் கூடாது. தினமும் நூலகத்திற்கு ஏராளமான அறிக்கைகள், பத்திரிகைக் குறிப்புகள் வருகின்றன. பெரும்பாலானவை ஒரு பக்கம் ஜெராக்ஸ் செய்யப்பட்டவை. அவைகளை நான் இரண்டு ஆண்டுகளாகச் சேர்த்து வைத்திருக்கிறேன். கிட்டத்தட்ட ஒரே அளவுக் காகிதங்கள்தான்? நீ அவைகளைப் பயன் படுத்திக்கொள்."

"காகிதத்தின் ஒரு பக்கம்தான் எழுதியிருக்க வேண்டும், என்று போட்டி அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்களே சார்?"

"உண்மைதான். மறுபக்கம் கதையின் தொடர்ச்சி இருக்கக் கூடாது என்பதுதான் நிபந்தனையே தவிர, வெற்றாக விட வேண்டும் என்பது அல்ல. நானும் பத்திரிகை அலுவலகங்களில் பழகி இருக்கிறேன். தைரியமாக எழுது" என்று ஊக்கிவிட்ட நூலகர், புது வாயில் ஒன்றைத் திறந்து விட்டார்.

வேலாயுதம் புது நம்பிக்கையுடன் நாவலை எழுதத் தொடங்கினான். முடித்தான்.

இனி அடுத்த பிரச்னை, சுமார் இரண்டு கிலோ எடையுள்ள அவைகளை அனுப்பத் தேவைப்படும் தபால் கட்டணம். இதற்கு சுமார் முப்பது ரூபா

யாவது ஆகும் என்ற கணிப்பில், வழக்கத்திற்கு விரோதமாகத் தனது பழைய பாட நூல்களை விலைக்கு விற்றுக் காக சேர்த்திருந்தான் வேலாயுதம். ஆனால், அஞ்சலகத்தில் சென்று எடை போட்ட பிறகுதான் அறுபது ரூபாய் ஆகும் என்பது அவனுக்குத் தெரிந்தது. காகிதப் பிரச்னையை நூலகர் தீர்த்து வைத்தார். இதைத் தீர்த்து வைக்க யார் முன் வந்து பணம் தந்து உதவுவார்கள்?

"வேலாக்கண்ணு. இது நம்ம சக்திக்கு மேற்பட்ட ஆசைடா. மனசைத் தேத்திக்க," என்று கைவிரித்து மகனைத் தேற்றினார் தந்தை. அம்மாவும் அதை ஆமோதித்தாள்.

தன்மானத்தைவிட்டு விட்டு வசதியான நண்பர்கள் சிலரிடம் கூடக் கடனாகக் கேட்டுப் பார்த்தான் வேலாயுதம். அவர்களுக்கு, ஏற்கெனவே வேலாயுதம் கதை எழுதி அவை பிரசுரமாவது குறித்துப் பொறாமை.

'ஏண்டா வேலா உனக்கு இந்தப் பொருந்தாத ஆசை? கூழுக்கே வக்கில்லாதவன், யானையில ஏறிப்போக ஆசைப்படலாமா?" என்று அவனுடைய ஏழ்மையைக் குத்திக்காட்டி அறிவுரை வழங்கித் தங்கள் பொறாமைத் தீயைத் தணித்துக் கொண்டனர் நண்பர்கள்.

முடிவு தேதிக்கு இன்னும் ஒரு வாரமே இருந்தது.

நூலகத்திற்குப் போன அவனை, "என்ன வேலா? நாவலை அனுப்பிட்டியா?" என்று கேட்டார் நூலகர்.

வேலாயுதம் ஒரு விரக்திச் சிரிப்பைச் சிரித்து விட்டு நடந்ததைக் கூறினான்.

ஏதோ பொறி தட்டியது போல் பரபரப்படைந்த நூலகர், "வேலா, அந்தப் போட்டி வெளி வந்த மழலைப் பூங்கா இதழ் இருக்கிறதா? என்னிடம் கொடு" என்றார். வேலாயுதம் தன் பையில் இருந்து எடுத்துத் தந்தான்.

அதைக் கவனமாகப் படித்த நூலகர், "வேலா, நாவலைத் தபாலில்தான் அனுப்ப வேண்டும், என்று போட்டி விதிகளில் ஏதும் கூறவில்லை. அதனால் நேரிலும் பெற்றுக் கொள்வார்கள். எனக்குத் தெரிந்த லாரி டிரைவர் ஒருவர் இருக்கிறார். அவர் அடிக்கடி சென்னைக்குப் போகிறவர். அவரிடம் உன் நாவலைக் கொடுத்தால் அதை அவர் சென்னையில் "மழலை பூங்கா" அலுவலகத்தில் சேர்த்துவிடுவார். நான் ஏற்பாடு செய்கிறேன். கவலையை விடு" என்றார்.

வேலாயுதத்திற்கு ஏற்பட்ட நன்றி உணர்வில் நூலகரின் காலில் விழுந்து விம்மினான்.


இரண்டு மாதங்கள் ஓடின. அன்று வேலாயுதத்திற்கு ஒரு கடிதம் வந்தது. ஆமாம். மழலைப் பூங்கா ஆசிரியிடம் இருந்துதான்! நாவல் போட்டியில் அவனுடைய நாவலுக்கு முதல் பரிசாக ஐயாயிரம் கிடைத்திருப்பதாகவும் உடனே அவனுடைய புகைப்படத்தை அனுப்பி வைக்கும்படியும் கேட்டிருந்தார்கள்.

ஆயிரம் தடைகளைக் கடந்து வந்த திறமை, இறுதியில் வெற்றிக் கனியைக் கொண்டு வந்து சேர்த்தே விட்டது! செய்தியை நூலகரிடம் கூறி மகிழ்ச்சியைப் பகிர்ந்துக் கொள்ள நன்றியுணர்வோடு விரைந்தான் வேலாயுதம்.

"நீ எழுதின புக் ஓஹோன்னு விக்குதாமே.... என்ன புக் எழுதினே?"

"எலி பிடிக்க எளிய வழிகள்!"

— சோமசேகர் கே.



குழந்தைகளுக்காக ஒரு கண்ணன் கோயில்!




தெய்வ நம்பிக்கை என்பது நம் நாட்டு மக்களின் இரத்தத்தோடு ஊறிப் போன ஒரு உணர்வு. தினமும் பூஜை செய்யும் வீடுகளும் உண்டு. முடியாவிட்டால் விசேஷமான நாட்களிலும், பண்டிகை நாட்களிலு மாவது கண்டிப்பாகப் பூஜை செய்வார்கள்.


இப்படி பூஜை செய்வதற்கு வீட்டில் உள்ள குழந்தைகளின் உதவியைப் பெரியவர்கள் பெற்றுக் கொள்வார்கள். வாசலை, வீட்டைப் பெருக்கி, துடைத்து, கோலம் போட்டு செம்மண் இடச் சொல்வார்கள். மாவிலை கட்டச் சொல்வார்கள். சாமி படங்களைத் துடைக்கச் சொல்வார்கள். பூக்களை மாலையாகத் தொடுக்க வைப்பார்கள். சந்தனம் அரைத்துத் தரச் சொல்வார்கள்.



"சரி, நம்மைப் பூஜையும் செய்யச் சொல்லப் போகிறார்கள்" என்று குழந்தைகள் ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களை



அனுமதிக்க மாட்டார்கள். பூஜையைப் பெரியவர்களேதான் செய்வார்கள். குழந்தைகளுக்கு ஏமாற்றமே மிஞ்சும். கொஞ்சம் அதிகமாகப் பிடிவாதம் பிடித்தால் மணியைக் கொடுத்து, அடிக்கச் சொல்வார்கள்.



அதோடு சரி. மற்ற பண்டிகைகளைப் பற்றிக் கவலையில்லை. குழந்தைகள் மிகவும் விரும்பும் தெய்வங்களான பிள்ளையார், கண்ணன், முருகன் போன்ற குழந்தைத் தெய்வங்களுக்கான பூஜைகளில் கூட வீட்டுக் குழந்தைகளுக்கு பூஜை செய்ய முக்கியத்துவம் தராமல் இருப்பது எப்படி நியாயமாகும்?


பல ஆண்டுகளுக்கு முன்பு சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், தமது வீட்டில் வாரத்திற்கு ஒரு நாள் பூஜை செய்வார். அதில் கோலம் போடுவதில் இருந்து பூஜை செய்வது வரை குழந்தைகளே கவனிப்பார்கள். பெரியவர்கள் வெறும் பார்வையாளர்களாகவே இருப்பார்கள். இந்த வாரம் பூஜை செய்யும் சிறுவனுக்கு, அடுத்த வாய்ப்பு பல வாரங்கள் பொறுத்தே வரும். அந்த மாதிரி எல்லாக் குழந்தைகளுக்கும் வாய்ப்பு வரும்படி செய்து வந்தார். பெரிய கோவில்களில் கூட இப்படி ஒரு ஏற்பாடு இருந்தால், நன்றாக இருக்குமே என்று எண்ணிக் கொள்வேன்.

இந்தக் குறையைப் போக்கும் விதத்தில் சென்னையில் குழந்தைகளுக்கான ஒரு கண்ணன் கோவிலைக் கட்டி வருகிறார்கள் நந்தலாலா சிறுவர் சங்கத்தின் அமைப்பாளர்களான நந்தலாலா சேவா சமிதியினர். இதில் குழந்தைகளே கண்ணனின் பாதங்களைத் தொட்டு அபிஷேகம் செய்து, பூஜை பண்ணலாம். குழந்தைகளுக்கே முன்னுரிமை. கேட்பதற்கே எவ்வளவு மகிழ்ச்சியாக உள்ளது? இந்த அழகான திருக்கோவிலின் மாதிரியை இங்கே காண்கிறீர்கள். இதில் பிரதிஷ்டை செய்யப்பட உள்ள புல்லாங்குழல் கண்ணன் இந்த இதழ் அட்டைக்கு அழகு செய்கிறார்.

அட்டையில மாலையணிவிப்பது சிறுமி அனையா. இங்கே மாலையணிவிப்பது ஸ்ருதி.

வண்ணப்படங்கள் : கேமரா திருஞானம்





கேட்கட்டுமா டாக்டர்?

● **ஆ. மீனாட்சி, மன்னார்குடி.**

? கால் கட்டை விரல் பகுதிகளில் சேற்றுப் புண் உள்ளது. ஒரே அரிப்பாக இருக்கிறது. இது ஏன் வருகிறது? இதைப் போக்க என்ன வழி? மீண்டும் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

! சேற்றுப்புண் காளான் கிருமிகள் கால் விரல்களையும், பாதங்களையும் பாதிப்பதால் வருகிறது. இதைப் போக்க கால்களை சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். ஈரத்தில் அடிக்கடி மிதிக்கக் கூடாது. மருத்துவர் யோசனைப்படி காளான் கொல்லி மருந்துகளை (Antifungal Ointments) குறைந்தது ஒரு மாதம் தொடர்ந்து போட வேண்டும். அத்துடன் நுண்ணுயிர்க்கொல்லி (Antibiotics) மாத்திரைகளையும், வைட்டமின் ஏ,சி மாத்திரைகளையும் உபயோகிக்க வேண்டும். சேற்றுப்புண் மீண்டும் வராமல் இருக்க கால் பாதங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

● **வி. சரவணன், வடபழனி.**

? பல்லில் இரத்தம் மற்றும் சீழ் வந்தால் பல்லை எடுக்க வேண்டுமா? உமிழ்நீர் வழியாக அது உடலின் மற்ற பாகத்தைப் பாதிக்குமா? பதில் வேண்டும் டாக்டர்!

! பற்களில் இரத்தம் மற்றும் சீழ் வருவதை 'பயோரியா' (Pyorroea) என்கிறோம். பற்களைத் தாங்கி நிற்கும் ஈறுகளில் அழுக்கு, மற்றும் நோய்க் கிருமிகள் பாதிப்பை ஏற்படுத்தும் போது பயோரியா வருகிறது. இதை ஆரம்ப நிலையில் கவனித்து முறையாக சிகிச்சையைப் பெற்றுவிட்டால் பற்களை அகற்ற வேண்டிய அவசியமில்லை. பற்களின் வேர் வரை பாதிப்பு பரவியிருந்தால் பற்கள் பலமிழந்து விடும். ஆடும். அப்போது பற்களை எடுத்து விட வேண்டியதுதான். வேறு வழியில்லை. பயோரியா நோயை முற்ற விட்டு விட்டால் அந்த பாதிப்பு உடம்பிலிருக்கும் பிற உறுப்புகளுக்கும் பரவக்கூடிய ஆபத்து உள்ளது. எனவே, இந்த நோயை உடனே கவனித்து விடுவது நல்லது.

● **ச. கிருஷ்ணமூர்த்தி, ஆனந்தூர்.**

? சில சமயங்களில் எனக்கு மலத்தில் இரத்தம் வருகிறது. இது எதனால் வருகிறது? இதைத் தடுப்பது எப்படி, டாக்டர்?

! மலத்தில் இரத்தம் வெளியேறுவதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது மூலநோய் (piles). இது மலத்துவாரத்தில் உள்ள சிறை (vein) இரத்தக் குழாய்கள் வீங்கிக் கொள்வதால் ஏற்படு

கிறது. இந்த விக்கத்தில் அழுத்தம் ஏற்படும் போது வெடிப்பு உண்டாகிறது. இதனால் மலத்துடன் இரத்தம் வெளியேறுகிறது. இதைத் தடுக்க கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்; பலன் கிடைக்கும். 1. மலச்சிக்கலைத் தவிருங்கள், 2. காரம் நிறைந்த உணவுகளை ஒதுக்குங்கள், 3. நிறைய தண்ணீர் குடியுங்கள், 4. ஒரே இடத்தில் நீண்ட நேரம் தொடர்ந்து அமர்ந்திருக்காதீர்கள், 5. மூலநோய்க்கு ஆரம்பக் கட்டத்திலேயே மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

● **எஸ். கணேசன், காரைக்குடி.**

? இரத்ததானம் செய்தால் ஏதேனும் உடல் பாதிப்பு ஏற்படுமா?

! ஏற்படாது.

● **ரி. மார்லே ராஜ்குமார், கும்பகோணம்.**

? எனக்குத் தலையில் பொடுகு உள்ளது. இதனை நீக்க எளிய வழி என்ன?

! தலையை சுத்தமாக வைத்துக் கொண்டால் பொடுகு வராது. வாரம் ஒருமுறை 'செல்சன்' (selsun) ஷாம்பூவைப் பயன்படுத்தி தலைக்குக் குளித்தால் பொடுகு மறையும்.


● **ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.**

? 'மைக்ரோ சர்ஜரி' என்பது என்ன, டாக்டர்? இது எதற்காக செய்யப்படுகிறது?

! 'மைக்ரோ சர்ஜரி' (Micro surgery) என்பது மிக நுணுக்கமாக செய்யப்படும் அறுவை சிகிச்சை முறை, முக்கியமாக மைக்ரோஸ்கோப்பைப் பயன்படுத்தி அறுவை சிகிச்சை செய்யப்படும் நவீன முறை. இதன் மூலம் வெட்டுப்பட்ட உடல் பாகங்களை மீண்டும் இணைக்க முடியும். வெட்டுப்பட்ட கை விரலுக்குப் பதிலாகக் கால் விரலைப் பொருத்த முடியும். துண்டாகிப் போன உடல் நரம்புகளையும், இரத்தக் குழாய்களையும் மிகத் துல்லியமாக இணைத்து எவ்வித சேதமும் இன்றி பழைய நிலைக்குக் கொண்டு வர முடியும்.

இதற்காக, கவனக்குறைவாக எப்படி விளையாடினாலும் பரவாயில்லை. கை கால் விரல்கள் துண்டானாலும் கவலை இல்லை. இருக்கவே இருக்கிறது மைக்ரோ சர்ஜரி என்ற முடிவுக்கு வந்து விடாதீர்கள்.

டாக்டர். கு. கணேசன்



மைக்ரோ சர்ஜரி என்பது என்ன?





GOKULAM, 47 Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 97.

சரடு விடலே!

குரு. சீனிவாசன்



"இராணுவக் கொடிக்கு எல்லாரும் காசு கொடுத்தாச்சா?" - வருகைப் பதிவை முடித்த வகுப்பாசிரியர், அன்றைய முதல் பணியாக விசாரணையைத் தொடங்கினார்.

"மத்தவங்க எல்லாம் கொடுத்துட்டாங்க. சந்துரு ஒருத்தன் மட்டுந்தான் பாக்கி சார்" - லீடர் லிங்கசாமி அறிவித்ததும், கடைசி பெஞ்சிலிருந்த சந்துரு எழுந்து நின்றான்.

"என்ன சந்துரு, நம்ம தாய்நாட்டைக் காக்கிற போர் வீரங்க நலத்துக்காக ஒரு ரூபாதானே கேட்கிறாங்க? ஒரு வாரமா தராமே லேட் பண்ணுறியே?" - கசந்து போயிருந்த ஆசிரியரின் மனநிலையை அவர் பேச்சு வெளிப்படுத்தியது.

"ஒரு ரூபாய்க் காசென்ன, பெரிய மலையா சார்? அஞ்சு ரூபாயைக் கொடுக்கலாமின்னுதான் வீட்லேருந்து எடுத்துட்டு வந்தேன். வர்ற வழியிலே பாவ்ம், ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் ரெண்டு நாள் பட்டினின்னு கேட்டான். அந்த அஞ்சையும் கொடுத்திட்டேன். அதனாலேதான்" - பெரிய பரோபகாரியைப் போல மிகவும் சாதாரணமாகச் சொன்னான் சந்துரு.

அவன் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டு முதல் பெஞ்சில் உட்கார்ந்திருந்த முருகேசனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தன் கையில் பேனா ரீஃபில் வாங்கக் காசில்லையென்று காலையில் பக்கத்து வகுப்பு பாஸ்கரிடம் முப்பத்தைந்து காசு கடன் கேட்டு இந்தச் சந்துரு கெஞ்சியதைப் பின்னால் நின்று பார்த்தவன் ஆயிற்றே முருகேசன்!

'அடப்பாவி, ஆசிரியரிடமே எவ்வளவு பெரிய பொய்யைச் சொல்கிறான்! தனது ஏழ்மையையும் இயலாமையையும் சாரிடம் சொல்ல இந்தச் சந்துரு வெட்கப்படுகிறானா? அல்லது ஐந்து ரூபாயை அனாயாசமாக தருமம் பண்ணியதாக இட்டுக் கட்டி எடுத்துக் கூறித் தனது அந்தஸ்தை உயர்த்திக் காட்ட ஆசைப்படுகிறானா? எப்படியோ, சரடு விடுவதில் சந்துரு சரியான மன்னன்!' என்று

எண்ணிக் கொண்டான் முருகேசன். இவன் எப்பத் தான் மாறப் போறானோ?

ஒரு வாரம் கழித்து, ஒரு நாள் முற்பகல் வகுப்புகள் முழுமைக்கும் சரடு சந்துரு 'கட்' அடித்து விட்டான். நண்பகல் உணவுக்குப் பின் கிளாசுக்குள் மெல்லத் தலை நீட்டிய அவனிடம் முருகேசன்தான் முதலில் பேச்சுக் கொடுத்தான்.

"என்ன பாஸ், காலையிலே மட்டம் போட்டுட்டு எங்கே போயிருந்திங்க?"

"அது ஒரு பெரிய்ய கதைடா" என்று சந்துரு பீடிகை போட்டதும் சிதறிக் கிடந்த மாணவர்கள் ஏழெட்டுப் பேர் அவனைச் சுற்றிக் கொண்டார்கள். கூடியவர்களைப் பார்த்ததும் குஷி பிறந்து விட்டது அவனுக்கு. சுவாரஸ்யமாக அவன் விவரித்த சங்கதியின் சுருக்கம் இதுதான்.



அன்று காலை வழக்கம் போல் பள்ளிக்கு வந்து கொண்டிருக்கிறான் சந்துரு. குறுகலான அந்தத் தெருக் கோடியில் பத்துப் பதினைந்து பெண்களின் கும்பல். எல்லோரும் எதையோ சொல்லிச் சொல்லி அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஆண்கள் யாருமே இல்லை. சந்துரு ஒரு பெண்ணிடம் நடந்ததைப் பற்றி விசாரிக்கிறான்.

பதினைந்து பதினாறு வயது மதிக்கத் தக்க பையனாம்; ஊதா நிறச் சட்டையும் சிவப்பு நிறக் கால் சட்டையும் போட்டவனாம்; கடைக்குப் போன ஓர் ஐந்து வயதுச் சிறுமியின் காதிலிருந்த தொங்கட்டானைக் கழற்றிக் கொண்டு வடக்குச் சந்தில் ஓடி இரண்டு நிமிஷம் கூட ஆகவில்லையாம்!

விஷயத்தை அறிந்ததும் துடித்துப் போகிறான் சந்துரு. புத்தகப் பையைத் தூக்கி எறிந்து விட்டு, ஒரு வீட்டின் முன்னால் நின்ற சைக்கிள் ஒன்றில் தாவி ஏறுகிறான். பெண்கள் காட்டிய வடக்குச் சந்தில் காற்றாய்ப் பறக்கிறான். பத்து நிமிடச் சவாரிக்குப் பிறகு ஊர்க்கோடியில் ஓடிக் கொண்டிருந்த ஊதாச் சட்டைத் திருடன் மீது சைக்கிளை மோதி, விழ வைத்து இருவரும் கட்டிப் புரண்டு சண்டை போடுகிறார்கள். சந்துரு அவனைச் செம்மையாக உதைத்தெடுக்கிறான். கூட்டம் சேர்ந்து விட, திருடன் காவல் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்படுகிறான். சப்-இன்ஸ்பெக்டர்



விட்டுச் சட்டையின் காலர்களைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

"சபாஷ் சந்துரு! சிறுவர் வீரச் செயலுக்கான இந்த வருஷத் தங்கப் பதக்கம் கட்டாயம் உனக்குத் தாம்ப்பா!" - முருகேசன் உள்ளிட்ட எல்லோரும் சிரிக்காமல் சீரியஸ்ஸாகக் கூறுவதைக் கேட்டு, அவன் முகத்தில் சாதனைப் புன்னகை வேறு படர்கிறதே!

பிற்பகல் முதல் பாட வேளை நடந்து கொண்டிருந்தது. பியூன் பின் தொடர, வகுப்புக்குள் தயக்கத்தோடு நுழைந்தார் ஒரு நடுத்தர வயது மனிதர். அவர் கையில் சந்துருவின் அழுக்கடைந்த புத்தகப்பை இருந்தது!

"சார், அவன் பேரு சந்துருவாம்; காலையிலே ஆத்தோரம் இருக்கிற என் மாந்தோப்புக்குள்ளே திருட்டுத்தனமா புகுந்து கல்லெறிஞ்சி காயடிச்சான். நான் சத்தம் போட்டு ஓடியாறவும், அவன் பையைப் போட்டுட்டு முள் கம்பி வேலிக்குள்ளே நுழைஞ்சி வெளியே ஓடியாந்துட்டான். பையை வச்சி அடையாளம் கண்டுபிடிச்சி ஒங்க கிட்டே சொல்ல வந்தேன். அவனைக் கண்டிச்சி வைக்கணும்" என்று புத்தகப் பையை நீட்டினார் வந்தவர்.

ஆசிரியர் சந்துருவைப் பார்த்தார். முகம் தொங்கிப் போக, கூனிக்குறுகியவனாய் எழுந்து நின்ற சந்துருவின் மீது வகுப்பின் பார்வை ஏகமாய்ப் பதிந்தது.

"நீங்க போங்கய்யா; அவனுக்குப் புத்தி சொல்றேன். இனிமே ஒங்க தோப்புப் பக்கமே அவன் வர மாட்டான்" என்று வந்தவரைச் சமாதானப்படுத்தி அனுப்பினார் ஆசிரியர்.

ஒன்றும் புரியாமல் தவித்த ஆசிரி

சந்துருவின் முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டுகிறார். ஊரே அவனது வீரத்தை வியந்து மெச்சுகிறது. நகையை மீண்டும் பெற்ற மகிழ்ச்சியில் உரிமையாளர்கள் மனமுவந்து கொடுத்த ஐம்பது ரூபாயைப் பெருந்தன்மையோடு மறுத்து விட்ட சந்துரு, நேராக அப்போதுதான் பள்ளிக்கு வருகிறான்!

தனது சாகசச் செயல்களை சினிமாக் கதை போல மூச்சு விடாமல் கூறி முடித்த சந்துரு, தன் கழுத்திலும், முழங்கைகளிலும் பட்டிருந்த சில கீறல்களையும் சிராய்ப்புகளையும் பெருமிதத்துடன் சக மாணவர்களிடம் காட்டி

யருக்கு லீடர் லிங்கசாமி எழுந்து, அன்று நண்பகல் இடைவேளையின் போது சந்துரு திரித்து விட்ட கதையை மீண்டும் வகுப்பு முழுமைக்கும் விளக்கினான்.

"இவன் பெரிய சரடு மாஸ்டர் சார். வாயில் ஓர் உண்மை கூட வராது..." என்ற முன்னுரையோடு தானும் ஆரம்பித்த முருகேசன், அதுவரை சந்துரு திரித்த கதைகள் ஒவ்வொன்றையும விளக்கி விமர்சனம் செய்தான். அவர்களைக் கையமர்த்தி அமரச் செய்த ஆசிரியர், சந்துருவின் முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்து விட்டு அன்பொழுகப் பேசினார்.

"சந்துரு; வாழ்க்கையிலே எப்படியெல்லாம் ஆகணுமின்னு உனக்குள்ளே எழுகிற ஆசைகளைத்தான் இப்படிக் கற்பனை கலந்து உண்மை மாதிரி நீ சொல்றே! இது வெறும் ஆசையளவா நின்னுடக் கூடாதுப்பா. முயற்சியும் சாதித்துக் காட்டுற மனவுறுதியும் உனக்கு அமையணும். இனிமே எதையும் செஞ்சி முடிச்சப்புறமா வெளியே சொல்லு. தெரியாதது எதையும் தெரிஞ்சதாகவோ, செய்யாதது எதையும் செஞ்சதாகவோ சொல்லக் கூடாது. உனக்கிருக்கற அபாரக் கற்பனையை நல்ல வழியில் செலவழிச்சா, நீ திறமையான நல்ல எழுத்தாளனா வந்துடலாம்!"

நாட்கள் நகர்ந்தன. உடற்பயிற்சி வகுப்பில் பி.டி. மாஸ்டர், "சந்துரு, மாவட்ட கபாடி மேட்சுக்கு நீ பேர் கொடுக்கிறியா?" என்று கேட்ட போது அவன், "மன்னிக்கணும் சார்; காலையிலும் சாயங்காலமும் என்னாலே பிராக்டிஸ் பண்ண வர முடியாது" என்று பட்டென்று பதிலளித்தான். அவர் அதற்கான காரணத்தைக் கேட்டுத் துருவினார்.

"அந்த ரெண்டு நேரமும் நான் வேலைக்குப் போயி சம்பாதிச்சிட்டிருக்கேன் சார்" - அவன் சொல்லி முடித்ததுமே சுற்றி நின்ற மாணவர்கள், 'கொல்'லென்று சிரித்து "திரும்ப ஆரம்பிச்சிட்டான் சார், சரடு விடுற வேலையை" என்று நையாண்டி பேசினார்கள்.

"சரடு விடலே சார்; சத்தியமாச் சொல்றேன். காசநோய் வந்து எங்கப்பா சானிட்டோரியத்தில் கெடக்கிறார். நான் தினசரி காலையும் மாலையும் ஒரு பேக்கரியில் வேலை பார்த்து ஏதோ கொஞ்சம் சம்பாதிச்சித் தராட்டி, எங்க வீட்லே அடுப்பு எரியாது!" என்று கூறிய போது அவன் கண்களில் நீர் பொங்கியது.

இனி சந்துரு சரடு விட மாட்டான். உண்மை நிலையைத் துணிவுடன் சந்திப்பான்; போராடுவான்; வெற்றி பெறுவான்!

சிற்றெறும்பு போகுது!




சிற்றெ றும்பு கூட்ட மாகச்
சேர்ந்து போகுது
புற்றை விட்டு வேக மாக
ஊர்ந்து போகுது.

சோம்பல் இல்லாச் சிற்றெ றும்பு
சுவரில் போகுது
சுறுசு றுப்பாய்ச் சிற்றெறும்பு
தரையில் போகுது

மேடு பள்ளம் பார்த்தி டாமல்
விரைந்து போகுது
காடு தோட்டம் வயல்க ளுக்குள்
கடுகிப் போகுது

சிதறிக் கிடக்கும் தானி யத்தைத்
திரட்டப் போகுது
திரட்டிக் கொண்டு புற்று நோக்கித்
திரும்பப் போகுது

— 'பூவிழி வண்ணன்'



தொழிலதிபர் சாமிநாதன், தன் எதிரே உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர் கதிரேசனைக் கவலையுடன் நோக்கினார். சேகர் காபியைக் கொண்டு வைத்தான்.

"ரெண்டே பசங்க சார் எனக்கு. இதோ இப்போ காபி கொண்டு வந்து வைத்தானே, இவன் இரண்டாவது. இவன் அண்ணன் ரவி கல்லூரியிலே படிச்சுக்கிட்டு இருக்கான். பசங்க ரெண்டு பேரும் தாய் இல்லாதவங்க. அவங்களுக்கு அந்தக் குறை தெரியாம இருக்க கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்தேன் சார்," என்று அழுதார் சாமிநாதன். அவரால் அதற்கு மேல் பேச முடிய வில்லை.

"தம்பி, என்ன நடந்ததுன்னு நீயாவது சொல்லேன்?" என்று குழப்பத்தோடு சேகரிடம் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

இதற்குள் சமானித்துக் கொண்டு விட்ட சாமிநாதன் "இன்னிக்கு எங்க வீட்டு போஸ்ட் பாக்ஸைத் திறந்தப்ப இந்தக் கடிதம் கிடந்துச்சு சார்" என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

கடிதம் இருந்த உறையின் முன்பக்கத்தையும் பின்பக்கத்தையும் திருப்பித் திருப்பி ஒரு முறை பார்த்தார் இன்ஸ்பெக்டர். அது பிரிக்கப்பட்ட உறையாய் இருந்தது. காகிதத்தை எடுத்தார். உறையின் மேல் தபால் முத்திரையோ, ஸ்டாம்போ எதுவும் இல்லை. யாரோ நேரடியாகத்தான் கொண்டு வந்து போட்டிருக்கணும். கடிதத்தைப் பிரித்துப் படித்தார் இன்ஸ்பெக்டர்.

"அன்புள்ள அப்பா" என்று தொடங்கியிருந்த கடிதம் "என்னை இங்கு மிகவும் கொடுமைப்படுத்துகிறார்கள். என்னை உயிருடன் பார்க்க விரும்பினால் ரூபாய் இரண்டு லட்சத்தைக் கொடுத்து தயவு செய்து மீட்கவும். அப்புறம் எனக்குத் தேர்வு மார்க்குகள் வந்து விட்டன. தமிழ், 85, ஆங்கிலம் 83, கணிதம் 72, வணிகவியல் 65, பொருளாதாரம் 70, கணக்குப் பதிவியல் 65, புள்ளியியல் 78. இத்தேர்வில் நான் 1st class-ல் பாஸ் பண்ணியிருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன் பணத்தைக் கொடுத்து என்னை எப்படியாவது உடனே காப்பாற்றவும்" என்று முடிக்கப்பட்டு ரவியின் கையெழுத்தோடு கடிதம் முடிந்திருந்தது.

"இதை யார் கொண்டு வந்து லெட்டர் பாக்ஸில் போட்டாங்கன்னு தெரியலே" என்றார் சாமிநாதன்.

"இந்தக் கடிதத்தை ஒரு ஜெராக்ஸ் காப்பி எடுத்து எனக்குக் கொடுங்க.

கடத்தினவங்களுக்குப் பணம்தான் குறிக்கோள்னு தெரியுது. அதனால் ரவியின் உயிருக்கு எந்த அச்சுறுத்தலும் இருக்காது. நாங்க இப்பவே எங்க முயற்சியை ஆரம்பிக்கிறோம்" என்று கிளம்பினார் இன்ஸ்பெக்டர்

சேகர், ரவியின் கடிதத்தை ஜெராக்ஸ் செய்து கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான்.


இன்ஸ்பெக்டர் அவனை வரவேற்று ஜெராக்ஸ் பிரதியைப் பெற்றுக் கொண்டு நன்றி கூறினார்.

"சார், இந்தக் கடிதத்தைப் பற்றி சில விபரங்களை நான் உங்களிடம் சொல்ல வேண்டும்" என்று சேகர் கூறியதும் இன்ஸ்பெக்டர் வியப்போடு அவனை நோக்கினார்.

"எங்க அண்ணனின் கடிதத்தில் மார்க் எல்லாம் எழுதியிக்கார். இந்த மார்க் மூலமா எங்கண்ணன் ஏதோ சொல்ல வர்றார்னு எனக்குத் தோன்றுது. ஏன்னா அவனுக்கு வணிகவியலோ பொருளாதாரமோ பாடமே இல்லே! ரொம்பக் கடுமையா சிந்திச்சேன். வெளிச்சம் தெரியுறமாதிரி இருந்தது. கம்ப்யூட்டர்ல ஒவ்வொரு எழுத்துக்கும் அதாவது A,B,C,D... ASCII வால்யூ (value) ன்னு Code No. இருக்கு எங்கண்ணன் பரிட்சை நேரத்துல இதை என்கிட்ட மனப்பாடம் பண்ணி, சரியான்னு பார்க்கச் சொல்லி ஒப்பிச்சிருக்கார். ஒரு வேளை அதை வச்சு ஏதாவது சொல்ல வர்றாரோன்னு அவர் குறிப்பேட்டை எடுத்து அந்த மார்க்குக்கு உரிய எழுத்தைப் பார்த்தேன். அதையெல்லாம் இதுல எழுதியிருக்கேன். நீங்களே பாருங்க" என்று ஒரு சீட்டை இன்ஸ்பெக்டரிடம் தந்தான்.

இன்ஸ்பெக்டர் திகைப்புடன் சீட்டை வாங்கிப் பார்த்தார். 85(U) 83(S) 72(H) 65(A) 70(F) 65(A) 78(N) 1(49) ST(8384) CLASS (6776658383) என்றிருந்தது அதில்.

"இது என்ன சேகர்! எனக்கு ஒன்றும் புரிய வில்லையே!" என்றார் இன்ஸ்பெக்டர் குழப்பத்துடன்.



"சார். நான் பிராக்கெட்டில் எழுதியிருக்கிற விளக்கங்களை மட்டும் சேர்த்துப் படிச்சுப் பாருங்க. USHA FAN, 4983846776658383 என்று வரும். உஷா ஃபேன் ஹோல்ஸேல் டிஸ்ட்ரிப்யூட்டர்கிட்ட கொடுத்து, இந்த நம்பர் உள்ள ஃபேன். எங்க யாருக்கு வித்திருக்காங்கன்னு விசாரியுங்க. முகவரி கிடைக்கலாம்." என்றான் சேகர்.

இன்ஸ்பெக்டர் பரபரப்படைந்தார். மொத்த டிஸ்ரிபியூட்டருடன் தொடர்பு கொண்டு கேட்டார். அவர்களிடம்



இருந்து ஃபேன் வாங்கிட்டு போனவங்க முகவரி கிடைத்தது. மின்னல் வேகத்தில் அந்த முகவ்ரிக்குப் போய் வளைத்தார்கள்.

அடைக்கப்பட்டுக் கிடந்த ரவியை விடுவித்தார்கள். அதற்குப் பிறகுதான் இதற்கெல்லாம் காரணம் சாமிநாதனின் பழைய பார்ட்னர் பரமசிவம்தான் என்பதும், அவர்தான் இப்படி ரவியைக் கடத்த திட்டமிட்டார் என்பதையும் அறிந்து அவரையும் கைது செய்தனர்.

"என்னை அடைச்சு வச்சிருந்த அறையில் எனக்கு ஒரு புது டேபிள் ஃபேன் தந்திருந்தாங்க. கடிதம் எழுதச் சொன்னாங்க. உடனே ஒரு யோசனை தோணுச்சு. அதுபடி அந்த ஃபேனோட அடி பாகத்துல இருந்த உற்பத்தி நம்பரை இப்படி என் மார்க்கை எழுதரமாதிரி அவங்களுக்கு சந்தேகம் வராதபடி எழுதினேன். வணிகவியல், பொருளாதாரம்னு எழுதினா எனக்கு அந்த சப்ஜெக்டே கிடையாதேன்னு சந்தேகம் வரும்னு எனக்கு நம்பிக்கை இருந்தது. என் நம்பீக்கை வீண் போகலை. என் தம்பி புத்திசாலி. அவன் கண்ணுல பட்டுடுச்சு. எனக்கும் விடுதலை கிடைச்சது" என்று தம்பியைப் பாராட்டினான் ரவி.

- ஆர். கோவிந்தராஜன்




என்ன பொருள்? எந்த தெய்வம்?

– போட்டி














இங்கே பதினோறு பொருள்களும் பதினோறு தெய்வங்களின் திருவுருவங்களும் தரப்பட்டுள்ளன. பொருள்களின் இரண்டாவது எழுத்து, தெய்வங்களின் இரண்டாவது எழுத்தாகும். உதாரணமாக கரும்பு: இதன் இரண்டாவது எழுத்து 'ரு'. இரண்டாவது எழுத்தாக 'ரு' உள்ள தெய்வம் எது என்பதைப் படங்களில் பார்த்துக் கண்டு பிடித்தால் "பிரும்மா" என்று வரும். எனவே கரும்புக்கு பிரும்மா. இதில் "கரும்பு" என்று எழுதினால் போதும். மீதி உள்ளவைகளில் எந்தப் பொருள் எந்தத் தெய்வத்தைக் குறிக்கிறது என்பதைக் கண்டு பிடித்து தபால்கார்டில் எழுதி முகவரிக் கட்டத்தை வெட்டி ஒட்டி அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் கண்டிப்பாகத் தங்கள் இந்திய தொடர்பு முகவரியைத் தர வேண்டும். முகவரிக் கூப்பனில்லாது வருபவை ஏற்கப்பட மாட்டா. *முடிவு தேதி 31.8.1995.*

★ பெறுநர்
★ ஆசிரியர், கோகுலம்
★ 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
★ ஈக்காடுதாங்கல்,
★ சென்னை - 600 097.

★ ★ ★



என்ன தவறு தெரியுது?

விடை : நாயிடம் கரும்பு! யானையிடம் எலும்பு!

காசு தா!

"குமரா, போய் எட்டணா வெத்திலையும், நாலணா பாக்கும் வாங்கிட்டு வா..." என்று ஒரு ரூபாயைத் தந்தார் பாட்டி.

பாட்டி தந்த ஒற்றை ரூபாயை எடுத்துக் கொண்டு கடைக்குச் சென்று வந்தவன், வெற்றிலை பாக்கைத் தந்துவிட்டு, பத்து பைசாவை மீதியாகத் தந்தான்.



"ஏல குமரா... இருபத்தியஞ்சு காசுல்ல மீதி இருக்கணும்...?" என்று பாட்டி கேட்டார்.


"ம்... எனக்குக் கடைக்குப் போனதுக்கு எவன் காசு தருவான்? நான் பதினஞ்சு காசு எடுத்துக்கிட்டேன்..." பதிலிறுத்தான் குமரன்.

"இது கெட்ட பழக்கம்டா. படிக்கிற புள்ள..." எனப் பாட்டி தொடரவும்,

"சும்மா கம்னு இரு பாட்டி. நான் எங்க போறதா இருந்தாலும் காசு தந்தாத்தான் போவேன். போய் வருவது எனக்குத்தானே கால்வலி...? உன் வேலையைப் பார்..." என்றான் குமரன்.

குமரன், எப்பொழுதுமே இப்படித்தான். பக்கத்துத் தெருவிலிருக்கும் தன் நண்பன் வீட்டிற்குப் போய் நோட்ஸ் வாங்கிவர அண்ணா அவனை அனுப்பினாலும் சரி, அம்மா கடைக்கு அனுப்பினாலும் சரி, இருபத்தைந்து காசு தந்தால்தான் போவான். இல்லாவிட்டால் போக மாட்டான். உறுதியாக மறுத்து விடுவான். அவனைத் திருத்த யாராலும் முடியவில்லை.

மறுநாள் காலை பள்ளி கிளம்புவதற்காக குமரன் குளிக்கச் சென்றான். வாளியில் தண்ணீர் எடுத்துக் கொண்டு சென்றவனிடம், "குமார், இருபது பைசா



உலக முதல்

மண்டைக் குள்ளே இந்த வினா
குடைந்த தெடுக்குது -- என்
மனதுக் குள்ளும் இதே வினா
அரித் தெடுக்குது.
உண்மை யினை நீங்கள் நன்றாய்
உணர்ந்த திருப்பீரே - இந்த
உலகத் துக்கு முதல் எது
உரைத் திடுவீரே.

நிலம் நீர் காற்று வானம்
நெருப்பும் சேர்த்துதான் - நாம்
நீண்ட நாளாய் அறிந் திருக்கும்
பஞ்ச பூதங்கள்.
உலகம் இந்தப் பஞ்ச பூதச்
சேர்க்கை என்றாலும் - இதில்
உலகத் திற்கு முதல் என்று
எத்தனைச் சொல்வதோ?

உலக மொழி அத்த னைக்கும்
அகரம் முதலாம் - இந்த
உலகத் துக்கு அந்த ஆதி
பகவன் முதலாம்.
பலப் பலவும் எண்ணி இன்னும்
குழம்ப வேண்டுமா? - குறள்
படித் துணர்ந்தால் தன்னால் உள்ளத்
தெளிவு வராதோ?

— ரா. பொன்ராசன்

கொடு. தெரு முனையிலிருந்து நான் தண்ணீரைத் தூக்கி வருகிறேனே? எனக்குக் கால்வலி இருக்காதா? ம்... எடு காசை?" என்றான் அண்ணா.

குமரன் பிடிபட்ட திருடன் போல் முழித்தான். இருந்தாலும் "உன் தண்ணீர் எனக்கு வேண்டாம். நானே போய்த் தண்ணீர் பிடித்து வருகிறேன்" என்றபடி குடத்தை எடுத்துக் கொண்டு தெரு முனைக் குழாயடிக்குச் சென்றான். க்யூவில் அரைமணி நேரம் காத்திருந்து ஒரு குடம் தண்ணீர் எடுத்து வந்து குளித்தான்.

"அம்மா, சீக்கிரம் டிபனை எடுங்கள். பள்ளிக்கு நேரமாகிவிட்டது" என்று கத்தினான்.

இட்லியும், சட்னியும் எடுத்து வைத்த அம்மா, "ஐம்பது பைசாவைத் தந்து விட்டுச் சாப்பிடு. இட்லி செய்வது என்ன சாதாரண காரியமா? கைவலிக்க மாவரைத்து சட்னியரைத்து என்ன பாடுபட வேண்டியிருக்கு? எனக்குள்ள கைவலி எனக்குத்தானே தெரியும்? ம்... சீக்கிரம். மதிய டிபனையும் டிபன் பாக்ஸில் எடுத்து வைத்துவிட்டேன். அதற்கும் ஒரு ஐம்பது பைசா தந்துவிடு..." என்று சொல்லும்போதே,


"குமரா, உன் டிரஸ்ஸைக் கழற்றி நீ பாட்டுக்கு துவைக்கப் போட்டுவிட்டாயே? யார் துவைப்பாங்க? அதற்கு இரு பத்தைஞ்சு காசு தந்தாத்தான் இனிமே தோய்ப்பேன். என்ன சொல்றே? காசு தரியா, இல்லை நீயே தோய்த்துக் கொள்கிறாயா...?" என அக்கா கேட்டாள்.

குமரனுக்குத் தன் நிலை புரிந்துவிட்டது. தன்னைப் போலவே எல்லோரும் காசு கேட்க ஆரம்பித்தால் குடும்பம் என்னவாகும் என்பது உறைத்தது. தன் குடும்பத்தார்க்கு உதவ காசு கேட்பது எத்தனை அற்பமான செயல் என்பதை உணர்ந்தான். 'நம் பொருட்டு, நமக்காக இவர்களும் வேலை செய்வது எப்படி நமக்கு மட்டும் உறைக்காமல் போனது என்று வியந்து கொண்டான்.

"அம்மா, அண்ணா, அக்கா, பாட்டி, எல்லோரும் என்னை மன்னியுங்கள். நான் இனிமேல் காசு கேட்க மாட்டேன்" என்றான் திருந்திய குமரன்.


— எஸ். அமுதா.


'நம்பிக்கை துரோகம்'


ஒரு நாள் - காட்டில் புலி ஒன்று பயந்து வேகமாக ஓடுவதைக் கண்ட நரி -
!!
கதை/படம்: ரஜினி..
எதுக்கு இப்படி ஓடறே...?!
நண்பா.. கையில் துப்பாக்கியுடன் இரண்டு பேர் என்னைத் துரத்தி.! வர்றாங்க.



நீ தான் என்னைக் காப்பாற்றணும்!
இதைக் கேட்ட நரி யோசித்தது.
இந்த அயோக்கியனுடன் இருந்தால் நமக்கு ஆபத்து!
நழுவியது நரி—
இதைக் கவனித்துக் கொண்டிருந்த குரங்கு..
நண்பா! என்ன நடந்தது? ஏன் சோகமாக இருக்கிறாய்!
?


விபரத்தைக் கூறியது புலி–
அந்த வேட்டைக்காரர்–களிடமிருந்து காப்பாற்று!
உனக்கு நிறைய மாமிசம், பழம் பரிசாகத் தருகிறேன்!
புலியின் பேச்சை நம்பிய குரங்கு ஒரு யோசனை கூறியது–
நீ அவர்களைக் கொல்லாமல் இருக்க வேண்டும்!
சரி..
உடனே வேட்டைக்காரர்களிடமிருந்து துப்பாக்கியைப் பறித்தது குரங்கு.
அண்ணே துப்பாக்கி போச்சு...


அப்போது— புலியைக் கண்ட ஒருவன் மரத்தில் ஏறிக் கொண்டான்.
ஐயோ... புலி... புலி...
உதவி... உதவி...
மாட்டிக் கொண்ட மற்றவனிடம் சென்ற புலி, அவனை அன்போடு முகத்தில் தடவிக்கொடுத்தது.
ம்... போதும் வா போகலாம்..
புலி சென்றதும்—
புலி! என்னிடம் அன்போடு நடந்து கொண்டது..
வழியில் புலி—
நண்பா! காப்பாற்றியதற்கு நன்றி! அவர்களைக் கொல்லவில்லை! பசியோடு இருக்கிறேன் உன்னை...
மரத்தில் தாவியது குரங்கு—
நண்பரே, நம்பிக்கைத் துரோகம் உன் பிறவிக் குணம்!

மடச்சாமி!

பி. சாமிநாதன்


பனையம்பட்டி என்றொரு கிராமம் இருந்தது. அவ்வூரில் மாடச்சாமி என்பவன் வாழ்ந்து வந்தான். இவன் மனைவிக்கு மிகவும் பயந்தவன்! அவன் மனைவி எது சொன்னாலும் தட்டாமல் கேட்பான். மனைவியைக் கண்டால் பெட்டிப் பாம்பாய் அடங்கி விடுவான். அவனது ஒவ்வொரு செயலும் சிரிப்பூட்டுவதாக இருக்கும். அவன் செய்யும் ஒவ்வொரு செயலும் மடத்தனமாகவும் இருக்கும். அதனால் அவனை ஊர் மக்கள் மடச்சாமி என்றே அழைப்பார்கள்.

ஒருநாள் அவன் மனைவி சந்தைக்குப் போய் ஒரு கத்தி வாங்கி வா என்றாள். மாடச்சாமி உரிய பணத்தைப் பெற்றுக் கொண்டு சந்தைக்குக் கிளம்பினான். சந்தையிலிருந்து ஒரு கத்தியை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். கத்தியின் முனை கூர்மையாக இருந்ததால் அவன் வரும் வழியில் உள்ள செடிகளின் மேல் கத்தியைக் சுழற்றிக் கொண்டு வந்தான். அதனால் செடியின் இலைகள் அறுபட்டு விழுந்தன. இதைச் சொன்னால், இன்றைக்காவது மனைவி தன்னைப் பாராட்டுவாள் என்று மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருந்தான்.

போகும் வழியில் அவன் கத்தியை மேலே வீசியும் பிடிக்கலானான். ஒரு முறை அவன் வீசிய கத்தி கீழாகப் பறந்து சென்று கொண்டிருந்த ஒரு பருந்தின் மேல் பட்டு பருந்து செத்து விழுந்தது. இதை அறிந்தால் மனைவி கண்டிப்பாளே என்ற பயத்துடன் வீட்டை அடைந்தான் மாடச்சாமி.

மனைவி இவனைப் பார்த்து, "ஏன் எப்படியோ இருக்கிறே?'' என்றாள். மாடச்சாமி எல்லா விஷயத்தையும் சொன்னான். "இதுக்குப் போயி இப்படிப் பயந்துக்கிட்டிருக்கிறியே!" என்று கூறி அவனைத் தேற்றினாள் மனைவி.

இந்தச் செய்தி அவ்வூர் முழுவதும் பரவி பிறகு அந்நாட்டின் மன்னனுக்கும்



எட்டியது. "என் நாட்டில் இப்படி ஒரு வீரனா! பறந்து சென்ற பருந்தையே வீழ்த்தியிருக்கிறான் என்றால், அவன் மிகப்பெரிய வீரனாக இருக்க வேண்டும். உடனே அவனை இங்கு அழைத்து வாருங்கள். அவனைப் பார்க்க வேண்டும்" என்று மன்னன் உத்தரவிட்டான்.


பனையம்பட்டிக்கு வீரர்கள் வந்தனர். ஊர்க்காரர்கள் அவர்களை ஆச்சரியத்துடன் பார்த்தனர். என்ன விஷய

மென்று சிலர் கேட்டனர். அதற்கு அந்த வீரர்கள், மாடச்சாமியை அழைத்து வர எங்கள் மன்னர் உத்தரவிட்டிருக்கிறார் என்றனர். பிறகு மாடச்சாமியின் வீட்டைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அங்கு வந்தனர்.

மாடச்சாமி இவர்களைப் பார்த்தவுடன் வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டான். அவன் மனைவி வீரர்களை விசாரித்து விஷயத்தை அறிந்து கொண்டு தன் கணவனிடம் "பயப்படாமல் போ. இவர்கள் உன்னை எதும் செய்ய மாட்டார்கள்" என்று தைரியம் கூறி அனுப்பி வைத்தாள்.

மாடச்சாமி பயத்துடன் அரண்மனை வந்தடைந்தான். அரண்மனை வாயிலில் பொதுமக்கள் நெருங்கிக் கொண்டு மாடச்சாமியைப் பார்க்கக் காத்திருந்தனர். மாடச்சாமி அங்கு வந்ததும் மக்கள், "வாழ்க மாடச்சாமி! வெல்க அவரது வீரம்!" என்று முழங்கினர். இதைப் பார்த்தவுடன் மாடச்சாமிக்கு கை கால்கள் நடுங்கின.

அரசர் வந்து மாடச்சாமியை வரவேற்றார். அருகே இந்த ஆசனத்தைக் காட்டி, "இருக்கையில் அமருங்கள் மாடச்சாமி" என்றார் அரசர். ஆனால் மாடச்சாமி உட்காரவில்லை. பயத்தால் மாடச்சாமிக்கு வேர்த்தது. "மாடச்சாமி எவ்வளவு பெரிய வீரனாயிருந்தும், எத்தனை அடக்கமாக இருக்கிறார்" என்று புகழ்ந்தார் அரசர். பிறகு "மாடச்சாமி நீ ஒரு நிகரற்ற வீரனாதலால் உன்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்கிறேன். அதை முடித்து விட்டால், உனக்கு உயர்ந்த சன்மானம் அளிப்பேன். இங்கு





உள்ள ஒரு காட்டில் கொடிய புலி ஒன்று இருக்கிறது. அது கிராமங்களுக்குள் புகுந்து ஆடு, மாடுகளையும், மனிதர்களையும் கொன்று விடுகிறது. நீதான் அந்தப் பயங்கரப் புலியைக் கொல்ல வேண்டும்'' என்று உத்தரவிட்டார். மாடச்சாமிக்குத் தலை சுற்றியது.

அரசர் இரண்டு வீரர்களை அழைத்து மாடச்சாமியிடம் ஒரு ஈட்டியைக் கொடுத்து "மாடச்சாமியைக் காட்டில் கொண்டு விட்டு வாருங்கள். அவர் புலியைக் கொன்று வருவார்," என்றார். வீரர்கள் மாடச்சாமியை குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு காட்டிற்குப் புறப்பட்டனர். காட்டில் மாடச்சாமியை விட்டு விட்டு அரண்மனை திரும்பினர்.

மாடச்சாமி ஒரு மரத்தின் மேல் ஏறி அமர்ந்து கொண்டான். இரவில் புலி உறுமும் சத்தம் கேட்டது. கையிலே ஈட்டி வைத்திருந்த மாடச்சாமி நடுங்கினான். அந்த மரத்தின் கீழ் புலி வந்து நின்றது. கிளைகள் ஆடுவதைக் கண்டு புலி மரத்தின் மேல் ஒருவர் அமர்ந்திருப்பதைப் பார்த்தது. பசியுடன் இருந்த புலி அங்கேயே அமர்ந்து மேலே வாயை அகலத் திறந்து கொட்டாவி விடுவது போல் பார்த்தது.

மாடச்சாமிக்குக் கை கால்கள் நடுங்கின. உடனே அவனது கையிலிருந்த ஈட்டி நழுவி புலியின் வாயில் பாய்ந்தது. உடனே புலி செத்து விட்டது!

மன்னர் அங்கு வீரர்களுடன் வந்து மாடச்சாமியைப் பார்த்து "இவ்வளவு பயங்கரமான புலியை இத்தனை எளிதாகக் கொன்று விட்டாயே! நீதான் இனி என் படைத் தளபதி" என்றார். மாடச்சாமி மயங்கியே விழுந்தான்!

எழுத்துக் கூட்டி உரக்கப் படிக்க ஓர் ஈசாப் கதை!


கோழியும்

இரண்டு பக்காத் திருடர்கள் ஒரு ஜமீன்தார் வீட்டில் திருட திட்டம் போட்டார்கள். குடும்பத்துடன் ஜமீன்தார் ஒரு திருமணத்திற்காகப் பக்கத்து ஊருக்குப் போயிருந்தார். வாய்ப்பை எதிர்பார்த்திருந்த திருடர்கள் திட்டமிட்டபடி அன்று இரவு திருட வந்தார்கள்.

ஜமீன்தார் புத்திசாலி. திருடர்கள், தான் ஊரில் இல்லாத போது திருட வருவார்கள் என்பதை எதிர்பார்த்து விலை உயர்ந்த நகை நட்டுகளையும், பணத்தையும் நண்பர் ஒருவர் வீட்டுக்கு பத்திரமாக அனுப்பி வைத்து விட்டார்.

திருடர்கள் இருவரும் மிகவும் கஷ்டப்பட்டு, கதவை உடைத்து, பீரோக்களை உடைத்தனர். அவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. விலை மிக்க பொருள் என்று அங்கு எதுவுமே இல்லை.

திருடர்களுக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வந்தது. அந்த நேரத்தில் பொழுது விடியத் தொடங்கி விட்டது. ஜமீன்தாரின் வீட்டில் இருந்த சேவல் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது. "கொக்



திருடர்களும்...!

கரக்கோ" என்று கம்பீரமாகக் கூவித் தன் கடமையைச் செய்தது.

ஏற்கெனவே ஆத்திரத்துடன் பொங்கிக் கிடந்த திருடர்கள் இருவரும் சேவலைக் கெட்டியாகப் பிடித்தனர்.

"நகை நட்டுதான் கிடைக்கவில்லை. இந்த சேவலையாவது பிடித்துக் கொண்டு போய், குருமா வைத்து, ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வோம்" என்றான் ஒரு திருடன்.

"வேண்டாம் நண்பா. திருட திட்டம் போட உங்களுக்கு அறிவு இருப்பது போல், திருட்டைத் தவிர்க்க என் எஜமானருக்குத் தோன்றக் கூடாதா? நீங்கள் ஏமாந்தீர்கள் என்றால் அதற்காக என்னையா பலியாக்குவது? நான் ஏழை வீட்டில் இருந்தாலும் கூவுவேன். பணக்காரன் வீட்டில் இருந்தாலும் கூவுவேன். முறைப்படி கூவுவது என் தொழில். அது என் இயல்பு" என்று கெஞ்சியது சேவல்.

"முறைப்படி செய்பவர்கள் எல்லாம் எங்களுக்கு எதிரிகள். கோழியை அமுக்கு" என்றான் இரண்டாவது திருடன்.

முறை தவறி வாழ்பவர்களுக்கு, முறையோடு பணி செய்வோர்தான் முதல் பகைவர்!



'கு'வில் தொடங்கும் பொருள்கள் எத்தனை?– போட்டி முடிவு

ஏராளமான பேர்களுக்குமேல் இதில் கலந்து கொண்டு தங்கள் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். போட்டிக்காக வெளியிடப்பட்ட படத்தில் 'கு'வில் தொடங்குபவை 17 பொருள்களே. அதிக அளவிலான 'கு' பொருள்களை எழுத வேண்டும் என்பதற்காக இஷ்டத்துக்கு சீல் விட்டிருக்கிறார்கள். குடம், கும்பம் இரண்டும் ஒன்றுதானே? குழந்தை, குழவி இரண்டும் ஒன்றுதானே? ஏகப்பட்ட பேர்கள் இவை இரண்டையுமே தனித்தனியாக எழுதி எண்ணிக்கையை உயர்த்தப் பாடுபட்டிருக்கிறார்கள். இதே போல், படத்தில் இரண்டு குடைகள் இருக்கின்றன. இவைகளை ஒருமுறைதானே குடை என்று எழுத முடியும்? படத்தில் ஒன்பது குருவிகள் இருக்கின்றன. ஒரு தம்பி 'குருவி' என்று ஒன்பது முறை ஒன்பது குருவிகளை எழுதியிருக்கிறான்! பரிசீலிக்கும்போது திகைப்பாகக் கூட இருந்தது.

சரியான விடை:

1, குதிரை, 2, குடை, 3, கும்பம்(அல்லது) குடம், 4) குஞ்சங்கள், 5) குஞ்சரம்(யானை), 6) குப்பை, 7) குப்பைத் தொட்டி, 8) குடிநீர், 9) குரங்காட்டி, 10) குரங்கு, 11) குச்சி, 12) குவளை, 13) குருவி, 14) குழந்தை(அல்லது) குழவி, 15) குல்லா, 16) குங்குமப் பொட்டு, 17) குடில் (அல்லது) குடிசை.

இந்தப் பதினேழையும் எழுதியுள்ள எழுபேரும் தலா இருபது ரூபாய் பரிசைப் பெறுகிறார்கள்.

1. பி. ஞானகிரோஸி, திருச்சி–21; 2. ஜே. காந்தி, மேட்டூர் அணை–1; 3. ஆர். பார்த்திபன், புதுச்சேரி–10; 4. பி. காயத்ரி, சிதம்பரம் 5. கா. சசிகலா சரோஜினி, கோட்டுச் சேரி அஞ்சல். 6. ந. தமிழ்ச்செல்வி, திருச்சி –5. 7. என். பிரியங்கா, சென்னை–5.

பரிசு பெற்றோருக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

கோடை விடுமுறைப் போட்டி - 2 முடிவு

இந்தப் போட்டியை அமைக்கும்போதே வாசகர்களிடையே இதற்கு வரவேற்பு இருக்குமா என்று யோசித்தோம். எதிர்பார்த்ததைவிட அதிக எண்ணிக்கையில் வாசகர்கள் கலந்து கொண்டு அசத்தி விட்டார்கள். "திருக்குறளை இந்த சாக்கிலாவது படிக்கத் தூண்டிய உங்களுக்கு நன்றி" என்று பல ஆசிரியர்களும் பெரியோர்களும் எழுதி உற்சாகமூட்டியிருக்கிறார்கள்.

பரவலான ஒரு குறையை கலந்து கொண்டு அனுப்பிய பலரது விடைகளில் காண முடிகிறது. "மொத்தம் 20 படங்கள். இவை பத்து குறட்பாக்களின் தொடக்கத்தையும் முடிவையும் குறிப்பவை. இந்தப் பத்தும் அறத்துப் பால் பொருட்பாலில் வருபவை" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம். சிலர் இருபது குறள்களை எழுதியிருந்தார்கள். வேறு சிலர் 'இன்பத்துப்பால்' பகுதியில் இருந்து எடுத்து எழுதியிருந்தார்கள். எப்படி இருந்தாலும், வாசகர்கள் காட்டியுள்ள ஆர்வம் மனதிற்கு ஊக்கமளிப்பதாக உள்ளது.

ஒரே ஓர் வாசகரைத் தவிர யாருமே விடைக்குரிய பத்து குறட்பாக்களையும் சரியாக எழுதவில்லை. எனவே, அதிக அளவு சரியாக எழுதியவர்களுக்கும் ஊக்கமளிக்க வேண்டும் என்ற நோக்கில் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது.

முதல் பரிசாக ரூபாய் ஐம்பது பெறுபவர்: (பத்து குறட்பாக்களையும் சரியாக எழுதியவர்:

அ. சங்கர், கள்ளிக் கோட்டை, கேரளா.

இரண்டாவது பரிசாக தலா ரூபாய் இருபத்தைந்து பரிசு பெறுவோர்: (ஏழு குறட்பாக்களைச் சரியாக எழுதியவர்கள்)

1. செ. கோதை ஈஸ்வரி ஆத்தங்குடி;
2. இரா. மரகதவல்லி, மதுரை - 7.

மூன்றாவது பரிசாக ரூபாய் இருபது பரிசு பெறுவோர்: (ஆறு குறட்பாக்களைச் சரியாக எழுதியவர்கள்.)

1. சி. அருள்வாசகன், தேத்தாகுடி அஞ்சல்;
2. ஆர். விஜயா, பாளையங்கோட்டை

நான்காவது பரிசாக தலா பதினைந்து ரூபாய் பரிசாகப் பெறுவோர்: (ஐந்து குறட்பாக்களைச் சரியாக எழுதியவர்கள்.)

1. பா. ஜெயக்குமார் வந்தவாசி;
2. கே. ஆர். ராகவன், சென்னை - 4;
3. பி.எம். சபிதா, திருச்சி - 17;
4. ச.ரா. அருண், தஞ்சை - 1;
5. ந. தமிழ்ச்செல்வி, திருவானைக்கோவில்.

சரியான விடை:

கோள் இல் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

ஏரி உழாஅர் உழவர் புயல் என்னும்
வாரி வளம் குன்றிக் கால்.

தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

கால்ஆழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்.

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு.

படைகுடி கூழ் அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

தூக்கம்

ஆழி



மனிதர்கள், தம் வாழ்நாளில் தூங்குவதைக் கணக்கிட்டால் சுமார் 23 ஆண்டுகள் வரும். மனிதர்களுக்குத் தூக்கம் மிகவும் அவசியம். உடலும் மூளையும் வளர்வதற்கும், உடலின் சத்தியைக் காப்பதற்கும் தூக்கம் தேவை. பிறந்த குழந்தைகள் 18 மணி நேரம் தூங்குகின்றன; 6 மணி நேரம் விழித்திருக்கின்றன. வளர்ந்த மனிதர்கள் 6 மணி நேரம் தூங்குகிறார்கள்; 18 மணி நேரம் விழித்திருக்கிறார்கள்.

குழந்தைகள் விழித்துக்கொண்டிருக்கும்போது வளர்வதைவிட, தூங்கும்போதுதான் நன்றாக வளர்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



ஒரு மனிதன் தூங்கும்போது சராசரியாக 35 தடவைகள் புரண்டு படுக்கிறான் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்!



ஒரு மனிதன் சிறிது கூடத் தூங்காமல் இருந்தால், அவன் 14-வது நாள் இறந்துவிடுவான். என்று சொல்லுகிறார்கள்.






ஆனால்... இங்கிலாந்தில், ரெஸ்டர்ஷயரில் 'யூஸ்டாஸ் பர்னெட்' என்பவர், 28 வயது வரைதான் தூங்கினார்! அதற்குப் பிறகு இரவும் பகலும் அவருக்குத் தூக்கமே வரவில்லை. சுமார் 60 ஆண்டுகள் அவர் தொடர்ந்து தூங்காமலேயே 88 வது வயதில் இறந்துபோனார்!



திபெத்தில் பகலில் யாருமே தூங்கமாட்டார்கள். சின்னக் குழந்தைகளையும், நோயாளி களையும்கூட தூங்கவிட மாட்டார்கள். பகலில் தூங்கி னால், பகல்பிசாசுகள் பிடித் துக் கொள்ளும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.


மத்திய ஆப்பிரிக்காவில் 'செட்சே' என்னும் ஈக்கள் கடித்தால் தூங்கிக்கொண்டே யிருப்பார்கள். தூக்க வியாதியை உண்டுபண்ணும் ஈக்கள் அவை. விலங்குகளை இந்த ஈக்கள் கடித்தாலும் இப்படித்தான்!





'தூங்கு மூஞ்சி' என்று ஒருவகை மரம் இருப்பது தெரியும். ஆனால், உண்மையாகவே எல்லா மரங்களும் நம்மைப் போன்று இரவு நேரத்தில் நன்றாகத் தூங்குகின்றன என்று சோவியத் நாட்டு விஞ்ஞானி 'விளாதிமீர் நென்கியூன்' கண்டு பிடித்துச் சொல்லியிருக் கிறார்.

எறும்புகள் பகல் நேரங்களில் அவ்வப்போது தூங்குகின்றன. ஆனால், இரவு நேரங்களில் எல்லா எறும்புகளும் நெடு நேரம் தூங்குகின்றன.





மீன்களும் பாதுகாப்பான இடத்தில் இருந்து கொண்டு, துடுப்புகளை மட்டும் அசைத்தவாறே தூங்குகின்றன.


பூனை ஒவ்வொரு நாளும் 16 மணி நேரம் தூங்குகிறது. அதாவது, அதன் ஆயுளில் மூன்றில் இரண்டு பங்கு நேரத்தைத் தூங்கியே கழிக்கிறது.






ஆப்பிரிக்கப் பாலைவனங்களில் வாழும் 'ஜெர்போவா' என்னும் எலி, பகல் முழுவதும் தூங்கும். பகலில் அதைப் பார்க்கவே முடியாது. அது இரைதேடு வதெல்லாம் இரவில்தான்!

இந்திய யானை படுத்துத் தூங்குவது உண்டு. ஆனால், ஆப்பிரிக்க யானை நின்று கொண்டேதான் தூங்கும்!






நீர்யானையால் மூச்சை அடக்கிக்கொண்டு நீருக்கு அடியில் கிடந்து தூங்க முடியும். ஆனால், சில சமயம் மூச்சு இழுப்பதற்காகத் தூங்கிக்கொண்டே நீர் மட்டத்திற்கு வரும்!

'ஸ்லோத்' என்னும் பிராணி ஒரு நாளில் 18 மணி நேரம் தூங்கும். தூங்குவதும் தலைகீழாகத் தொங்கிக்கொண்டுதான்!






அலாஸ்காவில் உள்ள 'நில அணில்' வருடத்தில் 9 மாதங்கள் இரவும் பகலும் தூக்கத்தில் ஆழ்ந்து விடும்! அது வெளி உலகில் வாழும் காலம் ஆண்டுக்கு 3 மாதங்களே! அந்த 3 மாதங்களில்தான் அது இரை தின்பது, குட்டிப் போடுவது, பாதுகாப்பது எல்லாம்! அந்த 3 மாதங்களிலும் அது ஒரு நாளைக்கு 17 மணி நேரம் விழித்திருக்கும்; 7 மணி நேரம் தூங்கும்!




'கிரபெஸ்' என்பது நீர்மூழ்கிப் பறவை. அது நீரில் மிதந்தபடித்தான் தூங்கும். தூங்கும்போது நீரோட்டத்தில் அடித்துக் கொண்டு போகாதிருக்கத் தன் ஒற்றைக் காலி னால் துடுப்புப் போட்ட படி வட்டமடித்துக் கொண்டிருக்கும்.



'தவளைவாய்' என்று ஓர் இரவுப் பறவை, சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம் வரை, தூங்கிக்கொண்டே யிருக்கும். அது தூங் கிக் கொண்டிருக்கும் போது, யாராவது அதைத் தூக்கிக் கொண்டு போனால் கூட அது விழித்துக் கொள்ளாது!




'ஆல்பாட்ரோஸ்' என்னும் பறவை, இரவும் பகலும் கடல்மேல் பறந்து கொண்டே யிருக் கும்; பறந்து கொண்டே தூங்கும்; முட்டை யிடத்தான் தரையில் இறங்கும். ஆயிரக் கணக்கான கி.மீ. தூரம் நிற்காமல் பறந்து கொண்டே யிருக்கும்!



'பிளமிங்கோ' என்னும் பறவை தூங்குவது தன் ஒற்றைக் காலை ஊன்றி நின்றபடித் தான்! தன் முதுகின் மேல் தலையைச் சாய்த்து வைத்துக் கொண்டு தூங்கும் அது!

ஆரோக்கியமாக இருக்கும் புறாக்கள் இரவும் பகலும் தூங்குவதே யில்லை. நோயுற்ற புறாக்கள் மட்டுமே தூங்கு கின்றன.





செய்ய மாட்டேன்!

தா. ஜானகி

ஹரீஷுக்கு ஜுரம் வந்து நான்கு நாட்கள் ஓடி விட்டன. ஜுரம் இறங்கி விட்டது. ஆனால் உடம்பு சோர்வாக, அசதியாக, பலமற்று இருப்பது போல் உணர்ந்தான். மெத்தையில் மெதுவாகப் புரண்டு படுத்தான். மேலே சுற்றும் காற்றாடியையே பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்தவனுக்குத் திடீரென்று அந்த எண்ணம் மின்னல் போல் பளிச்சிட்டது.

ஆம் அப்படிச் செய்தால் என்ன? அப்பாவைத் திருத்துவதற்கு இதுதான் வழி.

மனதில் தோன்றிய எண்ணத்தைச் செயலாக்க படுக்கையை விட்டு எழுந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். வழக்கம் போல இந்த நேரத்தில் அப்பா குளித்துக் கொண்டிருப்பார் என்பது அவனுக்குத் தெரியும். அம்மா சமையல் அறையில் இருப்பாள். மெதுவாக போன் இருக்கும் இடத்திற்கு வந்தான். நம்பரைச் சுழற்றி டாக்டருக்குப் போன் செய்தான்.

"ஹலோ! ஹரீஷா! எப்படி இருக்கே. உன்னைப் பார்க்கத்தான் கிளம்பிக் கொண்டிருக்கேன்."

"டாக்டர். நீங்க எங்க குடும்பத்தோட டாக்டர் மாத்திரமில்லை. குடும்ப நண்பரும் கூட. அதனால்... நீங்க எனக்காக... ஒரு பொய் சொல்லணும்."

"நானா...! எதுக்குப்பா பொய் சொல்லணும்? கொஞ்சம் தெளிவாகத் தான் சொல்லேன்?"

உறுதியான குரலில் தன் திட்டத்தை விவரித்தான் ஹரீஷ்.

"வெரிகுட் ஐடியா! இப்பவாவது... இப்படியாவது.. என் நண்பன் சிவா... அதான் உன்னோட அப்பா திருந்தினால் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி ஹரிஷ்."

"நன்றி டாக்டர்" போனை வைத்து விட்டுத் திரும்பியபொழுது அம்மா கையில் ஹார்லிக்ஸ் கோப்பையுடன் நின்று கொண்டிருந்தாள்.

"நீ டாக்டர்கிட்டே பேச ஆரம்பிக்கும் போதே நான் வந்துட்டேன். நான் எப்பொழுதுமே உன் பக்கம்தான். நான் பூஜை செய்யற சாமி எப்படியாவது உங்கப்பாவைத் திருத்தினால் சரி".

"அம்மான்னா அம்மாதான்" என்று கூறிவிட்டுப் படுக்கையில் அமர்ந்தபடி ஹார்லிக்சைக் குடித்தான் ஹரீஷ்.

"சமையற்காரர் காலை டிபனைச் செய்து முடிச்சுட்டாரான்னு பார்க்கறேன்"- கூறிவிட்டு அம்மா சமையற்கட்டை நோக்கிச் சென்றாள். மறுபடியும் படுக்கையில் படுத்துக் கொண்டான் ஹரீஷ். கண்கள் பச்சை வண்ண டிஸ்டம்பர் சுவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் மனக் கண்ணில் எட்டு மாதங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி நிழற்படம் போல் தெரிய ஆரம்பித்து.

எட்டு மாதங்களுக்கு முன்னால்-

பள்ளி விளையாட்டு மைதானம். அன்று விளையாட்டு ஆசிரியர் விடுப்பில் இருந்ததால் மாணவர்கள் தங்களுக்குப் பிடித்தமான விளையாட்டுகளை விளையாடிக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரம் ஆடிவிட்டு அந்த வேப்ப மரத்தடியில் ஹரீஷும் அவன் நண்பர்கள் குழுவும் அமர்ந்தனர். கிரிக்கெட், சினிமா என்று பேசிய பிறகு சுற்றுப்புறச் சூழல் தூய்மையாக இருக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர்.

"ஹரீஷ்! உங்க வீட்டிலே இன்னொரு கார் வாங்கியிருக்காங்களாமே?" என்றான் கஸ்தூரி.

"இப்பத்தாண்டா அவங்க அப்பா சாயத் தொழிற்சாலை ஆரம்பிச்சாரு. நல்லா ஓடுது இல்லே... அதான் வாங்கியிருக்காரு" என்றான் முத்து.

"நல்லா ஓடி என்னடா பிரயோசனம்? அந்தத் தொழிற்சாலையாலே பல பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது. என்னவோ உண்மைதான். ஆனா அதே தொழிற்சாலை எத்தனை பேரோட ஆரோக்கியத்தை அட்டை மாதிரி உறிஞ்ச ஆரம்பிச்சிருக்குத் தெரியுமா?"- இது செந்தில்.

"என்னடா சொல்றே செந்தில்?" திடுக்கிட்டு வினவினான் ஹரீஷ்.

"நாம எல்லாம் எட்டாம் வகுப்பு படிக்கிற மாணவர்களாக இருந்தும் நமக்கு விஷயம் தெரியலை. ஆனா, அதே தொழிற்சாலையிலே வேலை பார்க்கிற எங்க சித்தப்பா என்ன சொன்னார் தெரியுமா?"

"என்னடா சொன்னார்?"

"நம்ம ஊர்லே பாலாறு ஓடுறது. இல்லையா? அந்த ஆற்றிலே தொழிற்சாலையோட அத்தனை கழிவு நீரையும் விட்டுடறாங்களாம். அந்த அழுக்குத் தண்ணியைத்தான் நம்ப ஊர் மக்கள் குளிக்க, குடிக்க, சமைக்க, துவைக்கன்னு பயன் படுத்தறாங்க. இதனாலே நம்ப ஊர் மக்களோட ஆரோக்கியம், பாதிக்கப்படறது இல்லையா?"

"ஏண்டா செந்தில். இவங்க அப்பா கிட்டே இதைப்பத்தி யாரும் எடுத்துச் சொல்லலையா?" என்றான் ஜார்ஜ்.

"பட்டதாரியான அவங்க அப்பாவுக்கு தான் செய்யறது பாவம்னு தெரியாதா? பணம் காசு சேரச்சேர மனிதனோட மனசே மாறிப் போயிடுதுன்னு எங்க பாட்டி சொல்வாங்க" என்றான் கஸ்தூரி.



"சுகாதார அதிகாரிங்க வந்தாங்கன்னா பணம் கொடுத்து எப்படியோ சரி கட்டி விடறார்னு எங்க சித்தப்பா சொன்னார்."

"மனிதனுக்கு முக்கியத் தேவை தண்ணீர். சுத்தமான நீர்தான் ஆரோக்கியத்திற்குத் தேவை. அழுக்குத் தண்ணியாலே எத்தனை பயங்கர நோய்கள் எல்லாம் உண்டாகிறதுன்னு நாம அறிவியலிலே படிக்கிறோம். இருந்தாலும் உங்கப்பா செய்யறது சுத்த மோசம் ஹரீஷ். சுற்றுப்புறச் சூழலைப் பற்றி மேடையிலே பேசி நீ பதக்கம் பரிசு வாங்கி என்னடா பிரயோஜனம்? வீட்



டிற்குப் போய் உங்கப்பாகிட்டே இதைப் பற்றிப் பேசி அவர் மனசை மாற்ற முயற்சி செய்டா? அதுதாண்டா இந்த ஊருக்கு நீ செய்யும் பரிசு," என்றான் ஆவேசமான குரலில் கஸ்தூரி.

நண்பர்கள் கூறியதைக் கேட்ட ஹரீஷ் அப்படியே உறைந்து போனான். அது அவனுக்கு முற்றிலும் புதிய விஷயம்தான்.

அன்று மாலையே தந்தையிடம் இதைப்பற்றி விசாரித்தான். சண்டை போட்டான்.

"ஹரீஷ்! நீ சின்னப் பையன். உனக்கு உலக அனுபவம் போதாது. மத்தவங்க என்ன வேண்டுமானாலும் சொல்வாங்க. அவங்க சொல்றபடி எல்லாம் நம்மால நடக்க முடியுமா? நம்ப தொழிற்சாலை எத்தனை பேருக்கு சாப்பாடு போடறதுன்னு உனக்குத் தெரியுமா? பேசாம உன் படிப்பைக் கவனி" என்று கண்டிப்பான குரலில் கூறி விட்டார்.

தந்தையிடம் சண்டைபோட்டு நான்கு நாட்கள் பேசாமல் இருந்ததுதான் மிச்சம். அவர் கொஞ்சம் கூட மசியவில்லை. டாக்டர், தாத்தா, அம்மா என்று யார் சொல்லியும் கேட்கவில்லை. அமைதியான குடும்பத்திலே இந்த பேச்சை எடுத்தாலே சண்டை வருவதை உணர்ந்த அம்மா இதைப் பற்றிப் பேசுவதையே விட்டு விட்டாள்.

"டாண்...டாண்...டாண்...

கடிகாரம் காலை மணி ஒன்பது என்பதைக் காட்டியது. கய உலகிற்கு வந்த ஹரீஷ் தன் பார்வையை வாசற்படிப் பக்கம் செலுத்தியபடி தன் தந்தை வந்து

கொண்டிருப்பதைப் பார்த்து கண்களை மூடிக் கொண்டு இலேசாக முனக ஆரம்பித்தான்.

"ஹரீஷ் கண்ணா! என்னப்பா செய்ய றது?" பாசத்துடன் தன் தோளைத் தட விக் கொண்டிருக்கும் தந்தையைப் பார்த் தான் ஹரீஷ். அவர் முகத்திலே வேத னையும், கவலையும் போட்டி போட்டுக் கொண்டு வெளிப்பட்டன.

அந்தச் சமயம் டாக்டர் அங்கு வந் தார். கண்களால் ஹரீஷுக்கு ஜாடை காட்டிவிட்டுச் சொல்ல ஆரம்பித்தார்.

"ஜுரம் இப்படி விட்டு விட்டு வரு கிறதே என்று நேற்று இரத்தம் பரி சோதனை செய்தேன். இவன் உடம் பிலே வைரஸ் கிருமிகள் இருக்கு. அத னால்தான் இப்படிக் கஷ்டப்படறான் உங்க பையன்" என்றார் டாக்டர்.

" 'கிளி'ன்னு உன் பேரை எழுதச் சொன்னா ஏண்டா 'கிலி'ன்னு எழுதினே?"

"ஒரு பூனையைப் பார்த்துட் டேன் சார்!

—காவேரிப்பட்டணம் விசா



"அப்படியா! கொடிய வைரஸ் கிருமிகள் எப்படி இவனுக்கு வந்தன டாக்டர்?"

"அதையும் இவன்கிட்டே கேட் டேன். பாலாற்றுத் தண்ணியைக் குடிச் சானாம். நண்பர்களோடு சேர்ந்து அடிக் கடி அதிலே குளிப்பானாம்."

"டாக்டர். நாலு நாளா... என் மனசே சரியில்லை. தொழிற்சாலை வேலை யிலே கூட மனசைச் செலுத்த முடியலே. எனக்கு இருப்பது இவன் ஒருத்தன்தான். இவன் இப்படி அவதிப் படறதைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஒரே வேத னையாக இருக்கு. எவ்வளவு பணம் செலவழிஞ்சாலும் பரவாயில்லை டாக்டர். எப்படியாவது இவனை குணப் படுத்தி விடுங்க''– உண்மையான வேதனை அப்பாவின் குரலில் வெளிப் பட்டது.

"நல்ல காலம்! வியாதிக்கான கார ணத்தை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்து விட்டேன். தகுந்த மருந்து மாத் திரைகளைக் கொடுத்து குணப்படுத்தி விடலாம். கவலைப் படாதீங்க. ஆனா ஒன்னு... இனிமே ஹரீஷ்... பாலாற்றுத் தண்ணியைத் தொடவேகூடாது!"

"ஏண்டா ஹரீஷ்! நமக்குத்தான் வீட் டிலே தனியா கிணறு வெட்டி, குழாய் போட்டு... நல்லா தண்ணீராக இருக்க ஏற்பாடு செஞ்சிருக்கேனே? வாட்டர் பில்டர்லேதான் சுத்தமான காய்ச்சின நீர் உங்கம்மா ஊத்தி வைத்திருக்காளே? அதை விட்டு விட்டு நீ ஏண்டா பாலாற் றுத் தண்ணீய குடிச்சே? இனிமே வீட் டிலே தான் குளிக்கனும். வீட்டுத் தண் ணியத்தான் குடிக்கனும். தெரிந்ததா?"

ஹரீஷ். இப்பொழுது மெதுவாக ஆனால் உறுதியானகுரலில் பதில் சொன்னான்.

"டாடி, எனக்கு பாலாற்றுத் தண்ணி தான் பிடிச்சிருக்கு. அதைத்தான் குடிப் பேன்."

"அதைக் குடிச்சுத்தாண்டா உன் னோட ஆரோக்கியமே கெட்டுப்போச் சுன்னு டாக்டர் சொல்றார்."

"பாலாறிலே ஓடிக் கொண்டிருந்த சுத்தமான நீர் இப்படி மாசு அடையக் காரணம் என்ன டாடி?"

"அதுவா...?" டக்கென்று மேலே பேசாமல் நிறுத்தி கொண்டார் அப்பா.

"டாடி, உங்க கண்ணுக்கு நான் சின் னப் பையன்தான். ஆனால் என்னோட படிப்பு எனக்கு விழிப்பு உணர்ச்சியை கொடுத்திருக்கு. சில நாட்கள் நான் இந்த பாலாற்றுத் தண்ணீயை குடிச்சதுக்கே... எனக்கு இந்த மாதிரி உடம்பிலே நோய்க் கிருமிகள் புக ஆரம்பிச்சிருக்கே! இந்த தண்ணியைத்தானே நம்ப ஊர் ஜனங் கள் எல்லாம் பயன்படுத்தறாங்க? அவங் கள்லே எத்தனை பேரோட ஆரோக் கியம் கெட ஆரம்பிச்சிருக்குன்னு நம்ப டாக்டர் கிட்டேயே கேட்டுப்பாருங்க?"

"ஆமாம் சிவா! உன் பையனைவிட

இன்னும் கடுமையா கஷ்டப்படறவங்க தினம் நிறையப் பேர் எங்கிட்டே வந்து கொண்டுதான் இருக்காங்க. விஷயம் தெரிஞ்ச சிலர் உங்களைத் திட்டி சாபம் கூட கொடுத்து விட்டுப் போறாங்க" –

"டாடி. நான் படற மாதிரித் தானே மற்றவங்களும் அவதிப் படுவாங்க? நான் படற அவதியைப் பார்த்து உங்களுக்கு வருத்தமா இருப்பது போலத்தானே அவங்கவங்க வீட்டிலேயும் வருத்தப்படு வாங்க? நான் வேண்டுமானால் நீங்க சொன்னபடி நம்ப வீட்டுத் தண்ணியக் குடிச்சு ஆரோக்கியத்தோட இருக்கலாம். ஆனா, அந்தப் பாலாற்றுத் தண்ணியையே மலைபோல நம்பி இருக்கிறவங்க என்ன செய்வாங்க? அவங்க ஆரோக்கியம் அணு அணுவா பாதிக்க யார் டாடி காரணம்? எங்க தமிழ் ஆசிரியர் என்ன சொன்னார் தெரியுமா? உலகிலேயே நமக்குத் தெய்வம் நம்முடைய தாய்தான். அப்படிப்பட்ட தாய்க்குக்கூடப் பிழை செய்தாலும் செய்யலாம். ஆனால் குடிக்கின்ற நீருக்கு மட்டும் பிழை செய்யக் கூடாது என்று. ப்ளீஸ் டாடி, இந்த மாதிரி பாவச் செயலை செய்து தான் சம்பாதிக்க வேண்டுமா?"

அப்பா அதிர்ந்து விட்டார். ஆணி அடிப்பது மாதிரி எப்படிக் கேட்டு விட்டான்? கேள்வியில் உள்ள உண்மை அவருக்கு நிலைமையின் விபரீதத்தை உணர வைத்தது. தான் செய்து கொண் டிருக்கும் தவறின் கொடுமையை உணர ஆரம்பித்தார்.

"ஹரீஷ்! நீ சின்னப் பையனாக இருந்தாலும் என் கண்களைத் திறந் துட்டே. இனிமே இந்தப் பாதகச் செய லைச் செய்ய மாட்டேன். நான் செய்த பாவத்திற்குப் பிரயாச்சித்தமாக இன் றைக்கே இன்ஜினீயரைக் கூப்பிட்டு பாலாற்றில் கழிவு நீர் கலக்காமல் இருக்க ஏற்பாடு செய்யப் போறேன். பாலாற்றுத் தண்ணியையும் சுத்தம் செய்யப் போறேன்" என்றார் அப்பா.

சாதாரணக் காய்ச்சலை விஷக் காய்ச் சல் என்று சொல்லி பாலாற்றுத் தண் ணியைக் குடிக்காமலேயே குடித்ததாகப் பொய் சொல்லச் சொல்லி, தன் திட் டத்திற்கு ஒத்துழைத்த டாக்டருக்குக் கண்களாலேயே நன்றி தெரிவித்தான் ஹரீஷ்.



பள்ளிக் கூடம்

சின்னஞ் சிறியவர் – ஒன்று
சேர்ந்து படித்திடும்
அன்பின் இருப்பிடம் – கல்வி
அறிவின் பிறப்பிடம்!


எண்ணும் எழுத்தையும் – நன்கு
எழுதப் படிக்கவும்
கண்ணும் கருத்துடன் – என்றும்
கற்றுக் கொடுத்திடும்!

அண்டும் மதக்கறை – சாதி
அழுக்கை வெளுத்திடும்!
மண்டும் இருட்டெனும் – பாழும்
மடமை ஒழித்திடும்!

பண்பும், ஒழுக்கமும் – நல்ல
பணிவும், அடக்கமும்,
உண்மை, உழைப்புடன் – கடமை
உணர்வும் புகட்டிடும்!

இன்று இழைத்திடும் – தவறை
இடித்ததுத் திருத்திடும்!
என்றும் சிறப்புடன் – வாழும்
இலக்கை வகுத்திடும்!

–தளவை இளங்குமரன்



கொடுத்துவிடு!

இராமு என்ற ஏழைச் சிறுவன் பசி மிகுதியால் அழுது கொண்டிருந்தான். உண்ண உணவு தேடினான். கிடைக்கவில்லை. மரத்தடியில் படபடத்த ஒரு காகிதம் அவன் கண்ணில் பட்டது. அதில் ஏதாவது படம் வரையலாமே என்று எழுதுகோலைத் தேடினான். அவனது துரதிர்ஷ்டம், அதுவும் கிடைக்கவில்லை.

இராமுவின் நிலையைக் கண்டு ஒரு தேவதை இரக்கம் கொண்டது. ஒரு மந்திரக்கோலை வரவழைத்துப் போட்டுவிட்டு மாயமாய் மறைந்தது!

சிறுவன் மரத்திலிருந்து திடீரென்று கீழே விழுந்த மந்திரக்கோலை எடுத்தான். அதைக் கொண்டு காகிதத்தில் ஒரு வாத்தின் படத்தை வரைந்தான். என்ன ஆச்சரியம்! அது பொன் வாத்தாக மாறிவிட்டது! சிறுவன் அதிசயித்து, ஒரு முட்டையின் படத்தை வரைந்தான். அது பொன் முட்டையாக மாறியது! தனக்குக் கிடைத்த மந்திரக்கோலின் துணையுடன் கோழி, முட்டை, காய்கறிகளின் படங்களை வரைந்து கிராமத்து மக்களுக்குக் கொடுத்து அவர்களது பசியைப் போக்கினான் சிறுவன்.

இந்த அதிசயச் செய்தி காட்டுத்தீ போலப் பரவி அவ்வூர் மன்னனுக்கு எட்டியது. மன்னர், "அச்சிறுவனை உடனே அரண்மனைக்குக் கொண்டு வாருங்கள்" என்று வீரர்களுக்குக் கட்டளையிட்டார். காவலர்கள் மறுநாள் அச்சிறுவனைப் பிடித்துச் சென்று மன்னன் முன் நிறுத்தினர்.

"தம்பி, இம்மாதிரி மந்திரக்கோல் அரசனுக்கே சொந்தமானது. அதை என்னிடம் கொடுத்துவிடு" என்றார் மன்னர்.


இராமு மறுத்துவிட்டான். கோபம் அடைந்த மன்னன், "இந்தத் திமிர் பிடித்த சிறுவனைச் சிறையில் அடைத்துப் பூட்டுங்கள்" என்று ஆணையிட்டார்.

காவலர் சிறுவனைச் சிறையில் தள்ளிப் பூட்டினர். சிறிதுநேரம் சென்றபின் சிறுவன் மந்திரக்கோலால் சாவி ஒன்றை வரைந்தான். அதைக் கொண்டு பூட்டைத் திறந்து தப்பித்து ஓடினான். காவலாளிகள் குதிரையில் ஏறித் துரத்தி வந்தனர். காவலாளிகளிடமிருந்து தப்பிக்க சிறுவன் மந்திரக் கோலால் குறுக்கே ஓர் ஆற்றை வரைந்தான். அது உடனே உண்மையான ஆறாக மாறியது. காவலாளிகளால் அவனைப் பிடிக்க முடியவில்லை. சிறுவன் மந்திரக் கோலைக் கொண்டு மக்கள் பசியைத் தீர்த்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான்.

— கே. பாஸ்கர், மலேஷியா.

(இந்தியாவில் தொடர்பு முகவரி தரப்படவில்லை.)

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி,
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.



விற்பனைக்கு வந்துவிட்டது!
மேகலா காமிக்ஸ்
பாலைவன பூமியில்
காரிகன்
சுமேரா நாட்டின் சுபீட்சம் காண
எதிரிகள் கூடாரத்துக்குள்
அதிரடி நடத்தும் சித்திரக்கதை!
எங்கே அந்த வைரம்?
ஆகஸ்ட் வெளியீடு
வித்தியாசமான சூழலில்
வியப்பூட்டும் சம்பவங்கள்!
காணாமல் போன வைரம் கைமாறி கைமாறி ஒவ்வொருவரிடம்
இருந்தும் மறைவது பரபரப்பானது!
எதிர்பாருங்கள்
உலகத்தைப் பரபரப்பில் ஆழ்த்திய
ஜேம்ஸ் பாண்ட் 007 மீண்டும் வருகிறார்.
மேகலா காமிக்ஸ் மூலம் உங்களைச் சந்திக்கிறார்!
உங்கள் பிள்ளைகளின் படிப்பார்வம்
வளர்க்க வாங்கிக் கொடுங்கள்
மேகலா காமிக்ஸ்!
மேகலா காமிக்ஸ், 96, காம்தார் நகர், மகாலிங்கபுரம். சென்னை - 600 034

GOKULAM (Tamil) August '95 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper in Sri Lanka

கீச்சிட்டுக் குரலெழுப்பும் மழலைச் செல்வங்களுக்கு எலெக்ட்ரானிக் பக்க வாத்தியங்கள்.

இதோ, அத்தனையும் இங்கே! பன்னாட்டு ரகங்கள். பாதுகாப்பான
எலெக்ட்ரானிக் பொம்மைகள். பாடும், ஆடும், நடக்கும், பேசும், கீச்சிடும்,
தாவி ஏறும் – மம் டாய்ஸ் அளிக்கும் பொம்மைகள். உங்கள் வீட்டின்
அந்த இளஞ்சிட்டுக்கு முற்றிலும் ஏற்றவை.



ராப் டான்ஸர்
எதிர்கால வெற்றி நாயகர்களுக்கு
எளிதில் தரும் உற்சாகம்.






பர்த்டே கேக் பியானோ
அந்தப் பிஞ்சு நெஞ்சத்திற்கு
பிறந்தநாள் வாழ்த்து இசைகள்.



பவர் சாசர் டாப்
விண்வெளி யுகத்தின் சுழற்சி.
புதுயுகச் சிறார்களுக்கு மகிழ்ச்சி.



பியானோ பென்சில் பாக்ஸ்
மழலை மொழி பாடுவோர்க்கு
இன்னிசை ஒலி.



ராப் கேசட்
வருங்கால மைக்கேல் ஜாக்ஸன்
சின்னப் பாதங்களும் தாளம் போட
இயக்கும் இசை.

MUM TOYS

HEAD OFFICE: M.M.Toys Industries Ltd., 5, Chandra Bagh Avenue, Mylapore, Madras-4. Ph: 855151, Fax: 843919.

8018.96